# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 20 திங்கட்கிழமை (06.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 010


# பிரிட்டனில் ஜனாதிபதிக்கு ஏற்பட்ட அசௌகரியத்தை எந்த ஒரு நாடும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது



## பிரதமர் நேற்று அறிக்கை

கொழும்பு, டிசெம்பர்.06

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இலக்கு வைத்து பிரிட்டனில் மேற்கொள்ளப்பட்ட புலிகள் இயக்க ஆதரவாளர்களின் எதிர்ப்புப் போராட்டத்தை ஜனநாயகத்தை விரும்பும் உலகின் எந்தவொரு நாடும் பார்த்துக்கொண்டு மௌனம் சாதிக்க முடியாது என பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பிரதமர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் சங்கம் விடுத்திருந்த அழைப்பை மக்கள் தலைவரான ஜனாதிபதி ஏற்றுக் கொண்டது அந்தப் பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்த கௌரவமாகும். இருந்தும், ஜனாதிபதிக்கு இழைக்கப்பட்ட இடையூறு மூலம் பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் குழுவொன்று சர்வதேச ரீதியில் செயற்படுகிறது என்பது தெளிவாகின்றது. இதுபோன்ற சம்பவங்களால் இலங்கை இன ரீதியாக மேலும்

(28 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் அடுத்த வாரம் இலங்கை வருகிறார்

கொழும்பு, டிச.06

பிரிட்டிஷ் வெளிவிவகார (தெற்காசிய விவகாரங்கள்) அலிஸ்டெயார்டர்டினின் அடுத்த வாரமளவில் இலங்கை வருவார் என பிரிட்டிஷ் தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாளை பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் (தெற்காசிய விவகாரங்கள்) இலங்கை வரவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் பிரிட்டனில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வேலைப்பளு காரணமாகவே நாளை இலங்கை வரவிருந்த பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சரின் (தெற்காசிய விவகாரங்கள்) விஜயம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

## அரசின் உதாசீனப் போக்கு தொடர்ந்தால் புலிகள் அமைப்பு மீண்டும் தலைதூக்கும்

### சபையில் விஜித ஹேரத் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.06

''இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பில் அரசு எந்தவொரு அக்கறையும் செலுத்தாமையினால் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச ஆதரவாளர்கள் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளனர். இந்த நிலை தொடர்ந்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் தலைதூக்கும்''

- இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்றுத் தெரிவித்தார்.

''சுகாதாரத் துறைக்கென இந்த அரசு ஆறு அமைச்சர்களை நியமித்துள்ளது. இருந்தும் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதாரத்துக்கென ஒதுக்கியுள்ள நிதியிலிருந்தே இவர்கள் சுகாதாரம் குறித்து எவ்வளவு தூரம் கரிசனை கொண்டுள்ளார்கள் என்பது புலனாகிறது.''

''2011ஆம் ஆண்டுக்கென சுகாதாரத்துறைக்கு 8,000 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கு 1,500 கோடி ரூபா செலவிடப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து தரமற்ற மருந்து வகைகளை இறக்குமதி செய்திருத்தமை கடந்த காலங்களில் நிரூபிக்கப்பட்டிருந்தது.

(28 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளம் காரணமாக 4,450 குடும்பங்கள் வன்னிப் பகுதியில் மீண்டும் இடம்பெயர்வு

கொழும்பு, டிச.06

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக்குடியமர்த்தப்பட்ட 4,450 குடும்பங்கள் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மீண்டும் இடம்பெயர்ந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 3,330 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,120 குடும்பங்களும் இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளன.

இதேவேளை, கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதால் கண்டாவளை, முரசுமோட்டை ஆகிய பகுதிகளிலுள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற் பயிர்ச் செய்கை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. அதேவேளை, மருதநகர் பன்னங்கண்டி பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால்

(28 ஆம் பக்கம் பார்க்க)

### பண்ணைப் பாலம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதால்

## தீவுப் பகுதிக்கான போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் நேற்று முதல் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ.06

தீவுப்பகுதிக்கான போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை நேற்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தெற்கில் இருந்து உல்லாசப் பயணிகளுடன் வரும் பஸ்களும் பண்ணை ஊடாக செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக பண்ணைப் பாலம் மோசமாக பாதிக்கப்பட்டதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(28 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...


3 உள்நாடு
வெள்ள நிலை மோசம் இருவர் பலி

5 குடாநாடு
அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உசார் நிலையில்

21 உலகம்
தீவிரவாதிகளை ஒழிக்க ஒபாமா கூவுரை


## லண்டனில் நடைபெற்ற போராட்டம் இலங்கைக்கு முறையான எச்சரிக்கை

### ரொஹான் குணரட்ன தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.06

விடுதலைப் புலிகளின் பிரசாரங்களை முறியடிப்பதற்கு வெளிவிவகார அமைச்சு கூடுதல் முனைப்புக்காட்ட வேண்டும் என்று சர்வதேச பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் லண்டனில் நடைபெற்ற போராட்டம் இலங்கை வெளிவிவகார அமைச்சிற்கு ஒரு சிறந்த எச்சரிக்கை சமிக்ஞையாகக் கருதப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்பாடல் மற்றும் பிரசாரம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தக் காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற உண்மை நிலைமை குறித்து சர்வதேச சமூகத்திற்கு சரியான

(28 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்குப் பகுதிக்கான போக்குவரத்து நேற்றுத் துண்டிப்பு

பருத்தித்துறை, டிசெ.6

வடமராட்சி கிழக்குக்கான போக்குவரத்துகள் யாவும் நேற்றுத் துண்டிக்கப்பட்டுள்ளன.

வடமராட்சியையும் வடமராட்சி கிழக்கையும் இணைக்கும் மருதங்கேணி பாலத்துக்கு மேலாக வெள்ளம் பாய்வதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்த பிரதேச மக்களுக்கு படகு மூலம் அத்தியவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் மீளக்குடியேறிய ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி, தாளையடி, செம்பியன்பற்று ஆகிய இடங்களை சேர்ந்தவர்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் அந்தப் பிரதேச (28 ஆம் பக்கம் பார்க்க)


நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு.....

சொல்பெக் EW 050



ஹேலீஸ் கா சியாறை 47, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 2221292 Hayleys

யசோ மோட்டோஸின் ஜப்பான், சீனா வண்டிகளின் புதிய விலைக்கழிவுகள்.

ஜப்பானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வண்டிகள் *MD 90* புதியரக *(New Model) 24UP, 23UP, 22UP* மற்றும் *C50 HONDA* மற்றும் *YAMAHA* வண்டிகள், சீனாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட *Super Cub (90cc)*



யசோ மோட்டோஸ் & ஹாட்வெயர்ஸ் 168, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 7566


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வன்னியில் கண்ணிவெடிகள் அகற்ற நோர்வே 237 மில்லியன் ரூபா உதவி



கொழும்பு, டிசெ.06

வடக்கில் மேற்கொள்ளப் பட்டு வரும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு நோர்வே அரசாங்கம் தொடர்ந்தும் உதவிகள் வழங்கும் என இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹில்டி ஹரவடாஸ்ற் தெரிவித்துள்ளார்.

நோர்வே அரசாங்கத்தினால் சுவிஸ் நிறுவனமொன்றும், ஹலோரஸ்ட் நிறுவனத்திற்கும் 237 மில்லியன் ரூபா உதவி வழங்குவதற்கான ஒப்பந்தம் இம்மாதம் இரண்டாம் திகதி கைச்சாத்திடப்பட்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

சுவிஸ் நிறுவனத்திற்கு 125 மில்லியன் ரூபாவும், ஹலோ ரஸ்ட் நிறுவனத்திற்கு 112 மில்லியன் ரூபாவும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் வழங்கப்படுகின்றது.

நோர்வே அரசாங்கம் 2003ம் ஆண்டிலிருந்து மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையை இரண்டு இந்திய அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் இலங்கையைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனம் ஆகியவற்றின் மூலம் மேற்கொண்டு வருகின்றது.

இதற்கு மேலதிகமாகவே இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன எனத் தெரிவித்தார்.

இலங்கை அரசின் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் செயல் திட்டத்திற்கு அமைவாகவே இந்த இரண்டு நிறுவனங்களும், முன்னுரிமைப்படுத்தப்பட்ட மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பணிகளை மேற்கொள்ளும்.

இவ்வாறான மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு உதவியதன் முக்கிய நோக்கம் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-15)

# காணாமற் போனோர் குறித்து கவனயீர்ப்புப் போராட்டம்

கொழும்பு, டிசெ.6

சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு காணாமற்போனவர்கள் தொடர்பான கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நடத்த காணாமற்போனோரை தேடியறியும் குழு ஏற்பாடு செய்துள்ளது.

அரசு காணாமல் போனோர் தொடர்பாக இதுவரை காலமும் தகுந்த பதிலொன்றை வழங்காத தன் காரணத்தை முன்வைத்து அரசுக்கு அழுத்தத்தை கொடுப்பதற்காகவே இப்போராட்டம் எற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு ஆதரவு கொடுக்கும் வகையில் மனித நேயம் கொண்டவர்கள் மற்றும் மனித நேயம் கொண்ட அமைப்புக்களையும் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு காணாமற்போனோரை தேடியறியும் குழுவின் இயக்குநர் சுந்தரம் மகேந்திரன் கேட்டுள்ளார். (ற)

# வாகன விபத்தில் இருவர் பலி

கொழும்பு, டிசெ.06

மாவனல்லையில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்தனர். ஆறுபேர் காயமடைந்த நிலையில் வத்துப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வேகமாக வந்த காரும், ஒட்டோ ஒன்றும் மீரிகம பஸ்யால வீதியின் மாவனல்லை சந்தியில் ஒன்றுடன் ஒன்று மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

# மானிப்பாயில் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது பொலிஸார் வழக்குத்தாக்கல்

மானிப்பாய், டிசெ.06

சட்டவிரோத செயல்களை மோப்பம் பிடித்து வரும் மானிப்பாய் பொலிசார் சம்பந்தப்பட்டவர்களை கையும்மெய்யுமாக பிடித்து நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்து வருகின்றனர்.

கடந்த காலங்களைப் போல் தற்போதும் சிலர் சட்ட விரோத செயல்களிலும் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் சமூகத்திற்கும் மட்டுமல்ல நாட்டிற்கும் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே இதனை கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள மானிப்பாய் பொலிசார் அனுமதியின்றி டிரம் ஏற்றிச் சென்றோர், ஆடு வெட்டி பங்கு போட்டோர், ஆமை இறச்சி விற்றவர்கள் எனச் சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டவர்களை கையும் மெய்யுமாக பிடித்து அவர்கள் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (201-115)

# ஆணைக்குழுவின் குச்சவெளி அமர்வில் 146 பேர் நேற்று சாட்சியமளித்தனர்

திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலகத்தில் இன்று காலை 9.30 மணியளவில் ஆரம்பமான நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் பிற்பகல் 2 மணியளவில் நிறைவுபெற்றன.

இதன்போது 146 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் 53 பேர் நேரடியாக ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்துள்ளனர். ஏனையோர் எழுத்து மூலமாக சாட்சியமளித்ததாக ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி சில்வா தெரிவித்தார்.

யுத்த நடவடிக்கைகளின் போது காணாமற் போனவர்கள் குறித்தும் மீள்குடியேற்றத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்துமே இதன்போது அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதில் சாட்சியமளித்த தென்னமரவாடியைச் சேர்ந்த கணேஷ் என்பவர் தான் 1985 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்றதாகவும் தன்னுடைய 1500 ஏக்கர் நிலப்பரப்பு தற்போது படையினர் வசமுள்ளதாக அவ்விடத்தில் தன்னை மீளக் குடியமர்த்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# காரைநகரைத் தனிக் கோட்டமாக்கும் முயற்சி ஈ.பி.டி.பி. எதிர்ப்பால் நேற்றும் தோல்வி

காரைநகர், டிசெ. 06

காரைநகரைத் தனிக் கல்விக் கோட்டமாக்கும் முயற்சி மீண்டும் ஒரு தடவை தோல்வி அடைந்துள்ளது. கோட்டத்துக்கான தனி அலுவலகத்தை ஆரம்பிப்பதற்கு நேற்று எடுக்கப்பட்ட முயற்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) கட்சியின் எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டது.

ஊர்காவற்றுறை கல்விக் கேட்டத்துடன் இணைந்திருக்கும் காரைநகரைத் தனியாகப் பிரித்து, அதனைத் தனியான கல்விக் கோட்டமாக மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டது.

இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெறுவதாக இருந்தது. காரைநகர் கோட்டக் கல்வி அலுவலகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் செயற்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

தீவகக் கல்வி வலயப் பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு கல்விக் கோட்டத்தை ஆரம்பித்து வைக்க இருந்தார். நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள இருந்தார்.

ஆனால், அரசில் அங்கம் வகிக்கும் தமது கட்சியைச் சேர்ந்தவரையும் அழைக்காமல் நிகழ்வை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் அதனைத் தடுத்து நிறுத்தும்படி ஈ.பி.டி.பியினர் ஆளுநரிடம் கோரியதை அடுத்து நேற்றைய நிகழ்வு கைவிடப்பட்டது என நம்பகமாகத் தெரியவந்தது.

''நேற்று நடைபெற இருந்த நிகழ்வு இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது. 2002ஆம் ஆண்டே காரைநகர் கல்விக் கோட்டத்தை ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்பட்டது. அப்போதும் அது தடைப்பட்டிருந்தது. மீண்டும் இப்போதும் தடைப்பட்டுள்ளது'' - என்று தெரிவித்தார் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட விவாதம் நடந்துகொண்டிருப்பதால் தான் கொழும்பில் இருக்கிறார் என்று தெரிவித்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், நேற்றைய நிகழ்வில் தான் பங்கேற்கத் திட்டமிட்டிருக்கவில்லை என்று தெரிவித்தார்.

''மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனின் முயற்சியால் 2002ஆம் ஆண்டில் காரைநகர் தனியான பிரதேச செயலர் பிரிவாக மாற்றப்பட்டது. அப்போதே அதற்கான தனிக் கல்விக் கோட்டமும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். 8 வருடங்களாக அது நடைபெறாமல் இருப்பது கல்வித் திணைக்களத்தின் குறைபாட்டாலேயே ஆகும். இப்போதும் அவர்கள் அதனைச் செய்வதற்கு முன்வராதது கவலைக்குரியது. இதனால் பாதிக்கப்படப் போவது பொதுமக்களே'' - என்றார் விஜயகலா.

இதற்கிடையே நேற்றைய நிகழ்வை நிறுத்துமாறு தீவக கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்த ஆளுநர் செயலகம், மீண்டும் மற்றொரு திகதியில் நிகழ்வு நடத்தப்படும்போது அதில் ஆளுநரும் கலந்துகொள்வார் என்று தெரிவித்துள்ளது. (உ-15)

கிளிநொச்சியில் மீள் குடியேறிய

# முஸ்லிம் மக்கள் பிரச்சினை குறித்து இன்று அரச அதிபருடன் பேச்சு

யாழ்ப்பாணம், டிசெ.06

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியேறியுள்ள முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனை இன்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ள தாக யாழ். மாநகர சபை உறுப்பினரும் யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களின் மக்கள் பணிமனைகளின் தலைவருமான மௌலவி சுபியான் தெரிவித்தார்.

அவர் தெரிவித்திருந் தவை வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியேறியுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றுக்கு தீர்வு காணும் வழி முறைகள் தொடர்பாகவும் அரச அதிபரை அவரது செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளேன்.

இந்தச் சந்திப்பு இன்று பிற்பகல் மூன்று மணிக்கு இடம்பெறவுள்ளது. அதற்கு முன்னதாக அங்குள்ள முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளை கிளிநொச்சி நகரில் உள்ள பள்ளிவாசலில் சந்தித்துக் கலந்துரையாடி குறைநிறைகளை கேட்டறியவுள்ளேன்.

கிளிநொச்சியின் நாச்சிக்குடா, பள்ளிக்குடா, திருநகர், கிளிநகர், ஐம்பத்தைந்தாம் கட்டை உள்ளிட்ட பகுதிகளில் 300 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் தற்போது மீளக்குடியேறி வருகின்றன. (ஐ-14)

# ஈ.பி.டி.பியினர் உணவுப்பொதி வழங்கினர்

யாழ்ப்பாணம், டிசெ.06

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கோப்பாய் பிரதேச மக்களுக்கு ஈ.பி.டி.பியினரால் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கோப்பாய் சூசையப்பர் கோயிலடி மற்றும் கோப்பாய் மத்தி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கே சமைத்த உணவு வழங்கப்பட்டன.

மேற்படி பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து சூசையப்பர் சனசமூக நிலையம், முத்துமாரி அம்மன் கோயில் மற்றும் உருப்பிராய் நலன்புரி சனசமூக நிலையங்களில் தற்காலிகமாக தங்கியுள்ளனர். இம் மக்களுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் நேற்று 600 பேருக்கு உணவுப் பொதிகளை வழங்கினர். (ஜ)

# கறுப்புப் பட்டியலில் டக்ளஸின் பெயரும் அதனால் பிரிட்டன் செல்ல விசா இல்லை

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரான டக்ளஸ் தேவானந்தாவை பிரிட்டன் அரசாங்கம் கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது.

இதன் காரணமாக அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பிரிட்டனுக்குச் செல்வதற்கு விசா வழங்கப்படவில்லை.

கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசா அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார்.

ஆயினும் அவரது பெயர் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதால் பிரிட்டன் தூதரகம் விசா வழங்க மறுத்துவிட்டது.

இதனாலேயே மஹிந்த ராஜபக்ஷவுடன் அவர் பிரிட்டன் செல்ல முடியவில்லை எனக் கூறப்படுகின்றது.

ஏற்கனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமெரிக்காவும் விசா வழங்க மறுத்திருந்தது.

அதன்காரணமாக கடந்த செப்ரெம்பர் மாதம் ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் சென்ற மஹிந்த ராஜபக்ஷவுடனும் அமைச்சர் டக்ளஸால் பயணத்தை மேற்கொள்ள முடியாது போயிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜனாதிபதி மஹிந்தவுடன் அமைச்சர்கள், அதிகாரிகள் என்று சுமார் 40 பேர் வரை பிரிட்டன் சென்றிருந்தனர். அவர்களில் பலருக்கும் பிரிட்டன் தூதுரகம் பலத்த இழுபறிகளின் பின்னரே - கடைசி நேரத்தில் - விசாவை வழங்கியிருந்தது.

இதன்காரணமாக மஹிந்த ராஜபக்ஷ சென்ற விமானம் குறிப்பிட்ட நேரத்தை விடத் தாமதமாகவே புறப்பட்டுச் சென்றதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமான காலநிலையால் நாட்டில் இருவர் பலி; 62, 068 பேர் பாதிப்பு

கொழும்பு, டிசெ.06

நாட்டில் நிலவும் மோசமான காலநிலை காரணமாக இதுவரை இரண்டு பேர் பலியாகியுள்ளதாகவும் 20ஆயிரத்து336 குடும்பங்களைச் சேர்ந்த 62ஆயிரத்து 68 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் 6,244 பேர் 56 முகாம்களில் தங்கியிருப்பதாகவும் அந்நிலையம் மேலும் தெரிவித்தது.

மாத்தறை மற்றும் வெலிமடை பிரதேசங்களிலேயே இருவர் வெள்ளத்தில் மூழ்கிப் பலியாகியுள்ளனர். அத்துடன் மேலும் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

அதேவேளை மோசமான காலநிலை காரணமாக 188 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதாகவும் 1,237 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளதாகவும் அந்நிலையம் தெரிவித்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக 19 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டை, நுவரெலியா, புத்தளம், கம்பஹா, கண்டி, வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்டோருக்காக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. கம்பஹாவில் 7,533 குடும்பங்களும், யாழ்ப்பாணத்தில் 3,330 குடும்பங்களும், புத்தளத்தில் 2,225 குடும்பங்களும் வவுனியாவில் 1,405 குடும்பங்களும் மன்னாரில் 1218 குடும்பங்களும் கிளிநொச்சியில் 1,120 குடும்பங்களும் ஹம்பாந்தோட்டையில் 830 குடும்பங்களும் குருநாகலில் 194 குடும்பங்களும் கண்டியில் 78 குடும்பங்களும் மோசமான காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ரம்புக்கன- கடுகன்னாவ, பலான - இஹலகோட்டே ரயில்பாதைகளில் கற்பாறைகள் உருண்டு வீழ்ந்துள்ளதால் மலையகத்துக்கான ரயில்சேவையிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு; மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவிப்பு

கொழும்பு, டிசெ.06

தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக, பல நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் நேற்று திறந்துவிடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அடை மழை காரணமாகவே லக்ஸபான, விமலசுந்தர மற்றும் விக்டோரியா ஆகிய நீர்த் தேக்கங்களின் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் கூறினர். விக்டோரியா நீர்த்தேக்கத்தின் 4 வான்கதவுகளும் லக்ஸபான நீர்த்தேக்கத்தின் இரு வான்கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன.

நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ள நிலையில், பொதுமக்களை அவதானமாக இருக்குமாறும் அந்த அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

இதற்கிடையில், கொழும்பில் கடந்த 24 மணித்தியாலங்களில் 116 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## கற்பாறை வீட்டின் மேல் வீழ்ந்து வயோதிபப் பெண் மரணம்

கண்டி, டிசெ.06

கண்டி கட்டுகஸ்தோட்டை இனிகலை என்னுமிடத்தில் வீடு ஒன்றின் மீது மண் கலந்த கற்பாறை திடீரென விழுந்ததனால் 72 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை 1.30 மணியளவில் வீட்டில் இவர் தூங்கிக்கொண்டிருந்தபோது வீட்டின்மீது குறித்த கற்பாறை விழுந்துள்ளது. இதன்போது அப்துல் மஜீட் தாயிம் நோனா என்ற வயோதிபப்பெண்ணே உயிரிழந்தவராவார். இவருடன் வீட்டில் இருந்த இவரது உறவினர்கள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

இப்பிரதேசத்தில் மேலும் நான்கு வீடுகள் இதுபோன்று பாறை விழும் அபாய நிலையில் உள்ளதாகவும் அவ்வீடுகளில் வசிப்பவர்களை வேறு இடத்தில் குடியமர்த்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பிரதேச கிராம அதிகாரி ஆர்.எம்.கெமுனு தெரிவித்தார். கட்டுகஸ்தோட்டை பொலிஸார் இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (எ)

## முல்லைத்தீவு நிலைமை குறித்து நோர்வே தூதர் நேரடியாக ஆராய்வு



கிளிநொச்சி, டிசெ.06

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹில்ட் ஹறலட்ஸ்ரட் வன்னி முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கடந்த புதன்கிழமை சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

வன்னி, முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக் குடியேறிய மக்களை நேரடியாக சந்தித்து கலந்துரையாடியுள்ளார். மக்களுக்கான உதவிப் பொருள்கள் இதன்போது வழங்கப்பட்டன.

மேலும் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் வன்னி, முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களையும் அவர் ஆய்வு செய்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகனை சந்தித்து அங்குள்ள மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள் குடியமர்வு நடவடிக்கைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டுள்ளார். [illegible]

## சப் இன்ஸ்பெக்டர் பதவிக்கான பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.06

பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் பதவிக்கு ஆள்களை சேர்ப்பதற்காக கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நேற்று நடைபெறவிருந்த எழுத்துமூலமான பரீட்சை இம்மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். இன்று நடைபெறவிருந்த பரீட்சைக்காக வழங்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ள பரீட்சைக்கும் பயன்படுத்த முடியுமெனவும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பிலுள்ள அசோகா வித்தியாலயத்திலும் யாழ். மத்திய கல்லூரியிலும் எதிர்வரும் 11ஆம் திகதி மேற்படி பரீட்சை நடைபெறவுள்ளது. (எ)

## நெடுந்தீவில் வெள்ளம்; மக்கள் பாதிப்பு

தொடர்ச்சியாக பெய்து வரும் கனத்த மழை காரணமாக நெடுந்தீவுப் பகுதியில் உள்ள அனேக வீடுகளில் மழை வெள்ளம் புகுந்து கொண்டது. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தீவின் தென் பகுதியில் உள்ள தரவை நிலங்கள் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றது.

இப் பகுதிகளில் தன்னிச்சையாகத் திரியும் குதிரைகள் உட்பட ஆடு, மாடுகள் வெள்ளத்தினால் இறக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ-111)

## விளையாட்டு பயிற்சி முகாம் ஒத்திவைப்பு

வலிவடக்கு, டிசெ.06

வடமாகாண கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் இன்று மல்லாவியில் நடைபெற இருந்த விளையாட்டு பயிற்சி முகாம் நாளைமறுதினம் 8ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் காலநிலை சீரின்மையால் இப் பயிற்சி முகாம் ஒத்திவைக்கப்பட்டதாக வட மாகாணக் கல்வித் திணைக்கள உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன் தெரிவித்துள்ளார். (ஒ-86)

## கணித பாடக் கருத்தரங்கு 9ஆம் திகதிக்கு மாற்றம்

திருநெல்வேலி ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தால் இன்று நடத்தவிருந்த விஞ்ஞான பாட இலவச கருத்தரங்கு எதிர்வரும் வியாழக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளதாக அந்நிலையத் தலைவர் அறிவித்துள்ளார். [illegible]

வெற்றி விழா



இலங்கை கடற்படையின் 60ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சி நேற்று கடற்படைத் தலைமையகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக்கண்காட்சியை மக்கள் பார்வையிடுகின்றனர்.

## கடற்படை தலைமையகத்தில் கண்காட்சி

கொழும்பு, டிசெ.06

இலங்கை கடற்படையின் 60ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 9ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில் கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சியொன்று கடற்படைத் தலைமையகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடற்படையினரின் உபகரணங்கள், ஆயுதங்கள், படகுகள் என்பன இந்தக் கண்காட்சியில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களும் இதில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா கடற்படையின் 60 ஆவது ஆண்டுவிழா

## வெளிநாடுகளின் தளபதிகள் சிலர் கொழும்பு வருவதில் நெருக்கடி நிலை

### கொரியக் குடாக் கடலில் போர்ப் பதற்றமே காரணம்

கொழும்பு, டிசெ.06

கொரியக் குடாக் கடலில் தோன்றியுள்ள போர்ப்பதற்றம் காரணமாக இலங்கைக் கடற்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் பங்கேற்கவிருந்த சில நாடுகளின் கடற்படைத் தளபதிகள் தமது இலங்கைக்கான பயணத்தை நிறுத்தி வைத்துள்ளனர்.

இதுதொடர்பாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திசார சமரசிங்க தகவல் வெளியிடுகையில், எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கைக் கடற்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் பங்கேற்க இங்கு வரவிருந்த தென்கொரியா, பிலிப்பைன்ஸ், மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளின் கடற்படைத் தளபதிகள் தமது பயணத் திட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

கொரியக் குடாக்கடலில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றத்தை அடுத்தே அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர்.

ஆயினும் அவுஸ்ரேலியா, பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், மாலைதீவு ஆகியவற்றின் கடற்படைத் தளபதிகள் திட்டமிட்டபடி நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

அதேவேளை கனடா, சீனா, பிரான்ஸ், இந்தோனேசியா, ஈரான், பிலிப்பைன்ஸ், ரஷ்யா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, தாய்லாந்து, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளின் கடற்படைகள் சார்பில் பிரதிநிதிகள் வருகைதரவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பங்கேற்பதற்காக வெளிநாடுகளில் இருந்து 300 தொடக்கம் 400 வரையான அதிகாரிகளும், 2500 கடற்படையினரும் இலங்கை வரவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## தாய்லாந்தில் கைதான ஈழத் தமிழர்கள் கட்டம் கட்டமாக நாடு கடத்தல்

### இரு வாரங்களில் 50 பேர் கொழும்பு திரும்பினர்

பாங்கொக், டிசெ.06

தாய்லாந்தில் வைத்து கைது செய்யப்பட்ட ஈழத் தமிழர்கள் கட்டம் கட்டமாக இலங்கைக்கு நாடு கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் சுமார் 50 ஈழத்தமிழர்கள் கொழும்புக்கு நாடு கடத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாய்லாந்தின் குடிவரவுச் சட்டங்களை மீறி அங்கு தங்கியிருந்ததாகக் கூறி இரண்டு பெரும் சுற்றிவளைப்புகளின் போது சுமார் 200 வரையான ஈழத்தமிழர்களைத் தாய்லாந்து காவல்துறை கைது செய்திருந்தது.

மூன்றாவது நாடு ஒன்றில் அடைக்கலம் தேடும் நோக்கிலேயே அவர்கள் தாய்லாந்தில் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

இவர்களில் 50 பேர் வரையில் கடந்த இரண்டு வாரங்களில் இலங்கைக்கு கட்டாயமாகத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

ஏனையோர் பாங்கொக்கில் உள்ள தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அவசரகாலக் கடவுச்சீட்டு மற்றும் விமானப் பயணச்சீட்டு ஆகியவற்றை ஒழுங்கு செய்து கொடுக்கும் முயற்சியில் தாய்லாந்து அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, இலங்கைத் தூதரகமும் இவர்களைக் கொழும்புக்குக் கொண்டு வரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஆயினும் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர்கள் தமது குடும்பத்துடன் இணைந்து கொண்டனரா என்பது பற்றிய தகவல் ஏதும் வெளியாகவில்லை. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத்துறைக்கு 6 அமைச்சர்கள் ஆனால் ஒதுக்கப்பட்ட நிதி போதாது

## விஜித ஹேரத் எம்.பி. சாடல்

கொழும்பு, டிசெ.06

''சுகாதாரத் துறைக்கென இந்த அரசு ஆறு அமைச்சர்களை நியமித்துள்ளது. இருந்தும் இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் சுகாதாரத்துக்கென ஒதுக்கியுள்ள நிதியிலிருந்தே இவர்கள் சுகாதாரம் குறித்து எவ்வளவு தூரம் கரிசனை கொண்டுள்ளார்கள் என்பது புலனாகிறது.''

ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார். ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை பத்தரமுல்ல பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

''2011ஆம் ஆண்டுக்கென சுகாதாரத்துறைக்கு 8,000 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கு 1,500 கோடி ரூபா செலவிடப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து தரமற்ற மருந்து வகைகளை இறக்குமதி செய்திருத்தமை கடந்த காலங்களில் நிரூபிக்கப்பட்டிருந்தது.

ஔடதக் கொள்கையொன்று இல்லாத காரணத்தால் பிரச்சினைகள் நாளுக்கு நாள் உக்கிரமடைந்து வருகின்றன. 2005 ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்ஷ தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேனக பிபிலேவின் ஔடதக் கொள்கைகளை அமுல்படுத்துவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

சுகாதாரத் துறைக்கு அதிக நிதியை ஒதுக்கி, வைத்தியசாலைகளில் இறக்கும் நோயாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' -இவ்வாறு அவர் தெரிவித்தார். (சி)

# சட்டவிரோத மதுவிற்பனை வலி.தென்மேற்கில் குறைந்தது

சண்டிலிப்பாய், டிசெ.6

பொலிஸாரும் மது வரித் திணைக்கள உத்தியோகத்தர்களும் எடுத்துக்கொண்ட தீவிர நடவடிக்கையைத் தொடர்ந்து வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சட்டவிரோத மது விற்பனை, பாவனை குறைந்துள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது சட்டவிரோ மது விற்பனை சம்பந்தமாகவும், இதனால் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டன.

சட்டவிரோத மதுவிற்பனை சம்பந்தமாக இருபது வழக்குகள் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து சட்டவிரோத மதுபான விற்பனையும், பாவனையும் குறைந்துள்ளதாகத் தெரிவித்த மது வரித் திணைக்கள உத்தியோகத்தர், சட்டவிரோத மதுபான விற்பனை இடம்பெற்றால் அது பற்றிய தகவல்களை வழங்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை மானிப்பாய், பிப்பிலிச் சந்தியிலுள்ள மதுபான விற்பனை நிலையத்திற்கு அருகில் வைத்து மதுபானம் அருந்துவதால் பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் அசௌகரியம் ஏற்படுவதாகத் தெரிவித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார், மது வரித் திணைக்கள உத்தியோகத்தர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து மதுபானச் சாலை உரிமையாளருடன் இது தொடர்பாகக் கலந்துரையாடித் தீர்வுகாண்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.(201-115)

## காணவில்லை



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து நாகமணி என்பவரை 04.12.2010 அன்று நண்பகல் 12 மணியளவில் அளவெட்டியில் இருந்து சென்றவரைக் காணவில்லை.

அவரைக் காண்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு :0776979834
0750467418


## தேவை

DOMESTIC EXPRESS (Pvt) Ltd.
கூரியர் சேவை நிறுவனத்திற்கு
ஆண் /பெண் இருபாலரும் தேவை.
தொடர்பு: 0771082913
187/30, யூனியன் லேன், ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## வீட்டுக்காணிகள், தோட்டக்காணிகள் விற்பனைக்கு

ஏழாலை தெற்கில் 6பரப்பு வீட்டுக்காணி கிணற்றுப்பங்குடன் (வீதிக்கருகில்), 7பரப்பு வீட்டுக்காணி (வீதிக்கருகில்), 6பரப்பு தோட்டக்காணி மற்றும் வட்டுக்கோட்டையில் 10 பரப்பு வயற்காணி என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: விஜேசெபஸ்தியான் (Sebastian)
T.P: 0774051120 ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய வெளிவாரி பட்டதாரி ஆசிரியர் தற்போது London Student Visaவில் சென்றவர் டிசெம்பர் மாதம் இலங்கை வரவுள்ளார். இவருக்கு தகுந்த மணமகளை உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 0778449628

## வீடு விற்பனைக்குண்டு

மானிப்பாய் சந்தை முன் ஒழுங்கையில் 3 பரப்புக் காணியுடன் புது வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0212225583
0213002727

## VACANCIES @ GATEWAY

We are on the lookout for confident and committed individuals with the necessary qualifications for the following positions

**Instructors :**

Ideal candidate should be knowledgeable and enthusiastic, with an IT related diploma that is internationally recognized. Candidates with previous teaching experience will be given priority.

Work Station : Chavakacheri, Nelliyady

**Front Desk Executive :**

Ideal candidates should be friendly, energetic females who possess excellent oral communication skills in English. An accomplished school record, good public relations and marketing skills are essential.

Work Station : Chavakacheri

**Security Guards & Office Employee :**

Preference will be given to applicant from Thenmaradchi.

Work Station : Chavakacheri

**Apply to :**

The Manager
GATEWAY
CENTRE FOR INFORMATION & COMMUNICATION TECHNOLOGY
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 0215675555 Fax : 0212227967
E - Mail : gatewayjfn@sltnet.lk
**** Apply on or before : 09.12.2010 ****


## மரண அறிவித்தல்கள்

### சிவகுரு நவரத்தினராசா



கொக்குவில் மேற்கு, சிவகுரு லேனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு நவரத்தினராசா நேற்று (05.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், அன்னம்மா, கனகம்மா, செல்லத்துரை ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2010) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞான பண்டிதா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(106959)

தகவல்:
சி.குருநாதாயாகி
(மருமகள்)

### பொன்னம்பலம் சதாசிவம்
(ஓய்வுபெற்ற முன்னாள் எழுதுவினைஞர்)



யாழ்ப்பாணம், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் கொண்டலடி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சதாசிவம்(ஓய்வுபெற்ற முன்னாள் எழுதுவினைஞர்) நேற்று (05.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-நாகமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஆயுர்வேத வைத்தியர்)-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, வல்லிபுரம், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், திலகவதியின் அன்புக் கணவரும், கலாதேவி (ஆசிரியை, யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி), தயாதேவி, பரராஜசிங்கம் (ஜேர்மனி), புனிததேவி (பிரான்ஸ்), ஸ்ரீபரமேஸ்வரன் (உரிமையாளர், ஸ்ரீ தனுசிகன் எலக்ரிக் சென்ரர்), பத்மகாந்தன் (லண்டன்), திலகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும், பாலசுப்பிரமணியம் (அதிபர்), மகேந்திரா (தம்பிமகேந்திரா எலெக்ரிக் சென்ரர்), ஜெகதீஸ்வரி (ஜேர்மனி), பாஸ்கரன் (பிரான்ஸ்), பிரேமா (ஆசிரியை, நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம்), பரமேஸ்வரி (லண்டன்), சுரேந்திரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தம்பிஜயா (தம்பிஜயா அன்கோ), காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, பொன்னுத்துரை, பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், புவிதாஞ்சலி, சங்கீதரன், ஹேமாஞ்சனி, போதநிலாஞ்சலி, நிகேதனன், ஒளிஅழகன், துளசி, சகானன், சாரங்கன், அபிராமி பவித்ரன், தனுசிகன், தேனுசன், கௌத மன், கவிதன், சாகித்யன், யாதவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2010) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் 28, கொண்டலடி வீதி, நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28, கொண்டலடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(106956)

தகவல்:
குடும்பத்தினர்.

### பாலசுப்ரமணியம் கனகபாலன்



காரைநகர், சின்னாலடியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்ரமணியம் கனகபாலன் நேற்று (05.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுப்ரமணியம்-கனகபூசனி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், சுபாஜினியின் அன்புக் கணவரும், சிவரஞ்சினி, சிவரூபி, சிவதர்சினி, சிவப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகிரிபானந்தனின் அன்புச் சகோதரனும், யோகராசா, மகேஸ்வரன், சிவராசா, தவச்செல்வன் ஆகியோரின் மாமனாரும், மதிஜன், மயூரி, மிதுலன், லதுசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2010) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

124/2, பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

(573386)

தகவல்:
குடும்பத்தினர்
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அகதிகளை திரும்ப அழைப்பதில் அவசரமா?

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்தோர் தமது நாட்டுக்குத் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தகவல் வெளியிட்டிருக்கிறது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தில் தமது தாய் நாட்டுக்குத் திரும்பிவர அதிக எண்ணிக்கையானோர் விரும்பியதாகவும் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

அரசாங்கப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற போரின் காரணமாக, ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இந்தியாவுக்கு-தமிழகத்துக்கு-அகதிகளாக இடம்பெயர்ந்து சென்றனர். இவர்களில் 72,000 பேர் அங்குள்ள 112 அகதி முகாம்களில் தங்கி வாழ்கின்றனர். சுமார் 34,000 மக்கள் முகாம்களுக்கு வெளியே வசிக்கின்றனர். இவர்களில் தாயகம் திரும்பிவர முன்னரைவிட அதிகம் பேர் சுயவிருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் அறிவித்திருக்கிறது.

இதே போன்று வேறு நாடுகளுக்கு அகதிகளாகச் செல்லும்பெருட்டு தாய்லாந்துக்கு உல்லாசப் பிரயாண விசாக்களில் போனவர்களும், மேற்கு நாடுகளுக்கு அகதிகளாகப் போவதற்கு ஏற்பாடு செய்து தருவதாக அல்லது வெளிநாடுகளில் பணிபுரிய விசா பெற்றுத் தருவதாக முகவர்களால் கூட்டிச் செல்லப்பட்டு ஏமாற்றப்பட்டவர்களும் இலங்கைக்குத் திரும்பிவர முடிவுசெய்திருப்பதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இவர்களும் இங்கு திரும்பி வருவதற்கு தாய்லாந்திலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு தற்காலிக பயண அனுமதிச் சீட்டுக்களுக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இலங்கையில் போர் முடிவுற்று விட்டதால் தாம் வேறு நாடுகளுக்கு அகதிகளாகச் செல்ல விரும்பவில்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கிறார்களாம்.

இலங்கையில் போர் முடிந்து அமைதி நிலவுவதால், வெளிநாடுகளுக்கு அகதிகளாகச் சென்றவர்களும், பிற நாடுகளுக்குச் செல்லும் நோக்குடன் முகவர்களை நம்பி தாய்லாந்து போன்ற இடங்களில் இடைநடுவில் தத்தளிப்போரும் தமது சொந்த நாட்டுக்குத் திரும்பி வர விரும்புவது இயல்பானதே.

இடம்பெயர்ந்து சென்றவர்கள், மீண்டும் வந்து தமது சொந்த இடங்களில் உரிய வசதிகளுடன் வாழ்வதற்கான வேண்டிய ஏற்பாடுகள் இங்கு முன்னேற்பாடாகச் செய்யப்படுவது பிரதானம். அத்தகைய ஏற்பாடுகளைச் செய்யாமல் இந்தியாவில்-தமிழகத்தில்-உள்ள அகதிகளை இங்கு அழைத்துவந்து நட்டாற்றாற்றில் விடும் நிலை வராதிருக்க அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் நிச்சயப்படுத்திக் கொள்வது முதன்மைத் தேவையாகும்.

வன்னியில் இருந்து வந்து மீளக்குடியேறிய மக்களுக்கு அவர்களுக்குரிய அடிப்படைத் தேவைகள்தானும் அரசாங்கத்தினால் இன்னமும் திருப்திகரமாகச் செய்யப்படவில்லை. தங்குவதற்குரிய வீட்டுவசதிகளும் இல்லாமல், சுகாதார வசதிகளும், வைத்திய வசதிகளும், போதிய உணவுப்பொருள்களும் கிடையாமல் அவர்கள் தத்தளிக்கிறார்கள். மாரி மழைக் காலத்தில் மட்டும்தான் அவர்களுக்கு இந்த நிற்கதி நிலை என்று எடுத்துக்கொள்ள இயலாது.

மாரி கழிந்து கோடை வந்தாலும், அவர்களுக்குரிய வீட்டு வசதிகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியவில்லை. இந்திய அரசின் வீட்டு உதவித் திட்டத்தைப் போக்குக் காட்டி, அடுத்த வருடத்தில் ஆறு மாதங்கள் கழிந்தும் அவர்கள் தகரக் கொட்டில்களில் வாழும் நிலை உருவாகலாம்; உருவாக்கப்படலாம். இந்த லட்சணத்தில் தமிழகத்தில் அகதிகளாகத் தங்கியுள்ளவர்களை அவசரப்பட்டு இங்கே கூட்டிவருவது அவர்களையும் கட்டாயமாக கஷ்டத்தில் வீழ்த்துவதாகவே முடியும். அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் இது விடயத்தில் அவசரப்பட்டால் மேலும் சுமார் ஒரு லட்சம் தமிழ் மக்களை சட்டியிலிருந்து நெருப்புக்குள் தள்ளி விடுவதாக முடியும்.

போர் முடிந்துவிட்டது, அமைதி வந்துவிட்டது, அபிவிருத்தி நோக்கிப் பயணிக்க காலம் கனிந்துவிட்டது என்று அரசு சித்தாந்தம் பேசிக்கொண்டிருக்கின்றது. ஆயினும் நொந்து நொடிந்துள்ள தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரசைகள் போலவே தொடர்ந்தும் நடத்தி வருகின்றது. அவர்களுக்குரிய அரசியல் உரிமைகளை வழங்குவதற்குப் பதிலாகக் காலத்தை இழுத்தடித்துப் போக்குக் காட்டுகிறது. அவர்களது வாழ்வியல் மேம்பாடு சம்பந்தப்பட்ட அலுவல்களை வேண்டா வெறுப்புடனும் பல விடயங்களில் பாரபட்சத்துடனும், சந்தேகக் கண் கொண்டும் செயற்படுகிறது. இந்தப் போக்கிலிருந்து திசையை மாற்றி, தமிழ் மக்களும் இந்நாட்டின் பிரசைகள் என்ற சுத்தமான மனநிலையில் செயற்படும் தன்மையை, விருப்பத்தை முழுமையாகக் காணமுடியவில்லை. தமிழ் மக்களுக்கு அரசு பெரிதாக உதவுகிறது என்பதனைப் பிரபல்யப் படுத்தியும் பிரசாரம் செய்வதற்கும் சமனாக சேவைகள் நடைபெறவில்லை.

ஆகையால், வெளிநாடுகளுக்கு அகதிகளாகச் சென்றவர்களை மீண்டும் இங்கு அழைத்துவந்து அவர்களுக்குரிய தேவைகளை, சேவைகளை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்திய பின்னரே, அந்தப் பொறுப்பை தான் ஏற்றுக்கொண்டே, அந்தப் பணியில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் காலடி எடுத்து வைக்கவேண்டும்.

# யாழ்.செயலகத்தில் உஷார் நிலையில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு

## அச்சம் கொள்ளாதீர்கள் என்று மக்களுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.6

யாழ்.மாவட்டச் செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு 24 மணி நேரமும் உஷார் நிலையில் இயங்கி வருவதாகவும், காலநிலை மாற்றம் மற்றும் பெரும் அனர்த்தங்கள் ஏற்படும் சாத்தியங்கள் இருப்பின் அவை குறித்து உடனுக்குடன் பொது மக்களுக்கு அறிவுறுத்தல்விடுக்கும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் இருந்து காலநிலை மாற்றம் தொடர்பான தகவல்கள் தொடர்ச்சியாக யாழ்.மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும், இதனால் பொதுமக்கள் காலநிலை தொடர்பில் அச்சம் அடையத் தேவையில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஏதாவது காலநிலை மாற்றங் கள் ஏற்பட்டால் அவை தொடர்பில் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இன்று திங்கட் கிழமை யாழ். மாவட்ட சகல திணைக்களத் தலைவர்களுடனும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என்றும் யாழ். மாநகர சபையுடன் இணைந்து கால்வாய்களைத் திறந்துவிடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-15)

## யாழ்.மாவட்டத்தில் 29 சிறுவர் இல்லங்கள் பதிவு

யாழ்ப்பாணம்,டிசெ.6

யாழ்.மாவட்டத்தில் இதுவரை 29 சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சி.சிவகரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சிறுவர் இல்லங்களை பதிவதற்கான நடவடிக்கைகளை மிகக்கடுமையாக்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

29 சிறுவர் இல்லங்களைத் தமது அனுமதியைப் பெற்று செயற்படும் அதேவேளை 4 சிறுவர் இல்லங்கள் அனுமதியின்றி தற்போது செயற்பட்டு வருகின்றன.

அந்த 4 சிறுவர் இல்லங்களும் ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் இயங்கிய பின்னரே தமது தகுதிக்காக விண்ணப்பிக்க முடியும் என்பதால் அவை அனுமதியின்றி தற்போது இயங்கி வருகின்றன- எனத் தெரிவித்தார் சிவகரன்.

புதிய சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்படுகின்றபோது தற்போது மிகக் கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதாகவும் சிறுவர் நன்நடத்தை ஆணையாளர் அல்லது நீதிபதி ஆகியோரின் பணிப்புக்கு அமையவே சிறுவர் ஒருவரை சிறுவர் இல்லங்களில் இணைத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ஒ-15)

# யாழ்.சிங்கள ம.வியை இயக்குமாறு நாவற்குழியில் குடியேறியோர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.6

யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தை அடுத்த வருட முற்பகுதியில் மீண்டும் ஆரம்பிக்குமாறு நாவற்குழியில் குடியேறிய சிங்கள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாவற்குழியிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் இதுவரை 186 சிங்களக் குடும்பங்கள் குடியேறியுள்ளன. இவர்கள் எந்தவிதமான அரசியல் பின்புலத்திலும் தாங்கள் இங்கு குடியமரவரவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை வாழ்த்தி நாவற்குழியில் பதாகைகளையும் தொங்கவிட்டுள்ளனர்.

தற்போது பெய்து வருகின்ற தொடர் மழை காரணமாகத் தமது கொட்டில்களுக்குள் வெள்ளம் புகுந்துவிட்டதாகவும் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக உள்ளூர் பிரதேச செயலக அதிகாரிகளிடம் உதவி கேட்டால் அவர்கள் தமக்கு மேலிடத்து உத்தரவு வரவில்லையென்கின்றனர்.

குடாநாட்டில் தொடரும் அடைமழையால் அவர்களால் கொண்டுவரப்பட்ட ஓட்டோக்கள், கார்கள், வான்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பன மழையில் நனைந்த வண்ணமுள்ளன.

தெற்கிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் தமது பிள்ளைகளை மூன்றாம் தவணை முடிந்ததும் புதிய ஆண்டிலாவது யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வர வேண்டியுள்ளது. அதற்காக அரசிடம் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் இவ்விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளோம் என்று தெரிவித்தனர்.

இதேவேளை இந்த இடங்களில் இருந்த தமிழ்க் குடும்பங்கள் பல மழை காரணமாக வெளியேறியுள்ளன. சிங்கள மக்கள் பெரும்பாலும் மேட்டு நிலங்களை ஆக்கிரமித்திருப்பதால் தமிழ் மக்கள் இருந்த தாழ்நிலப்பரப்புக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் 330 வரையான தமிழ்க் குடும்பங்கள் வெளியேறியுள்ளன. மழை வெள்ளம் தணிந்த பின்னர் தாம் மீண்டும் அந்தப் பிரதேசங்களுக்கு வருவோம் எனவும் வெளியேறிய தமிழ்க் குடும்பங்கள் தெரிவித்துள்ளன. இந்தத் தமிழ் குடும்பங்கள் இருந்த கொட்டில்களின் மரம், தடிகள் சிங்கள மக்களால் சூறையாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-15)

## விசேட தேவையுடையோர் வங்கிகளில் கடன்பெற உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.6

விசேட தேவைக்குட்பட்டோர் வங்கிகளில் கடன் உதவி பெறுவதற்கும், இவர்களுக்கென மாதாந்தம் வழங்கப்படும் உதவிப்பணத்தை 100 ரூபாவிலிருந்து அதிகரிக்க வும் அனுமதி வழங்குமாறு யாழ். மாவட்ட விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆர்.மகேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச விசேட தேவைக்குட்பட்டோர் தின நிகழ்வு நேற்று யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார். (ம-313)

## நாளை

கார்த்திகை 21 : 07.12.2010
செவ்வாய்

திதி: : துதியை
மு.இ. 11.25 வரை

நட்சத்திரம் : மூலம்
மு.இ. 07.47 வரை

[illegible]

[illegible]

## மலரும் இஸ்லாமியப் புதுவருடம்....

(ஹிஜ்ரி 1431 - 1432)

உலக முஸ்லிம்கள் ஹிஜ்ரி 1431ஐ பூர்த்திசெய்து கொண்டு ஹிஜ்ரி 1432ம் ஆண்டுக்குள் பிரவேசிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார் கள். பிறக்க இருக்கும் இஸ்லாமியப் புதுவருடம் இலங்கையில் 07.12.2010 அன்று எதிர்கொள்ளப்பட இருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் (நுபுவத்) கிடைத்த பின் 13 வருடங்கள் மக்காவிலேயே இஸ்லாமியப் பணிகளில் ஈடுபட்டார்கள், இங்கு பல துன்பங்களைத் தாங்கி பின், அல்லாஹ்வின் கட்டளைப்படி மதீனா நோக்கித் தூய இஸ்லாத்தை எடுத்துச் சென்ற "ஹிஜ்ரத் நிகழ்வு", இஸ்லாமிய வரலாற்றில் மாபெரும் திருப்பு முனையாக அமைந்தது. இந்நிகழ்வில் இருந்தே இஸ்லாமிய வருடம் கணிக்கப்படுகிறது.

இஸ்லாம் தனித்துவம் மிக்க மார்க்கமாகும். அவ்வாறே இஸ்லாமிய வருடக் கணிப்பும் தனித்துவத்துடன் காணப்படுககிறது. சூரிய சுழற்சியை அடிப்படையாகக் கொண்டே தமிழ், சிங்கள, ஆங்கில வருடங்கள் கணிக்கப்படுகின்றன. சந்திரச் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாமிய வருடம் கணிக்கப்படுகிறது.

எமது தாய்நாடு இலங்கையில் முஸ்லிம்களாகிய நாம், எமது கடந்து போகும் ஹிஜ்ரி வருட அனுபவங்களை மீட்டிப்பார்த்து, பெற்ற உயர்வுகளை மதித்து, பட்ட காயங்களை மறந்து - ஏனைய சமூகங்களுடன் இஸ்லாம் கூறும் சமத்துவம், சகோதரத்துவம் பேணி, பரஸ்பர புரிந்துணர்வுடன் ஒற்றுமை பேணி வாழ்வோமாக.

எல்லாம் வல்ல இறைவனே! பிறக்கும் இந்தப் புத்தாண்டில் உனது படைப்பான உலக மக்கள், குறிப்பாக இலங்கை மக்கள் கடந்தகாலப் பயங்கரங்களையும் இழப்புக்களையும் விட்டுத் தம் சொந்தக்காலில் எழுந்து நிற்க ஆவன செய்வாயாக. நீ எமக்கு வாக்களித்தபடி, உன்னை மன்றாடி நிற்கும் எமது பாவங்களை மன்னித்து, அமைதியடையச் செய்வாயாக. இதுவே இப்புது வருடத்தில், உன்னிடம் இலங்கை வாழ் முஸ்லிம்களின் பிரதான பிரார்த்தனையுமாகும். இதற்காகவே இப்புத்தாண்டில் எம் இருகரங்கள் ஏந்தி உன் முன் நிற்கிறோம்.

-மௌலவி. ஏ.எம்.ஏ. அஸீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 21.11.2010 முதல் 07.05.2011 வரை




வாசகர்களே !
நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த குருப் பெயர்ச்சி வந்து விட்டது. இதுவரை கும்ப ராசியில் சஞ்சரித்து சிறிது காலப்பகுதியில் குருவாசம் செய்து, பின் மீனத்துக்கு அதிகாரமாகச் சென்று, பலாபலன்களைக் கொடுத்து மீண்டும் கும்பத்துக்கு வந்து ஒரு சில நாள்கள் மட்டும் இருந்த குரு இப்பொழுது 12 ஆம் இடமான மீனராசியில் கடந்த 21ஆம் திகதி முதல் சஞ்சரித்து உங்களுக்கான பலாபலன்களை வழங்க வுள்ளார்.

தனுசு (மூலம், பூராடம், உத்திராடம்)

பிறர் செய்த கெடுதலையும் பெருந் தன்மையுடன் மன்னித்திடும் தனுசுராசி அன்பர்களே!

உங்கள் ராசிக்கு நான்காம் இடத்தில் மீனராசிக்கு குருபகவான் பெயர்ச்சி யாகி உள்ளார். நான்கில் உள்ள குரு வினால் நன்மைகள் அதிகமில்லை என் பது ஜோதிட சாஸ்திரம். இருப்பினும் உங்கள் ராசிக்கு கேந்திர ஸ்தானத்தில் குருபகவான் ஆட்சிபலத்துடன் அமர்ந்து குருச்சந்திர யோகம் தருகிறார். ஒரு வரின் சுயஜாதக கிரக கெடு பலனை குருச்சந்திரயோகம் நல்லதாக மாற்றித் தரும். குருபகவான் தனது 5, 7, 9 ஆகிய பார்வைகளால் முறையே ராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். புதிய முயற்சிகளை திட்டமிடுதலுடன் செயல்படுத்துவதால் மட்டுமே எதிர் பார்த்த பலன் கிடைக்கும். பணவரவு குறையும் என்பதால் செலவில் சிக் கனம் பின்பற்றுவது நல்லது. பூர்வீக சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கும் நிலை வரலாம். உடன்பிறந் தவர்களுடன் வாக்குவாதம், கருத்து வேறுபாடு உண்டாகி சஞ்சலம் அடை வீர்கள். வீடு, வாகன வகையில் பெறுகிற நன்மை தொடர்ந்து கிடைக்கும். புத்தி ரர்கள் விடயத்தில் பெரிய முன் னேற்றம் இராது. அவர்கள் தங்கள் வாழ்க்கையை தாங்களே கையில் எடுத்துக்கொள்ளும் நிலைமை இருக் கிறது. அனுசரணையாக நடந்து கொள் ளுங்கள். இஷ்ட தெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவதால் மனதில் நிம்மதி அதிகரிக்கும். உடல்நிலை பாதிக்கலாம் என்பதால், போதை வஸ்துக்களை பயன் படுத்துவதை அறவே நிறுத்த வேண் டும். வழக்கு விவகாரங்கள் சாதகமாக இராது என்பதால், சமரச தீர்வுகளை ஏற் பது நல்லது. தம்பதியரிடையே மனக் குறை இருந்தாலும் பிரிவினை ஏற்ப டும் அளவுக்குச் செல்லாது. நண்பர் களிடம் தகுதிக்கு மீறிய பண பரிவர்த் தனை, தேவையற்ற விவாதத்தால் கருத்து வேறுபாடுவரும். பேச்சைக் குறைப்பது மிகவும் உத்தமம்.

இவ்வளவு சிரமங்கள் இருந்தாலும் நன்மைகள் சிலவும் உங்களுக்கு இருக் கின்றன. தந்தைவழி உறவினர்கள் உத வுவார்கள். தொழில் சார்ந்த வகையில் முன்னேற்றம் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும். சரியாக பயன்படுத்துவ தால் ஓரளவு வளர்ச்சி பெறலாம். குடும் பத்தில் தாமதமான சுபநிகழ்ச்சியை கடன் பெற்றாவது நிறைவேற்றி மகிழ் வீர்கள். வெளிநாடு வேலைவாய்ப்பில் சாதகமான சூழ்நிலை இருக்கிறது.

தொழிலதிபர்கள்: கட்டுமானப் பொருள்கள், குளிர்பானம், தோல், பிளாஸ் டிக், காகிதத் தொழிற்சாலை அதிபர்கள், கல்வி, நிதி நிறுவனம், பால் பண்ணை, முகவர், ஓட்டல், லாட்ஜ் நடத்துவோர், புத்தக வெளியீட்டாளர்கள் தொழிலில் வளர்ச்சித்தன்மை பெறுவர். பணியா ளர்களுடன் அதிருப்தி உருவாகி பின் னர் சரியாகும். லாபம் ஓரளவுக்கு இருக் கும்.ஏனைய தொழில் அதிபர்களுக்கும் சுமாரான லாபம் உண்டு.

**தருபவர் வித்யா**

வியாபாரிகள்: நகை, புடைவை, மருந்து, மருத்துவ உபகரணங்கள், பட்டாசு, விவசாய இடுபொருள்கள், இறைச்சி, அழகுசாதனப் பொருள்கள், பால்,கண்ணாடி, எண்ணெய் விற்பனை செய்பவர்கள் விற்பனையில் முன்னேற் றம் காண்பர். லாபம் கட்டுப் படியாகும் அளவுக்கு இருக்கும். சரக்கு வாகன வகையில் பராமரிப்பு செலவு அதிகரிக் கும். புதிய கிளை தொடங்கும் முயற்சி யில் தாமதம் செய்வது நல்லது. பொருள் இருப்பு மையங்களில் பாதுகாப்பு ஏற் பாடுகளை ஸ்திரப்படுத்திக்கொள்வதன் மூலம் திருட்டு, விபத்துக்களை தடுக்கலாம்.

பணியாளர்கள்: அரசு மற்றும் தனி யார் துறையில் பணிபுரிபவர்கள் திறம் பட செயற்பட்டு பணி இலக்கை நிறை வேற்றுவர். ஆனால், பதவி உயர்வு, எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்க தாம தமாகும். சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. பேச் சைக் குறைக்கவும்.

கடின இயந்திரப் பணியில் உள்ளவர் களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு கிடைக்கும். அவர்களுக்கு பணவரவில் சிக்கல் இராது. தாராள செலவில் சுப நிகழ்ச்சி நடத்துவீர்கள். வெளியூர், வெளி நாட்டு சுற்றுலாபயணத்திட்டம்நிறைவேறும்.

பெண்கள்: பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றினாலும் கூட, பதவி உயர்வு, சலுகை போன்றவை கிடைக்க தாமதமாகவே கிடைக்கும். குடும்பப் பெண்கள் கணவருடன் கருத்து வேறுபாடு கொள்வர். அவர் களின் கருத்துக்கு ஏற்ப செயல்படுவ தால் மட்டுமே குளறுபடி இல்லாத வாழ்க்கைமுறை அமையும். குடும்ப செலவுக்கான செலவில் சிக்கனம் பின் பற்றுவீர்கள். ஆபரணங்களை அணி வதிலும் பாதுகாப்பதிலும் கூடுதல் கவனம் வேண்டும். சுயதொழில் புரி யும் பெண்கள் சராசரி உற்பத்தி, வியா பாரம் அமைந்து எதிர்பார்த்த பண வரவை பெறுவர். புதிதாக கூட்டுத் தொழில் முயற்சியில் ஈடுபட வேண்டாம்.

மாணவர்கள்: பொறியியல், மருத் துவம், சட்டம், விவசாயம், வணிக வியல், வங்கியியல், ஆசிரியர் பயிற்சி, கணினி, இதழியல், நிர்வாக மேலாண்மை, கேட்டரிங், ஓவியம், பிரின்டிங், இரசாயனம், பௌதிகம், உயிரியல், பொருளாதாரத் துறை மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனத்துடன் ஈடுபட்டாலும், தேர்ச்சி யில் ஏதோ ஒரு வகையில் தடை வர லாம். நீங்கள் தினமும் "ஓம் சக்தி விநா யக நம" என்ற மந்திரத்தை மூன்று முறை சொல்லிவிட்டு படிப்பைத் தொடர்ந்தால் தடை நீங்கும். படிப்புச் செலவை தவிர பிற தேவைகளை குறைத்துக்கொள் வது நல்லது. சக மாணவர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். கவனம்.

விவசாயிகள்: பயிர் வளர்க்க தேவையான வசதிகளைப்பெற குறுக் கீடுகள் உருவாகும். கால்நடை வளர்ப்பு மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தி முக்கிய தேவைகளுக்கான பணவரவை பெற்றுத்தரும். நிலம் தொடர்பான விவகாரங்களில் சுமூக அணுகுமுறை நல்லது. இல்லாதபட்சத்தில் சட்டசிக் கல்களைச் சந்திக்கநேரிடும்.

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளின் ஆட்சியிலேயே ஊடகவியலாளர் பலர் படுகொலை

## அரியநேந்திரன் எம்.பி.குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.6

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளின் ஆட்சிக்காலத்திலேயே ஊடகவியலாளர்கள் பலர் கொலை செய் யப்பட்டுள்ளனர். ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டுள்ளன என்று மட்டக் களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு உறுப்பினரான பா.அரியநேந் திரன் கடந்த வியாழக்கிழமை நாடாளு மன்றில் குற்றம் சுமத்தினார்.

ஊடகத்துறைகள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது தொடர்ந்து அவர் கூறியதாவது:-

குறிப்பாக இங்கு நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில் தான் ஊடகப் படுகொலை கள் அதிகரித்துள்ளன.

சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியில் 13 ஊடகவிய லாளர்களும் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் ஆகக் கூடுதலாக 26 ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கில் உதயன், தினக்குரல் ஊடக நிறுவனங்களும், தெற்கே சிரச, சண்டே லீடர் உட்பட ஊடக நிறுவனங்களும் தாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஊடகவியலாளர் களும் தாக்கப்பட்டுள்ளனர். ஊடகவிய லாளர்களுக்கான பாதுகாப்பும் கேள்விக் குறியாகவுள்ளது.

இவ்வாறு கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் அனைவரும் யுத்த காலத்திலேயே கொலை செய்யப்பட் டுள்ளனர். எனவே யுத்தகாலத்தில் கொல்லப்பட்ட படையினருக்கு நஷ்ட ஈடுகள் வழங்கப்படுவதுபோல் கொலை செய்யப்பட்ட சகல ஊடகவியலாளர் களுக்கும் அவர்களின் குடும்பத்தவர் களுக்கு அரசு நஷ்டஈடு வழங்கவேண் டும் என அரியநேந்திரன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை வடக்கில் உதயன் பத்திரிகை பல்வேறு விதமான அச்சு றுத்தல்களுக்கு மத்தியில் தமிழ் மக்க ளுக்காகப் பெரும் பணியாற்றி வந்துள் ளது. உதயன் இந்தவருடம் 25 ஆவது வெள்ளிவிழாவும் கொண்டாடியுள்ளது. அதற்கு எனது வாழ்த்துக்களைத் தெரி வித்துக் கொள்கின்றேன் என்றும் குறிப் பிட்டார். (சி)


**அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு**



அமரர்
தம்பையா முருகேசு



(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் )

கடந்த ஐப்பசி மாதம் 21 ஆம் நாள் (06.11.2010) சனிக்கிழமையன்று இறைபதமடைந்த எமது அன்புத் தந்தையார் அமரர் தம்பையா முருகேசு அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று கார்த்திகை 21 ஆம் நாள் (06.12.2010) திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அந்நிகழ்வில் கலந்துகொள்வதுடன் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் கலந்துகொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளு மாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அல்வாய் வடமேற்கு,
திக்கம்.

(105453)

குடும்பத்தினர்.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No.1 BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 08.12.2010 விநியோகிக்கப்படும். புறொயிலர் குஞ்சுகள் கொள்வனவு செய்பவர்களிடம் இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.
ராஜீன், நாவலி வீதி, ஆனைக்கோட்டை.
021 222 2867, 0776090926

**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 10.07.1940 மறைவு 06.12.2006

அமரர் கந்தையா துரைராஜா

(Proprictor- Hutchinson F.I.P. Works- யாழ், வவுனியா.)

திதி: 23.11.2010



"தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை
என்பதை உணர்த்திய தெய்வமே!"
பிறந்தவர் யாவரும் இறப்பர் என்பதை
யாம் உணரவில்லையே!
நீர் எம்மை விட்டுப்பிரியும்வரை
எம் நினைவு நீங்கும்வரை உம்
நினைவுகள் எம்மைவிட்டு அகலாது ஐயா!

05, புறடி முன் ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்,
பெறாமக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்பை கண்காணிக்க வலி. கிழக்கில் உயர் மட்டக்குழு

அச்சுவேலி, டிசெ.6

வலி.கிழக்கில் டெங்கு ஒழிப்புத் தொடர்பாக பிரதேச செயலர் தலைமையிலான உயர்மட்டக் குழு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. கிராமங்கள் தோறும் நேரில் சென்று டெங்கு ஒழிப்பு மதிப்பீடுகளை இக்குழு மேற்கொள்கின்றது.

டெங்கு ஒழிப்புத் தொடர்பாக இதுவரையும் முன்னெடுக்கப்பட்ட சுத்திகரிப்புப் பணிகளும் வேலைத் திட்டங்களும் டெங்கு ஒழிப்பு வாரத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளும் மதிப்பிடப்படுகின்றன. கிராம அலுவலர் பிரிவு வாரியாக உயர்மட்டக் குழு நேரில் சென்று இந்த மதிப்பீடுகளைச் செய்கிறது. தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக பொருத்தமான வழிப்படுத்தல்களும் குழுவினரால்வழங்கப்படுகின்றன. வலி. கிழக்கு பிரதேச செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் உயர்மட்டக் குழுவில் அச்சுவேலி, கோப்பாய் பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகள் இராணுவ, சிவில் நிர்வாக அலுவலர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

**பிரதேச செயலர் கருத்து**

இது தொடர்பாக வலி.கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் கருத்துத் தெரிவிக்கையில்:-

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு தொடர்பான செயற்பாடுகள் சகல தரப்பினரின் ஒத்துழைப்புடனும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. டெங்கு ஒழிப்பு வாரம் தொடர்பாக பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி சகல தரப்பினையும் உள்ளடக்கிய உயர் மட்டக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. கிராம அலுவலர் பிரிவு மட்டத்திற்கு நேரில் சென்று பார்வையிடும் இந்த குழு, மேற்கொள்ளப்பட்ட பணிகளை மதிப்பீடு செய்து வருவதோடு தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான வழிப்படுத்தல்களையும் வழங்கி வருகின்றது- என்று தெரிவித்தார்.(உ-11)

## சுத்தம் சுகம் தரும்......



வருமுன் காப்போம்:டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ்.பொலிஸ்நிலைய சுற்றாடலில் பொலிஸார் சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். (201-15)

## காரைநகர் மல்லிகைக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

காரைநகர்,டிசெ.6

காரைநகர் மல்லிகைக் கிராம மக்கள் தமது கிராமத்துக்கு மின்சாரம் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தக் கிராமத்ததைச் சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கையொப்பமிட்டு மகஜர் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மின்ஒளியையே காணாத கிராமமாக இக்கிராமம் உள்ளது.

மின்சாரம் வழங்குமாறு மின்சார சபையிடம்கோரிக்கை விடுத்த போது இக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதாயின் அதற்குரிய முழுச் செலவினையும் கிராம மக்கள் ஏற்றுக் கொண்டால் மாத்திரமே மின் வழங்க முடியுமெனத் தெரிவித்துள்ளனர்.

எமது கிராம மக்கள் மிகவும் வறுமைப்பட்டவர்கள் பெருந்தொகைப் பணத்தினைச் செலுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

அதனால் எமது கிராமத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ம-250)

## ஒளிராத மின் விளக்குகளால் காரைநகர் மக்கள் பெரும் சிரமம்

காரைநகர்,டிசெ.6

காரைநகர் பிரதான வீதிகளில் பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் ஒளிராதமையால் இரவு வேளைகளில் போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

காரைநகர் பிரதான வீதிகள் மற்றும் சந்திகளில் பொருத்தப்பட்ட மின் விளக்குகள் நீண்ட காலமாக ஒளிர்வதில்லை என்று மக்கள் குறை கூறுகின்றனர்.

இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் திருடர்களுக்கும் இது வாய்ப்பாக அமைகின்றது.

அண்மைக்காலமாக காரைநகரில் திருட்டுக்களும் அதிகரித்து வருகின்றன. கடந்த ஓரிரு மாதங்களில்மட்டும் இரண்டிற்கும் மேற்பட்ட கடைகள் உடைக்கப்பட்டுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. தனிமையில் இருந்த பெண்ணின் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் அப்பெண்ணின் தாலிக்கொடியை அபகரித்த சம்பவமும் இடம் பெற்றது.

வீதிகள் இருளில் மூழ்கியிருப்பதைத் திருடர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றனர் என்பது மக்களின் குற்றச்சாட்டு. எனவே ஒளிராத மின் விளக்குகளைத் திருத்த நடவடிக்கை எடுப்பதுடன் ஏனைய இடங்களுக்கும் மின் விளக்குகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (உ-250)




## அரிசி மூடைக்குள் தங்க நகை உரியவரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.6

அரிசி மூடைக்குள் மறைத்து வைக்கப்பட்ட தங்க நகை பொதி ஒன்றைக் கண்டெடுத்த வர்த்தகர் ஒருவர் உரியவரிடம் அதைக் கையளித்த சம்பவம் ஒன்று நீர்வேலி பகுதியில் இடம் பெற்றது.

இந்த சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

அரிசி விற்பனையாளர் ஒருவர் தங்க நகைப் பொதியை திருடர் பயத்துக்காக அரிசி மூடைக்குள் மறைத்து வைத்துள்ளார்.

வர்த்தக நிலையத்துக்கு அரிசி மூடைகள் விற்பனை செய்யும் போது மேற்படி மூடையையும் விற்பனை செய்துள்ளார்.

மறுநாள் வர்த்தகர் அரிசி மூடையை அவிழ்த்துவிட்டு அரிசியை விற்பனை செய்யும் சமயம் பொதி ஒன்றை கண்டு அதிர்ச்சியுற்றார்.

பின்னர் அந்தப் பொதியை பிரித்துப் பார்த்தபோது தங்க நகைகள் இருந்தமை தெரிந்தது.

அந்த நகைப் பொதியை உரிய அரிசி வியாபாரியிடம் ஒப்படைத்துள்ளார். (201-26)

## ஆழியவளை பஸ்சேவைப் பாதை தற்காலிகமாக வேறு வழியில்

பருத்தித்துறை,டிசெ.6

வடமராட்சி கிழக்கு ஆழியவளை பஸ் சேவைப் பாதை தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

மருதங்கேணி பால வேலை தற்போது நடைபெற்று வருவதையிட்டே இந்தப் பாதை மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை ஏ-9 வீதியால் சென்று புதுக்காட்டுச் சந்தியினை அடைந்து அங்கிருந்து சேரன்பற்று - தாளையடி வீதி ஊடாகவே ஆழியவளை வரை பஸ்சேவை நடத்தப்பட்டுவந்துள்ளது.

தற்போது மருதங்கேணிப் பாலத்தின் பால வேலை நடைபெறுவதையடுத்து ஏ-9 வீதியால் வரும் பஸ் இயக்கச்சி சென்று அங்கிருந்து கோயில் வயல், புல்லாவெளிச் சந்தி, நித்தியவெட்டை, கட்டைக்காடு, வெற்றிலைக் கேணிப் பகுதிகளுக்கு ஊடாக ஆழியவளையைச் சென்றடைந்து மாமுனைவரை சேவை நடைபெறுகின்றது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.டிப்போ, பருத்தித்துறை டிப்போ ஆகியவற்றின் ஆழியவளை பஸ்சேவை இந்தப் பாதை ஊடாகவே நடைபெற்று வருகின்றது என தெரிவிக்கப்படுகின்றது. (204-190)


## சட்ட உதவி மன்றத்தின் அலுவலகத்தை மூன்று இடங்களில் திறக்க நடவடிக்கை

பருத்தித்துறை,டிசெ.6

சட்ட உதவி மன்றத்தின் அலுவலகம் அடுத்த ஆண்டு பருத்தித்துறை, சாவகச்சேரி, மல்லாகம் ஆகிய இடங்களிலும் திறந்து வைக்கப்படவுள்ளன. தற்போது இந்த அலுவலகம் யாழ்ப்பாணத்தில் மட்டும் நீதிமன்ற கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

பொது மக்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குவதுடன், மாதாந்தம் 8 ஆயிரம் ரூபாவுக்கு குறைவான வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாகச் சட்டத்தரணிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் நடவடிக்கையினையும் சட்ட உதவி மன்றம் மேற்கொண்டு வருகின்றது. (204-190)

## நன்கொடை......



கற்றல் ஊக்குவிப்பு: கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் போட்டோ பிரதி இயந்திரம், புரொஜெக்ரர் ஆகியவற்றை வழங்குகிறார்.

## மீனவர் வலைகளில் அதிகம் மாட்டுகின்றன சுறா மீன்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 6

கடற்தொழிலாளர்களின் வலைகளில் பெரிய சுறா மீன்கள் மாட்டுவது கடந்த சில நாள்களாக அதிகரித்துள்ளது. கடந்த வாரத்தில் மட்டும் பாசையூர் மீனவர்களிடம் இரண்டு பெரிய சுறா மீன்கள் மாட்டியுள்ளன. அவை அதிக விலைக்கும் விற்கப்பட்டன.

கடந்த 28ஆம் திகதி 10 அடி நீளமான சுறா ஒன்று வலையில் மாட்டியது. இறந்த நிலையிலேயே அது கிடைத்த போதும், அதன் உடற்பாகங்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டன என மீனவர்கள் தெரிவித்தனர்.

இரு நாள்கள் கழித்து 30 ஆம் திகதியும் மற்றொரு பெரிய சுறா பாசையூர் மீனவர் ஒருவரின் வலையில் மாட்டியுள்ளது. உயிருடன் மாட்டிய அந்தச் சுறா 59 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் காணப்படும் பெரிய சுறா மீன்கள் மீனவர்களின் வலைகளில் மாட்டுவது அரிது. காற்றும் மழையும் சேர்ந்த தற்போதைய காலநிலையால் அவை ஆழம் குறைந்த கடற் பகுதிக்கு அடித்து வரப்படும்போது மீனவர் வலைகளில் இலகுவில் மாட்டிக் கொள்கின்றன என்று கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். பெரிய சுறாக்கள் கிடைப்பதால் தமக்கு அதிக வருமானம் கிடைப்பதாக மீனவர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (ம-14)

## தொடர் மழையால் கடற்றொழிலாளர் சிரமத்தின் மத்தியில்

யாழ்ப்பாணம்,டிசெ.6

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழைக்கால நிலை காரணமாக கடற்றொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கடற்தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடற்பகுதிக்குச் சென்று தங்கியிருந்து தொழில் செய்ய முடியாத நிலை கடற்தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அடைமழை, காற்று காரணமாக மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்துவதில் அதிக சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கடற்தொழிலாளர்கள் மேலும் கவலை தெரிவிக்கின்றனர். (ம-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ் மத்திய கல்லூரியின் மணிவிழாச் சிறப்பு மலர் – 06.12.2010

## வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் தேசிய பாடசாலைகளில் ஒன்றாக மிளிர்ந்து கொண்டிருக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கல்வி, விளையாட்டு, சமூகப்பண்பாடு, ஒழுக்கவிழுமியங்களை நகரின் மத்தியில் நின்று பேணி வருகின்றது. இக்கல்லூரி சமூக மட்டத்தில் உள்ள அனைத்து மாணவர்களையும் உள்வாங்கி அளப்பரிய சேவையை ஆற்றி வருகின்றது. இக்கல்லூரியில் நீண்டகாலமாகக் கணித ஆசிரியராகக் கடமையாற்றி தொடர்ந்து பகுதித் தலைவராக சேவை புரிந்த திரு.சோ.பேரின்பநாதன், அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவர் இக் கல்லூரியில் மூன்று தசாப்தங்களாக கணிதபாடத் தினைக்கற்பித்து அப்பாடத்தில் மாணவர்களின் அடைவு மட்டத்தினை உயர்த்துவதில் அளப்பரிய பங்கினை ஆற்றி எமது வலயத்தின் கணித பாட அடைவு மட்டம் மேம்படுவதற்கு அரும்பாடுபட்டவர். பெற்றோருடனும் சமூகத்துடனும் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்த இவர் மாணவர் நலனில் பெரிதும் அக்கறையுடன் செயற்பட்ட ஒருவராவார். இதுவரை காலமும் கல்விப்பணியில் அருஞ்சேவையாற்றிய கணித ஆசிரியரை அவர் ஆற்றிய பணிக்காக எமது கல்வி வலயத்தின் சார்பாக பாராட்டுவதுடன் அவர் தனது ஓய்வுக் காலத்தில் நீண்டமகிழ்வுடனும், இன்பத்துடனும் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

திருமதி அ.வேதநாயகம்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## சிறந்த கணித ஆசான் பேரின்பநாதன்




வேலணை ஊரில்பிறந்த சிறந்த கல்வியியலாளர் குடும்பத்தின் வழித்தோன்றலாக உருவாகி கணித ஆசிரியராக ஆசிரியத் தொழிலில் மிளிர்ந்து யாழ்.மத்திய கல்லூரியில் பகுதித் தலைவராக உயர்ந்து நிற்கின்ற பேரின்பநாதன் அவர்கள் கணிதபாடத்தினை நுட்பத்துடனும் கவர்ச்சிகரமாகவும் கற்பிக்கக் கூடிய வல்லமை உடையவர். சிறந்த ஆன்மீப் பற்றுடைய இவர் இசையை ரசிப்பதிலும், இசைப்பதிலும் வல்லவர். மாணவர்களுக்கு எந்தப்பாடமானலும் அந்தப் பாடத்தையே போதிப்பதில் வல்லவர். சகஆசிரியர்களுடனும், மணவர்களுடனும் நல்லுறவைப் பேணுவதில், நிர்வாகத்துக்கு ஆலோசனை வழங்குவதிலும் முன்னின்று உழைத்தவர்.

இவருடையசேவை இக்கல்லூரியுடன் மட்டும் நின்றுவிடாது இந்துமகளிர் கல்லூரியின் வளர்ச்சிக்கும் அவரது மனைவியூடாக பின்புலமாக இருக்கின்றது. இவரது அர்ப்பணிப்பான சேவையின் மகத்துவத்தினை அவர்தம் மக்கள் மூவரின் வளர்ச்சியின் மூலம் அறிய முடியும். இவர் தனது ஓய்வுக் காலத்தினை இன்பமாகக்களிக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

திருமதி வ.சிவபாலன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

## உயர் திரு- சோ.பேரின்பநாதன்
### பகுதித் தலைவர் S.L.T.S.-I



**சுயவிபரம்**

பெயர்:- சோமசுந்தரம் பேரின்பநாதன்
பிறந்த திகதி: 05.12.1950
பிறந்த இடம்:- வேலணை
ஆரம்பக் கல்வி:- வேலணை ஆத்திசூடி வித்தியாலயம்
வேலணை மத்திய மகாவித்தியாலயம்
இடைநிலைக் கல்வி: தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
தொழில் தகைமை:- விசேட பயிற்சி- கணிதம்

**சேவை விபரம்**

- யாழ்/வேலணை ஆத்திசூடி வித்தியாலயம்: 02.10.1970- 14.02.1971
- யாழ்/ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை: 15.02.1971-31.12.1972
- கண்டி/கதின்னா அல்மனார் மகா வித்தியாலயம்:- 01.01.1973- 31.12.1974
- கொ/வனதமுல்ல R.C.T.M.S : 01.01.1975- 31.01.1975
- கொ/D.S.சேனநாயக்கா கல்லூரி:- 01.02.1975 - 31.12.1981
- யாழ்/அரியாலை சிறிபார்வதி வித்தியாலயம்:- 01.01.1982- 02.02.1982
- யாழ்/சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் - 03.02.1982- 24.02.1982
- யாழ்/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் - 25.02.1982- 31.01.1992
- யாழ்/ மத்திய கல்லூரி :- 01.02.1992- 20.02.2003
- பகுத் தலைவர்:- 20.02.2003 - இன்றுவரை

## அதிபரின் வாழ்த்துச் செய்தி



கணிதத்துறை மத்திய கல்லூரியிலே கணிசமாக வளர்ந்துள்ளது. தேசிய பாடசாலையாக இருந்தும் சராசரி அறிவுடைய அல்லது தாழ்ந்த மட்ட அறிவுடைய மாணவர்களை அதிகப்படியாக உள்வாங்கும் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் மிகுந்த அர்ப்பணிப்புடன் பல நாட்கள் முயன்றே உயர்ந்த பெறுபேற்றை தக்கவைக்க முடிகின்றது. இத்தகு முயற்சியின் மூலவேராக அல்லது மூலவராக பேரின்பநாதன் அவர்களைக் கூறலாம். ''பாடசாலைக்கு அவர் ஒரு வரம், கணிதத்துறைக்கு அவர் ஒரு கலங்கரைவிளக்கு''. சிறந்த ஆன்மீகவாதியாகவும், மனிதநேய பண்பாளராகவும் விளங்கும் இவரை ஆசிரியராக, நிர்வாகியாகக் கண்ட பலருக்கு இவர் சிறந்த சமயப் பிரசங்கி என்பதும் கல்லையும் கரையச் செய்யுமாறு உள்ளம் உருகக் குரல் தந்து இசைதந்து பாடல் பலதரும் பாவலன் என்பதும் தெரியாமல் இருக்கலாம். தக்கார் தகவிலார் என்பது அவர் அவர் எச்சத்தால் அறியப்படும் என்றார் வள்ளுவர். இவரது புத்திரிகள் மூவரும் கல்வியில் உயர்ந்து மருத்துவ, பொறியியற் துறைகளில் தாரகைகளாக விளங்குவது இவரது பணியின் மேன்மைக்குப் பரிசாகும். வாழ்க பல்லாண்டு வளர்க நும்புகழ்.

திரு.T.ஓங்காரமூர்த்தி, அதிபர்.
யா/யாழ் மத்திய கல்லூரி.

## கடமையே கண்ணானவர்..



இரண்டு தசாப்தங்களாக மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்க அயராது பாடுபடும் அருஞ்சேவையாளரும் கணித ஆசிரியரும், பகுதித்தலைவருமாகிய திரு.சோ.பேரின்பநாதன் அவர்களை ஆசிரியர் சார்பாக வாழ்த்துவதில் யான் பெருமையடைகிறேன். ஆசிரியர்கள் இரண்டு விதமாக உருவாகின்றனர் என ஆன்றோர் கூறுகின்றனர். ஒன்று பிறப்பால் ஆசிரியராக உருவாகின்றனர், மற்றொன்று சந்தர்ப்பம் சூழ்நிலையால் உருவாகின்றனர் மதிப்புக்குரிய ஆசிரியர் பிறப்பால் ஆசிரியராக உருவாகியிருப்பதை அவர் ஏற்றுக்கொண்ட கடமையும், மாணவர்களிற்கு அவர் ஆற்றிவரும் நேரகாலம் பாராத சேவையும் மெய்ப்பித்து நிற்கின்றன. மாணவர்களின் அகவயத் தன்மைக்கேற்ப கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி மகிழ்ச்சிகரமாகக் கற்பித்தது யாவரும் அறிந்த விடயம். மணவர்களின் கற்றல் நேரங்கள் வீணடிக்கப்படக்கூடாது என்பதில் கண்ணுங் கருத்துமாக செயற்பட்டு ஆசிரியர் அல்லாத நேரங்களில் சகல பாடங்களையும் கற்பிப்பதில் கைதேர்ந்த வல்லாளன். மாணவருக்கு இவர் செய்யும் கடமையின் பிரதிபலன் அவரது குடும்பத்தில் பல மடங்காக வெளிப்பட்டு நிற்பது நிஜத்தில் நிஜம். எச்செயலைச் செய்விக்க முன் அச்செயலைத் தான் செய்துகாட்டுவதினூடாக ஏனையோரும் தாமாக செய்யவேண்டும் என்ற மனநிலையை உண்டு பண்ணும் செயல்வீரன். கணிதப்புலமையோடு, ஆங்கில மொழித்தேர்ச்சியும் சைவத்தில் ஆழ்ந்த பற்றும் இவருக்கு அணி சேர்ப்பனவாய் அமைந்துள்ளன. இவ்வாசிரியரின் நற்பண்பை நாமும் ஏற்று அவர் ஓய்வு காலத்தில் பேரின்பம் பெற்று பெருவாழ்வு வாழ வாழ்த்துவோமாக.

திரு.ச.சுகிர்தன், செயலாளர், ஆசிரியவட்டம்.

## வாழ்த்துச் செய்தி



வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட ஆறுமுக நாவலரை உருவாக்கிய யாழ். மத்திய கல்லூரியில் அன்று தொட்டு இன்றுவரை இந்துசமய செயற்பாடுகள், மற்றும் சைவக்கல்வி என்பன மேன் நிலையில் இருந்து வருகின்றன. அப்பணியினைக் குன்ற விடாது இரு தசாப்தங்களாகப் பேணி வந்த இந்து சமய ஆசிரியர் திரு.ப. ஜெகநாதன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். இவர் இக்கல்லூரி மாணவர்களின் சமயபாட அடைவை முழுமையாக உயர்த்துவதில் வெற்றி கண்டவர். அத்துடன் பாடசாலையில் சமயம்சார் பண்டிகைகள், விரதங்கள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அதிக அக்கறை கொண்டு மாணவர்களை அதன்பால் வழிப்படுத்தியவர். சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லோருடனும் அன்பாகப்பழகி, பண்பாகப் பேசி ஆசிரிய உலகிற்கு முன்மாதிரியாகச் செயற்பட்டவர். இற்றைவரை கல்வி, சமயப்பணிகளில் திருப்தியுடன் சேவையாற்றிய ஆசிரியரை அவர் ஆற்றிய பணிகளுக்காக எமது வலயம் சார்பாக பாராட்டுவதோடு இவரின் ஓய்வுக் காலத்தினை சைவ சமயப்பணிகளில் ஈடுபடுத்தி சீரோடும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகிறேன்.

திருமதி அ.வேதநாயகம்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணக் கல்வி வலயம்.

## அமைதியே உருவான ஜெகநாதன்



யாழ்.மத்திய கல்லூரியில் நான் பணிபுரிந்த காலத்தில் கூடவே பணிபுரிந்த ஆசிரியர். தனித்துவமான குணநடையும், அமைதியான சுபாவமும் கொண்ட நற்பண்பாளர். தமிழையும் சைவத்தையும் போற்றுகின்ற சிறந்த பாரம்பரியமுடைய சித்தவைத்தியர் பரம்பரையில் உதித்தவர். இவர் சைவசமய பாடத்தை தனது பிரதான போதனா பாடமாகக் கொண்டு மாணவர்களை சமய ஒழுக்க விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு தனது நீண்டகால ஆசிரிய சேவையில் தன்னை அர்ப்பணித்தவர். சைவசமயம் என்றால் ஜெகநாதன் ஆசிரியர் என்று கூறத்தக் கவகையில் குறித்த பாடத்துடன் ஒன்றிணைந்து நின்றவர். சக ஆசிரியர்களுடன் பழகுவதிலும், நிர்வாகத்துடன் ஒத்துழைப்பதிலும் நேர்மனப்பாங்கைக் கொண்டவர். இத்தகைய ஆசிரியர் கல்வி உலகிற்கு முன்மாதிரியாகச் செயற்பட்டவராவார். ஓய்வுபெற்றுச் செல்லும் இவ்வாசிரியர் தனது ஓய்வுக் காலத்தை மகிழ்வுடன் சகல சௌபாக்கியமும் பெற்று வாழ வாழ்த்துகிறேன்.

திருமதி வ.சிவபாலன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

## உயர் திரு- ப.ஜெகநாதன்-
### சிரேஷ்ட இந்துசமய ஆசிரியர்
### S.L.T.S.-I



**சுயவிபரம்**

- பெயர்: பரமானந்தம் ஜெகநாதன்
- பிறந்த திகதி:- 15.09.1950
- பிறந்த இடம்:- நல்லூர்.
- ஆரம்ப, இடை நிலைக் கல்வி:- யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி.
- தொழில் தகைமை:- விசேட பயிற்சி, இந்து சமயம்.

**சேவை விபரம்**

- திரு/பேராறு பரமேஸ்வரா மகாவித்தியாலயம்- 15.10.1979- 31.12.1983
- யாழ்/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை- 01.01.1984- 31.12.1985
- யாழ்/ அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயம் - 01.01.1986- 14.09.1987
- யாழ்/ ஸ்கந்தவரோதயா கல்லூரி - 15.09.1987 - 12.02.1992
- யாழ்/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் - 13.02.1992- 28.02.1993
- யாழ்/மத்திய கல்லூரி - 01.03.1993- 14.09.2010

**ஆசிரிய வட்டம் 2010**
**யாழ்.மத்திய கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபரின் வாழ்த்துச் செய்தி



நல்ல ஆசிரியராக நல்ல மனிதராக நல்ல பண்பாளராக விளங்கும் திரு.ப.ஜெகநாதன் ஆசிரியர் சிறந்த ஆயுள்வேத மருத்துவரும் ஆவார். மருத்துவர் எவ்வாறு ஒருவரது உடல் நோயைப் போக்கி உயிர்காப்பாரோ அதைப்போலவே இவரும் மாணவர் உளநோய்களைப் போக்கி ஆறிவூட்டுவார். இந்து சமயத்துறையின் தூணாக விளங்கிய இப் பெருந்தகை பாடசாலையை விட்டு ஓய்வு பெறுகின்றார் என்பது கவலை தருகின்ற ஆனால் தவிர்க்க முடியாத விடயம் ஆகும். பிறரது மனம் புண்படப் பேசாமை, பொறுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, அன்பு, அகிம்சை, அறிவு யாவும் ஒருங்கே அமையப்பெற்ற மனிதர்களை இக்காலத்தில் காண்பது அரிது எனினும் இவரை முன்மாதிரியாகக் கொண்டு பல மாணவர்கள் இவ்வாறு உருவாகியுள்ளனர் என்பது மெச்சத்தக்க விடயமாகும். இவரின் ஓய்வுக்காலம் இனிதாக அமைவதாக.

திரு.T.ஓங்காரமூர்த்தி, அதிபர்,
யா/யாழ்.மத்திய கல்லூரி.

## நிகரற்ற சாதனையாளர்



மத்தியில் நடுநாயகமாக விளங்கி கல்வியினைப்பரப்பும் மத்திய கல்லூரியில் இரண்டு தசாப்தங்களைத் தன்னகத்தே கொண்டு சமயக் கல்வியைப் போதித்த சிரேஷ்ட ஆசிரியர் திரு.ப.ஜெகநாதன் அவர்களை ஆசிரியர்கள் சார்பாக வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்வடைகிறேன். மாணவர்களை உள்வாங்குவதில் எதுவிதசமய அறிவுசார் வேறுபாடுகளை நீண்டகாலமாக தவிர்த்து சகலமாணவர்களுக்கும் அபயக்கரம் நீட்டி அதன் தனித்துவத்தை மத்தியில் நீண்டகாலம் நிலைநாட்டி வருகிறது. இவ்வாறான பல அறிவு வேறுபாடு சார்ந்த மாணவர் மத்தியில் க.பொ.த. சாதாரண தரத்தில் சைவசமயபாடத்தில் 100% வீதசித்தியை நீண்டகாலம் தனித்து நின்று இன்றுவரை பேணிக்காத்து சாதனை படைத்தவர். எந்த நற்பண்புகளுக்கெல்லாம் உதாரணமாகக் கொள்ள வேண்டுமோ அவற்றிற்கெல்லாம் இலக்கணமான எமது மதிப்புக்குரிய ஆசிரியரை நாம் கண்முன்னே கொண்டு அவரது பண்புகளை நாமும் எம்முள்ளத்தே நிறுத்தி ஓய்வு காலத்தில் நலமே வாழ இறைவனைப் பிரார்த்திப்போமாக.

திரு.ஐ.தயாபரன், தலைவர்,
ஆசிரியவட்டம்.

# வவுனியா கல்வியியற் கல்லூரியில் அடுத்த ஆண்டு முதல் மீண்டும் கற்கை

வவுனியா,டிசெ.6

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் 2011ஆம் ஆண்டில் இருந்து ஆசிரியர் பயிற்சி நெறிகள் மீண்டும் ஆரம்பமாக உள்ளன. ஆறு துறைகளில் 140 மாணவர்கள் அனுமதிக்கப்பட உள்ளனர். இதற்கான தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி தொடக்கம் நலன்புரி நிலையம் செயற்பட்டமையினால் 2009,2010 ஆம் ஆண்டுகளில் பயிற்சி நெறிக்கு மாணவர் யாரும் அனுமதிக்கப்படவில்லை. அங்கு பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான உள்ளக பயிற்சி ஆசிரியர்கள் தவிர ஏனையோர் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, தர்க்ஹா நகர் உள்ளிட்ட வேறு கல்வியியல் கல்லூரிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியை மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டு வந்து கல்லூரியின் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கே.பேர்னாட் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து 10 மில்லியன் ரூபா செலவில் கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர் பயிற்சி தொடர்பான செயற்பாடுகள் 2011 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளன.

**பீடாதிபதி கருத்து**

கல்லூரியின் செயற்பாடுகள் தொடர்பாக வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி கே.பேர்னாட் கருத்து தெரிவித்ததாவது:

நலன்புரி நிலையமாக கல்லூரி பயன்படுத்தப்பட்ட காலப் பகுதியில் பயிற்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. நலன்புரி நிலையமாக இயங்கியதால் கல்லூரியின் விடுதிகள், நீர்விநியோகம் மற்றும் கட்டமைப்புக்கள் சேதமடைமந்தன.

தற்பொழுது இரண்டு மாணவர் விடுதிகளும் கற்றல் செயற்பாடுகளுக்கான வகுப்பறைகளும் நீர்விநியோகமும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டில் ஆறு பாடத் துறைகளுக்கு 140 மாணவர்கள் அனுமதிகப்பட்டுள்ளனர். 2012 ஆம் ஆண்டில் இருந்து கல்லூரி முழுமையாகச் செயற்படும் - என்று தெரிவித்தார் பீடாதிபதி கே.பேர்னாட். (உ-11)

# புதுக்குடியிருப்பில் காலபோகம் மழை வெள்ளத்தால் அழிவு

முல்லைத்தீவு,டிசெ.6

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வெளிவயல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை தற்போது ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையினால் சுற்றியுள்ள ஆறுகள் பெருக்கெடுத்து பாய்வதால் நீர்வடியாது காலபோகச் செய்கை அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தொடரும் மழை காரணமாக வெள்ளம் வடியாது உள்ளதாகவும் செய்கையினை மேற்கொண்ட செலவுகளை எவ்வாறு ஈடு செய்வது என்று தெரியாதுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது மீள்குடியேறி தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த தொடங்கும் இவ்வேளை இயற்கை அழிவு ஏற்பட்டு தம்மை மேலும் கவலையடைய செய்து விட்டது என்று விவசாயிகள் தரப்பில் கூறப்படுகிறது. (ம-500)

## நீர் விநியோக இணைப்புக்கள்

முல்லைத்தீவு, டிசெ.6

முல்லைத்தீவு மற்றும் ஏனைய வட மாவட்டங்களில் 30 ஆயிரம் புதிய நீர் விநியோக இணைப்புக்கள் வழங்கப்படவிருக்கின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இந்தப் புதிய நீர் விநியோக இணைப்புக்கள் 164 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் வழங்கப்பட விருக்கின்றன. (க-500)

# ஒட்டுசுட்டானில் மீளக் குடியமர்ந்த மக்கள் தொடர் மழையால் பாதிப்பு

முல்லைத்தீவு,டிசெ.6

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையினாலும் இடையிடையே வீசும் காற்றினாலும் மீள்குடியேறிய மக்கள் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர்.

மழையுடன் கூடிய காற்றினால் சாளம்பன் பகுதியில் உள்ள வீடுகளின் கூரைகள் காற்றினால் தூக்கி எறியப்பட்டுள்ளன.

இடையிடையே காற்று வீசுவதால் பலத்த காற்று வீசக்கூடும் என மக்கள் அஞ்சுவதுடன் தமது தகரத்திலான வீடுகளை மேலும் பலப்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் தறப்பாளாலான குடிசைகளில் வாழும் மக்கள் மிகவும் அச்சமடைந்து வருகின்றார்.

தாழ் நிலப் பகுதிகளில் உள்ள பேராறு, பண்டாரவன்னி, ஜீவநகர் மக்கள் வெள்ளம் ஏற்படுமோ என்று அச்சமடைந்து வருகின்றனர். (ம-500)

# ஒட்டுசுட்டான் பேராற்றில் நாளாந்தம் சட்டவிரோதமாக கால்நடைகள் அறுப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,டிசெ.6

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பேராற்றுப் பகுதியில் களவாக கால்நடைகள் தினமும் வெட்டப்படுவதால் அப்பகுதி மக்கள் சில இடையூறுகளை எதிர்கொண்டு வருவதாகக் கவலை வெளியிட்டுள்ளனர்.

பேராறுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி ஒருபுறம், கால் நடைகளை களவாக வெட்டுவது மறுபுறம் தீவிரமாக நடைபெறுகிறது.

இதனால் கால்நடை எச்சங்களால் மழை நேரத்தில் துர்நாற்றம் வீசுவதுடன் கால்நடை எச்சங்களை நாய்கள் வீடுகளுக்கு எடுத்து வருவதாகவும் சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச் செயற்பாடுகளை மேற்கொள்வோர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-500)

# கிளிநொச்சியில் பொலிஸ் நிலையம் புதனன்று பிரதமரால் திறந்து வைப்பு

கிளிநொச்சி, டிசெ.6

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ''மஹிந்த சிந்தனையின்'' புதிய காவல்துறை நிலையங்களை நிர்மாணிக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி காவல்துறை பணிமனை நேற்று முன்தினம் முற்பகல் 11.15 மணிக்கு பிரதமர் டி.எம்.ஜயரட்னவினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.



இந்த நிகழ்வு பொலிஸ் மா அதிபர் கலாநிதி மஹிந்த பாலசூரியவின் தலைமையில் நடைபெற்றது. இலங்கை புகையிலைக் கம்பனியின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த நிலையம் தேசியநல்லிணக்கம், சிநேகபூர்வம், சிறந்த மக்களுறவு என்பவற்றின் அடையாளமாக மஹிந்த சிந்தனையின் நெறிப்படுத்தலில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் பிரதி பொலிஸ் மா அதிபர் சிசில் பெரேரா, வட பிராந்திய பிரதி பொலிஸ் அதிகாரி காமினி சில்வா, தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள், நிறுவன பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் பங்கேற்ற வர்களுக்கு 5 கிலோ அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன. இந்த நிலையப் பொறுப்பதிகாரியாக திஸநாயக்க கடமையாற்றுவார் என தெரிவிக்கபட்டுள்ளது. (ஐ-301)




# மக்கள் வாழ்விடங்களில் படையினர்; வசந்தபுரம் மக்கள் நெருக்கடியில்

முல்லைத்தீவு,டிசெ.6

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வசந்தபுரம் பகுதியில் மீள்குடியேறிய மக்களது வாழ்விடங்களில் படையினர் நிலைகொண்டிருப்பதால் தமது இருப்பிடங்களை விடுத்து வீதியோரங்களிலும் வெற்றுக் காணிகளிலும் தற்காலிக கொட்டில்களில் அவர்கள் வசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது தொடர்ந்து பெய்து வரும் மழையால் மிகுந்த இடர்பாடுகளை எதிர்கொள்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

மழைதொடர்வதால்தமது இருப்பிடங்களை உறுதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இடப்பெயர்வின் போது அனுபவித்ததை விட தற்போது மேலும் துன்பமடைவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

# முல்லைத்தீவில் விலங்குகள் சரணாலயம்

முல்லைத்தீவு,டிசெ.6

முல்லைத்தீவில் சுமார் 40,000 ஹெக்டேயர் பரப்பளவான பிரதேசம் வன விலங்குகள் சரணாலயமாக மாற்றப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இலங்கையின் வன விலங்குகளைப் பாதுகாப்பதற்காகவே இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் காட்டு யானைகளின் எண்ணிக்கை 15 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரம் வரையாக குறைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இலங்கையின் வடக்கில் மட்டும் பெரும் எண்ணிக்கையான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் இவை முழுதாக அகற்றப்பட்ட பின்னர் அடுத்தவருடம் அளவில் இச்சரணாலயம் மக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்படும் எனவும் வன விலங்கு அதிகாரியொருவர் தெரிவிக் கின்றார். (ம)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள்; வவுனியாவில் விழிப்புணர்வு நிகழ்வுகள்

பண்டாரிக்குளம்,டிசெ.6

வவுனியா மாவட்டத்தில்-பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைக்கும் நோக்கில் கடந்த வாரம் முதல் பல்வேறு விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாக வவுனியா பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது- சிறுவர்கள், பெண்கள் அபிவிருத்தி அமைச்சின் அறிவுறுத்தலின் பிரகாரம் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான அறிவை வன்முறைகள் அதிகமாக நிகழும் பிரதேசங்களில் மேற்கொண்டு வருகிறோம். 16நாள் வேலைத்திட்டம் என்ற வகையில் - திட்டமிட்டு இது செயற்பட்டு வருகிறது.

அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் தாக்கம் அதிகமாக உள்ள பகுதிகளான செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவில் உள்ள செட்டிக்குளம், கல்கன்குளம் கிராம சேவையாளர் பிரிவுகள் [illegible] வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கற்குளம், சிதம்பரபுரம், முருகனூர், ஆச்சிபுரம் பகுதிகள் மற்றும் கணேசபுரம், சமயபுரம் கிராமசேவையாளர் பிரிவுகளிலும் விழிப்புணர்வு செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

இச்செயற்றிட்டங்களுக்கு சமூகசேவை உத்தியோகத்தர், கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம முன்னேற்றச்சங்கம், மாதர்சங்கங்களின் பிரதிநிதிகளினதும் ஒத்துழைப்புக் கோரப்பட்டுள்ளது. வவுனியா பொது வைத்தியசாலையின் பெண்கள் வன்முறைக்கு எதிரான பிரிவு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியும் பெற்று நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை மண்டபங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்.மாவட்டத்தில் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக் கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபத்திலும், 8ஆம் திகதி புதன்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்திலும் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டம் இரண்டு பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டு யாழ்ப்பாணம்I, யாழ்ப்பாணம் II என்ற வகையில் பரீட்சை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள 5கல்வி வலயங்களில் யாழ்.கல்வி வலயத்தில் கோப்பாய்க் கல்விக் கோட்டம் தவிர யாழ்ப்பாணம், நல்லூர்க் கல்விக் கோட்டங்களும், தீவகம், தென்மராட்சிக் கல்வி வலயமும் யாழ். பிராந்தியம்I பிரிவிலும், கோப்பாய் கல்விக் கோட்டம், வலிகாமம் கல்வி வலயம், வடமராட்சி கல்வி வலயம் உள்ளடங்கியது யாழ் பிராந்தியம் II என்ற வகையிலும் பரீட்சைக்கான பிரிவுகளாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.பிராந்தியம் I இல் பரீட்சைக் கடமையில் ஈடுபடுபவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் அறிவுறுத்தல் கூட்டத்திலும் யாழ் பிராந்தியம் II இல் பரீட்சைக் கடமையில் ஈடுபடுவர்கள் 8ஆம் திகதி புதன்கிழமை கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும் அறிவுறுத்தல் கூட்டத்திலும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-11)


## யா/ பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கக் கூட்டம்

மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் எதிர் வரும் (08.12.2010) புதன்கிழமை பி.ப.2.00 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடவுள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(106907) அதிபர்


## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்.பல்கலைக்கழகப் பொருளியற் துறை முதுநிலை விரிவுரையாளர் சி.விஜயகுமார் எழுதிய ''பருநிலை மற்றும் நுண்பகப் பொருளியற் கோட்பாடுகள்'' எனும் நூல் அறிமுகவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்.சண்முகலிங்கனும், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் புஸ்பரட்ணமும், நூல் அறிமுகவுரையை நிதி முகாமைத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் மா.நடராஜசுந்தரமும் நிகழ்த்தவுள்ளனர். (ஒ-9)

## வீதி சேதம்

தென்மராட்சி, டிசெ.6

வரணி, திட்டிவேரம் அம்மன் கோயிலிலிருந்து மிருசுவிலுக்குச் செல்லும் வீதியில் பல இடங்களில் பள்ளங்கள் ஏற்பட்டு வெள்ளம் தேங்கி நிற்பதால் இந்த வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மோட்டார் சைக்கிள், சைக்கிள் போன்றவற்றில் செல்வோரும், நடந்து செல்வோரும் இந்த பாரிய குழிகளில் விழ்ந்து செல்லும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (204-207)

## மரக்கிளை விழுந்து சிறுவன் காயம்

தென்மராட்சி, டிசெ.6

ஊஞ்சல் கயிறு கட்டியிருந்த மரக்கிளை முறிந்து சிறுவனின் தலையைத் தாக்கி காயப்படுத்தியது.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி பெரிய மாவடியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த ஆர். அனுஷன் (வயது 10) என்னும் சிறுவன் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை [illegible] (204-207)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கந்தையா இராசபூபதி

தாயின் மடியில்: 07.12.1932



இறைவனடியில்: 06.11.2010

அன்பின் திருவுருவாய், பாசத்தின் முகவரியாய் குடும்பத்தின்
ஒளி விளக்காய் எங்களை வழிநடத்தி வாழவைத்த தெய்வமே!
அருட்பெரும்சோதியில் கலந்து முப்பத்தொரு நாள்கள்
ஓடி மறைந்தனவே அம்மா! உங்கள் நினைவுகள் நீங்காது
அம்மா! எங்கள் எல்லோருடைய கண்ணீரால்
உங்கள் பாதங்களை அர்ச்சித்து நிற்கின்றோம் அம்மா!

கடந்த 06.11.2010 அன்று இறைபதம் அடைந்த எம் குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (06.12.2010) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் இடம்பெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

(106727)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள் — 1248 சிகப்பு

கன்னி — 04 05 27 44 — 03-12-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 7,079,700/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 222,328 | 20/- | 4,446,560/- |
| 2 இலக்கங்கள் | 20,436 | 40/- | 817,440/- |
| 1 இல. + லக்கினம் | 20,275 | 60/- | 1,216,500/- |
| 2 இல. + லக்கினம் | 1,820 | 200/- | 364,000/- |
| 3 இலக்கங்கள் | 544 | 1000/ | 544,000/- |
| 3 இல. + லக்கினம் | 50 | 10,000/- | 500,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 200,000/- | 800,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 7,079,700/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,688,500/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 583 | | 690,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 266,040 | | 9,378,500/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகைரூபா 7,576,575/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் — 08 11 33 42 — ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 580 | 500/- | 290,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 200,000/- | 200,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 583 | | 690,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-



வீட்டுப் பாவனைக்குத் தேவையான அனைத்தும் குறைந்த விலையில்...




ஞாயிற்றுக்கிழமையிலும் திறந்திருக்கும்

டைடஸ் ஸ்ரோர்ஸ்

புறக்கோட்டை 2439422
லிபட்டி பிளாசா 2574446



## ஐந்தாண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11.09.1931 — மறைவு 02.12.2005

திதி: துதியை

அமரர் ஐயாத்துரை பூபாலசிங்கம்

ஆண்டுகள் ஐந்து சென்றாலென்ன
ஆண்டுகள் ஆயிரம் வந்தாலென்ன
உங்கள் அன்பு என்றும் எம் நெஞ்சில்
அழியாத கோலங்கள் தான் அப்பா!

இல.11, பலட்டி அர்ரான் வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா நினைவில்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## மஹஜன சம்பத — Mahajana Sampatha — 03.12.2010

OFFICIAL RESULTS — Draw Number 2326

Winning Letter: M — Winning Numbers: 8 1 3 3 9 2

Right to left Prize structure

| Prize | Numbers | Amount | Prizes |
|---|---|---|---|
| Super Prize | M 8 1 3 3 9 2 | Rs. 13,429,579/= | - Prize |
| 1st Prize | 8 1 3 3 9 2 | Rs. 2,000,000/= | 01 Prizes |
| 2nd Prize | 1 3 3 9 2 | Rs. 100,000/= | 08 Prizes |
| 3rd Prize | 3 3 9 2 | Rs. 10,000/= | 122 Prizes |
| 4th Prize | 3 9 2 | Rs. 1,000/= | 1253 Prizes |
| 5th Prize | 9 2 | Rs. 100/= | 12392 Prizes |
| 6th Prize | 2 | Rs. 20/= | 122693 Prizes |

Left to Right Prize Structure

| Prize | Numbers | Amount | Prizes |
|---|---|---|---|
| 7th Prize | 8 1 3 3 9 | Rs. 10,000/= | 13 Prizes |
| 8th Prize | 8 1 3 3 | Rs. 1,000/= | 123 Prizes |
| 9th Prize | 8 1 3 | Rs. 100/= | 1245 Prizes |
| 10th Prize | 8 1 | Rs. 50/= | 12236 Prizes |
| 11th Prize | M | Rs. 20/= | 49141 Prizes |

Total Prize Won in this Draw Rs. 10,938,180.00

Prizes of Rs. five lakhs or over are liable to govt taxes. winner must produce the National ID card and claim prizes. winning tickets are valid for a period of 6 months from the date of the drow.

Enriching your lives - enriching your land

National Lotteries Board

234/2 Galle Road, Colombo 03. Tel: 2470662, 4607000, Hotline: 2433631 website: www.nlb.lk



## மகளிருக்கான விடுமுறைக்கால 10 நாள் வகுப்புகள்

25 ஆவது ஆண்டில் கலாலயா பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்

கூந்தல் அலங்காரம்: 50 வகையான கொண்டைகள் போடுதல்.

* முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 5 வித முடி வெட்டுதல், எவ்வித சிரமமுமின்றி தமக்குத்தாமே முடி வெட்டுவதற்கான பயிற்சி.

Facials, கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் Waxing, தலை மசாஜ் செய்தல். எவ்வித சிரமமுமின்றி தமக்குத்தாமே Facial செய்வதற்கான பயிற்சி.

இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

* தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts சட்டைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சிகள்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

ஆரம்பம் - 10-12-2010 வெள்ளி காலை 9.00 மணி

மேலும் விபரங்களை பிப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு அடைக்கலம் வழங்கும் அரசு தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யாதது ஏன்?

எத்தனை சிரேஷ்ட விசர் நாய்கள் கொல்லப்படும் என்பதை 12 ஆம் திகதி ஸ்ரீ கோத்தாவிலேயே தீர்மானிக்கப்படும் என்கிறார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

வெள்ளியன்று நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் தயாசிறி ஜயசேகரவினால் எழுப்பப்பட்ட இடைக் கேள்விக்கு இப்படிக் குத்தலாகப் பதிலைக்கொடுத்தார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

இது எப்படி இருந்தது என்றால் தடியைக் கொடுத்து அடியை வாங்கிக்கொண்டது போல் ஆகிவிட்டது.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா நாட்டின் விசர் நாய் கடிக்கான தடுப்பூசிகள் போடப்படுகின்றன. நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

அப்போது குறுக்கிட்ட ஐ.தே.க. எம்.பியான தயாசிறி ஜயசேகர கௌரவ அமைச்சர் அவர்களே இந்த ஆண்டில் எத்தனை சிரேஷ்ட வெறி நாய்களுக்கு தடுப்பூசி போடத் திட்டமிட்டுள்ளீர்கள் என்று இடைக் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டார் அமைச்சர். நீங்கள் கேட்ட கேள்விக்கு சரியான விடை அடுத்த 12 ஆம் திகதி ஸ்ரீகோத்தாவில் தான் தீர்மானிக்கப்படும் என்று பதிலடி கொடுத்தார் அமைச்சர். பாவம் தயாசிறி ஜயசேகர வாயடைத்துப்போனார்.

சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் சபை கூடியது. வழமையான வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது.

மாத்தளை மாவட்ட ஐ.தே.க. உறுப்பினர் வசந்த அலுவிகார வெறி நாய் கடி தொடர்பான கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார்.

அதாவது விசர் நாய் கடியினால் வருடாந்தம் நூற்றுக் கணக்கானோர் இறக்கின்றனர். இதனைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கேட்டிருந்தார்.

இவ்வேளையில் சுகாதார அமைச்சர் சபையில் இல்லாததினால் ஆளும் கட்சிக் கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதில் அளித்தார்.

நீங்கள் குறிப்பிட்டதுபோல் விசர் நாய்க்கடி காரணமாக இறப்புகள் ஏற்படவில்லை. விசர் நாய் கடிக்கான மருந்துகள் சகல ஆஸ்பத்திரிகளிலும் உள்ளன.

அதேவேளை விசர் நோய்த் தடுப்புக்காக நாய்களுக்குத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன. இதற்கென சுகாதார அமைச்சு 361 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளது என்று அமைச்சர் பதில் அளித்தார்.

அப்போது இடைக்கேள்வி ஒன்றை எழுப்பினார் வசந்த அலுவிஹார. அமைச்சர் இறப்புகள் இடம்பெறவில்லை என்று கூறியது தவறு. கடந்த ஆண்டில் 56 பேர் இறந்துள்ளனர் என்று சுட்டிக்காட்டனார்.

நீங்கள் உங்களுடைய கேள்வியில் நூற்றுக்கணக்கானவர் என்று தானே குறிப்பிட்டுள்ளீர்கள். அதற்குத்தான் நான் பதில் அளித்துள்ளேன். நூற்றுக் கணக்காக இறக்கவில்லை. 56 பேர் தானே இறந்துள்ளார்கள் என்று இடக்குமுடக்கான பதில் அளித்தார். எனினும் நாய்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றி வருகின்றோம் என்றார்.

சும்மா இருக்க வேண்டாமா, தயாசிறி ஜயசேகர அவரும் ஒரு இடைக்கேள்வியைக் கேட்டு நல்ல அடிவாங்கிக் கொண்டது தான் மிச்சம்.

இன்னுமொரு சந்தப்பத்தில் ரவி கருணநாயக்க அமைச்சர் விமல் வீரவன்சவை உண்ணாவிரதம் இருக்கும்படி தூண்டினார்.

1978 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை இந்த அமைச்சின் மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

நாட்டில் வீடில்லாத பிரச்சினையைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்று கொழும்பு மாவட்ட ஐ.தே.க. உறுப்பினர் ரவி கருணநாயக்க அமைச்சர் விமல் வீரவன்ஸவிடம் கேள்வி எழுப்பினார்.

இக்கேள்விக்கு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அரைப் பகுதிக்குப் பதில் அளித்துக் கொண்டிருக்கும் போது அமைச்சர் விமல் வீரவன்ஸ சபைக்குள் வந்து விட்டார்.

இதனால் மிகுதியான விடைகளை அமைச்சரே வழங்குவார் என பைல் கட்டை விமல் வீரவன்ஸவின் பக்கம் நகர்த்திவிட்டார் தினேஷ் குணவர்த்தன.

1978 முதல் 1988 வரை 31276 வீடுகளும் 1989 முதல் 1999 வரை 299593 வீடுகளும் பிற்பகுதில் 2010 ஜூன் வரையில் 1210 வீடுகளும் என்ற அடிப்படையில் 4 லட்சத்து 12 ஆயிரத்து 419 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன என்றார் விமல்.

### பொய்யான தகவல் வேண்டாம்

ஐயா உங்களுடைய விவரங்கள் தவறானவை. உண்மையான விடயங்கள் முன் வைக்க வேண்டும் என்னுடைய தந்தை அமரர் ஆர்.பிரேமதாஸ இதை விட கூடுதலான வீடுகளைக் கட்டிக்கொடுத்தார்.

### சுண்ணாம்பு அடித்த வீடும் நீங்கள் கட்டியதா?

கௌரவ அமைச்சர் நிமல் சிறி பால டி.சில்வா சர்வதேச அரங்கில் நடைபெற்ற 'ஹெப்பி டாம்' சர்வதேச வீடமைப்பு மாநாட்டில் 18 லட்சம் வீடுகளை கட்டிக்கொடுத்துள்ளோம் என்று தம்பட்டம் அடித்து விட்டு வந்தார். இங்கு பார்த்தால் 5 லட்சம் வீடுகள் கூட கட்டப்படவில்லையே என்று அம்பாந்தோட்டை மாவட்ட எம்.பி. சஜித் பிரேமதாசா சுட்டிக்காட்டினார்.

அப்போது சபையில் இருந்த அமைச்சர் நிமல் சிறி பால டி

### சபையில் கேட்டவை

சில்வா நான் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபையின் விவரங்களைத்தான் சமர்ப்பித்தேன் என்றதோடு உங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு வீட்டுக்கு சுண்ணாம்பு அடிக்க ஒப்பந்தம் கொடுத்துவிட்டு வீட்டையே கட்டிக்கொடுத்தோம் என்று நீங்கள்தான் கூறினீர்கள் என்றும் பந்தைத் திருப்பிவிட்டார் அமைச்சர் நிமல்சிறிபா டி சில்வா.

### ஜன்னல் சட்டங்களும் வீடுகளும்

இதற்கு விளக்கமளித்தார் விமல் வீரவன்ஸ.

இங்கே நான் கொடுத்த விவரங்கள் வீடமைப்பு அதிகார சபை மூலம் கட்டப்பட்ட வீடுகளின் விவரம். இதற்கும் மேலாக வெளிநாட்டு நிறுவ னங்கள், டிரஸ்ட், சமுர்த்தி மற்றும் இலகு கடன்கள் மூலமாகவும் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

கௌரவ உறுப்பினர் சஜித் பிரேமதாச கூறியது போல் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க தனியான வீடமைப்புத் திட்டம் ஒன்றையே நடைமுறைப்படுத்தினார். இதில் தாமாகவே கட்டிக் கொண்ட வீடுகளையும் கடன் பெற்று கட்டிக்கொண்ட வீடுகளையும் விட ஒரு வீட்டுக்கு ஜன்னல் சட்டங்களை மட்டும் வழங்கி விட்டு அந்த வீட்டையும் நாங்களே கட்டினோம் என்று சேர்த்துக்கொண்டனர் என்றார் அமைச்சர் விமல்வீரவன்ஸ.

அப்படியானால் நாங்கள் வைத்த ஜன்னல்களுக்கு நீங்கள் கம்பிகளை யாவது போட்டு உங்களுடைய லிஸ்டிலும் சேர்த்துக் கொள்ளுங்களேன் என்று சிக்ஸர் அடித்தார் சஜித் பிரேமதாச

### உண்ணா விரதம் இருந்தாவது பணத்தை வாங்குங்கள்

இடைநடுவில் புகுந்து கொண்டார் ரவி கருணநாயக்க. அமைச்சர் அவர்களே, நீங்கள் கெட்டிக்காரர் எதையும் ஆராய்ந்து முடித்து விடுவீர்கள்.

ஆனால் உங்களுடைய வீடமைப்பு அமைச்சுக்கு ஒதுக்கியுள்ள பணம் தான் போதாது. எனவே நீங்கள் உண்ணாவிர தம் இருந்தாவது ஜனாதிபதியிடம் பணத்தைப்பெற்று வீடுகளைக் கட்டுங்கள் என்று கூறினார் ரவி கருணா நாயக்க.

எதற்கும் சுடச்சுட பதில் கொடுப்பதில் கெட்டிக்காரர் அமைச்சர் விமல்வீரவன்ஸ. ஆமாம் ரவி கருணநாயக்க சொல்வது சரி தான். ஆனால் உங்களைப் போல் சதொச நிறுவனத்தை விற்று சண்டே லீடர் முதலாளிக்கு அடகு வைக்கமாட்டோம். தவறான குறுக்கு வழிகளில் நாங்கள் போய் மூக்குடைபடமாட்டோம் எனப் பதிலடி கொடுத்தார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

### ஜயலத் சபாநாயகருக்கு புகழாரம்

கடந்த இரண்டு நாள்களாக சபையில் பெரும் நெருக்கடிகுள்ளான ஐ.தே.க. உறுப்பினரான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தான் நாடாளுமன்றில் உரையாற்றும் போது எவரையுமே சாடா மல் கடந்த இருதினங்களாக ஆளும்கட்சி உறுப்பினர்களும் சிரேஷ்ட அமைச்சர்களும் எனக்கு தொடர்ச்சியாக இடையூறு செய்த போதும் பலவந்தப்படுத்தப்பட்ட போதும் எனது சிறப்புரிமைகளைப் பாதுகாத்து நீதி வழங்கிய சபாநாயகருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

### காசோலையையும் ஜனாதிபதி எடுத்துக் கொள்வாரா?

யுத்தம் முடிந்துவிட்ட போதிலும் கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாக தமது தொழிலை செய்ய முடியாத நிலை. மீன் பிடிக்கவும் இராணுவத்தினரிடம் லைசன்ஸ் வாங்க வேண்டிய இக்கட்டான நிலை.

கடல் வழியாகப் பயங்கரவாதிகள் வருகின்றனர் என்பதால் கரையோரப் பாதுகாப்பும் ஜனாதிபதி எடுத்துக்கொண்டார். நகரில் இருந்தால் நகரையும் காட்டில் இருந்தால் காட்டையும் வீட்டில் இருந்தால் வீட்டையும் என எல்லாவற்றையும் ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சின் கீழ் எடுத்துக் கொள்வார். மற்ற அமைச்சர்களுக்கு எதையுமே விட்டு வைக்க மாட்டாரா உங்கள் ஜனாதிபதி என ஜே.வி.பி. உறுப்பினரான அனுரகுமார திஸநாயக்க கேட்டார்.

### புலிகளுக்கு விடுதலை போல் தமிழ்க் கைதிகளுக்கும் விடுதலை வேண்டும்

நேரடியாக இராணுவத்துடன் சண்டை பிடித்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அடைக்கலம் அளித்து புனர்வாழ்வு அளிக்கும் அரசாங்கம் தமது வாழ்நாளில் அரை வாசிக் காலத்தை சிறையில் கழித்து வரும் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். தடுத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ் இளைஞர் யுவதிகளுடன் சிறுகுழந்தைகளும் சிறை வாழ்க்கையை அனுபவிக்கின்றனர். இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. குற்றப்பத்திரிகை வழங்கப்படவில்லை. விசாரணையும் நடத்தப் படவில்லை. இவர்கள் வாழ்நாளில் அரைவாசிப் பகுதியை சிறைக் கூடங்களுக்கு மத்தியில் வாழவேண்டி உள்ளது. எனவே இவர்களை விடுதலை செய்யுங்கள் அல்லது பிணையிலாவது விடுதலை செய்யுங்கள் என்ற ஒரு வேண்டுகோளை முன்வைத்தார் ஆளும் கட்சியுடன் இணைந்துகொண்ட

உதயன் சபைச் செய்தியாளர்
இரா.புத்திரசிகாமணி

கொழும்பு மாவட்ட எம்.பியான பிரபா கணேசன்.

ஆளும் கட்சியில் இருந்து கொண்டு இப்படியான ஒரு வேண்டுகோளை அவர் விடுத்தது பாராட்டத்தக்கது.

கடந்த இரண்டு நாள்களாக கூச்சலும் குழப்பமுமாக இருந்த சபை நேற்றுமுன்தினம் சிறு சிறு சர்ச்சைகளுடன் ஓய்ந்தது.

### இடை நடுவில் பேச்சை நிறுத்திய விஜயகலா மகேஸ்வரன்

வழமையாக தனது பேச்சை எழுத்து வடிவில் கொண்டு வந்து வாசிப்பதோடு இடைக் கிடை தமிழிலும் சிங்களத்திலும் பேசி ஆளும் கட்சியினரை ஆச்சரியத்துக்குள்ளாக்கும் விஜயகலா நேற்று தனது பேச்சை ஆரம்பித்து சில நிமிடங்கள் மட்டும் பேசிவிட்டு தனது முழு உரையையும் சபா பீடத்தில் சமர்ப்பிப்பதாகக் கூறி அமர்ந்துவிட்டார். விஜய கலா அம்மையாரின் குரலைக் கேட்கமுடியாமல் போய் விட்டது.

ஆளுங்கட்சியினரின் குறும்புப் பேச்சுக்களுக்கும் இடமில்லாமல் போய் விட்டது.

# எந்தப் பொறுப்பும் இல்லாத அமைச்சர் மேர்வின் சில்வா

கொழும்பு, டிசெ.6

அமைச்சர் மேர்வின் சில்வா பொறுப்பேற்றுள்ள அமைச்சுக்கு எதுவித பொறுப்பும் ஒப்படைக்கப்படவில்லை.

அமைச்சுப் பொறுப்புகள் தொடர்பாக வெளிவந்துள்ள விசேட வர்த்தமானி அறிக்கை மூலம் அது அம்பலமாகியுள்ளது.

ஜனாதிபதியின் கீழ் வரும் தேசிய பாதுகாப்பு, நிதியமைச்சு உள்ளிட்ட 54 அமைச்சர்களுக்குக் கீழ்வரும் திணைக்களங்கள், அரசமைப்புச் சபை, கூட்டுத் தாபனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் அடங்கிய விசேட வர்த்தமானி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வெளிவந்துள்ள இந்த விசேட வர்த்தமானி அறிக்கையில், அமைச்சர் மேர்வின் சில்வா பொறுப்பேற்றுள்ள அமைச்சுக்கு பொறுப்புகள் ஒப்படைக்கப்படுகின்றமை தொடர்பில் கூறப்படவில்லை.

மேலும் அந்த வர்த்தமானி அறிக்கையில், சில அமைச்சுகளுக்கு ஒரு பொறுப்பு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளமை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சுக்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையும், மாகாண உள்ளூராட்சிகள் அமைச்சுக்கு, மாகாண உள்ளூராட்சி சபையும், தபால், தொலைத் தொடர்பு அமைச்சுக்கு, தபால் திணைக்களமும், அரச நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சுக்கு, தேசிய நிர்வாக மறுசீரமைப்புச் சபையும், மீள்குடியேற்ற அமைச்சுக்கு, மீள்குடியேற்ற அதிகார சபையும் பொறுப்புகளாக வழங்கப்பட்டுள்ளன என்று வர்த்தமானி அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிவந்துள்ள வர்த்தமானி அறிக்கையில், இம்முறை நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட விடயங்களும் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாளில் துயர் பகிர்கிறோம்



### அமரர் கி.சின்னையா அந்தோனிப்பிள்ளை

அன்னை மடியில்: 13★06★1929

ஆண்டவன் அடியில்: 06★11★2010

எமது கல்லூரியின் ஆங்கில ஆசிரியரான அ. அன்ரன் அன்பழகன் அவர்களின் தந்தையார் அமரர் கி.சின்னையா அந்தோனிப்பிள்ளை அவர்களின் 31 ஆம் நாளான (06.12.2010) இன்றைய நினைவு நாளில் அன்னாரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினரோடு நாமும் சேர்ந்து எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.
கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 578
திகதி 2010/12/04

சுப்பர் இலக்கம்: 21
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 21 25 58 70

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 34,373,148.00 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 02 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 14 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 324 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 616 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 15,433 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 8,916 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 223,231 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 35,720 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 11,042,960.00
சுப்பர் பரிசு சொத்து ஜீப் வண்டியுடன் மீதித் தொகை பணமாக
[illegible]

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 34,377,310.40

தேசிய லொத்தர் சபை
[illegible] www.nlb.lk

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு தொலைக்காட்சிப் பெட்டி

தென்மராட்சி, டிசெ.6

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஆண்கள் விடுதிக்கு 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

கனடாவிலிருந்து வருகை தந்துள்ள மிருசுவில் வடக்கைச் சேர்ந்த துரை ராசா சுரேஷ் என்பவர் இந்தத் தொலைக் காட்சிப் பெட்டியை அன்பளிப்பாக வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே நலன் விரும்பியொருவரால் வழங்கப்பட்ட தொலைக்காட்சிப்பெட்டி வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-207)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் காயம்

தென்மராட்சி, டிசெ.6

முன்பள்ளியிலிருந்து பிள்ளைகளை ஏற்றிவந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இரண்டு பிள்ளைகள் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை மீசாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த முருகதாஸ் (வயது44), ஆர். மதுஷன் (வயது 4), ஐதுகியா (வயது4) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (204-207)


### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No. 1, புறொயிலர் குஞ்சுகள் (நியாயமான விலையில்) 6.12.2010 இன்று காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

### வீடு விற்பனைக்கு

சிறுப்பிட்டி மத்தி நீர்வேலியில் -(சங்கக்கடைக்கு முன்பாக) 3 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0213008845


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் துரையப்பா பொன்னுத்துரை

மலர்வு 21★08★1931

உதிர்வு 06★11★2010

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு எம்மை நாடிவந்து உதவியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (06.12.2010) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

91, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் சரஸ்வதி சண்முகராசா

மலர்வு 18★10★1929


உதிர்வு 21★11★2010

குடும்பத்தில் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
எம்மை ஆற்றுப்படுத்தி
நல்வாழ்வு தந்த எம் அன்னையே!
என்றும் உங்களை நினைத்து
வணங்குகின்றோம்.

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## சண்முகம் செல்வரட்ணம்

கொழும்பு கொட்டாஞ்சேனையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வாழ்விடமாகவும், தற்போது லண்டன் Catford ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் செல்வரட்ணம் 24.11.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் செல்லக்கண்டு தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் மங்கையர்க்கரசி தம்பதியரின் மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், சுபோதினி, மஞ்சுளா, சுதாகரன் (KRS Lewisham), சசிதரன், விஜிதா, யசிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகன், சக்தி, சாந்தி, றஜனி, சத்யன் ஆகியோரின் அன்புமாமனாரும், ஷாமரன், ஷாமனி, மாதுளன், ஷாளன், ஷாயினி, அஷ்வின், அக்ஷயன், அகல்யன், ஷாங்கரி,ஷரன், தனுஜன், ஷாதுர்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ரத்தினாம்பாள், ராஜரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியம், நாகேஸ்வரி, ராணி, பத்மநாதன், சந்திரன், லோகன், குஞ்சு ஆகியோரின் மைத்துனரும் ராஞ்சி, சாந்தா, ஜெகந்நாதன்,குஞ்சுஅகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பத்மினி மற்றும் பபா, குமார் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2010) திங்கட்கிழமை மு.ப.1.45 மணியளவில் U.K இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
S.சுதாகரன்(மகன்).
00441689824980 (U.K)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில்

# சித்திரபாடத்துறை நீக்கப்பட்டதால் கல்விச் சமூகத்தினர் பெரும் கவலை

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் சித்திரப் பாடத்துறை நீக்கம் செய்யப்பட்டதால் கல்விச் சமூகம் பெரும் கவலை அடைந்துள்ளது.

கடந்த 10 வருடங்களாக சித்திரத் துறையின் பங்களிப்பு மிகச் சிறப்பாகவும், உத்வேகத்துடனும் ஆற்றிவரும் வேளையில் அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் சித்திரப்பாடத்துறை கல்லூரியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கல்விச் சமூகமும், உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களும் கவலை அடைந்துள்ளனர்.கடந்த 10 வருடங்களாகச் சித்திரத்துறை கல்லூரிக்கு ஆற்றிவரும் சேவைகள் எண்ணிலடங்காதது. அந்த வகையில் முதலாவது வருடத்திலிருந்து இன்றுவரை பல சிறப்பான களப்பயணங்கள், கருத்தரங்குகள், கண்காட்சிகள், சித்திரப் பயிற்சி வகுப்புக்கள், சுய ஆற்றல் வெளிப்பாடுகள் போன்றவற்றில் சித்திரத்துறை மாணவர்களின் பங்களிப்பு பெருமளவிலேயே காணப்படுகிறது.

பாடசாலை சித்திரப்பாட ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளபோது இக்குறைபாட்டினை எமது கல்லூரி நிறைவேற்றி வைப்பதில் அளவு கடந்த பங்களிப்பைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

எனவே யாழ். மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் சித்திரப் பாடத்துறையை நீக்குவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

சித்திரப் பாடத்துறை கல்லூரியிலிருந்து நீக்கப்படாமல் தொடர்ச்சியாக கல்லூரியிலேயே இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்யுமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-ற)

## யாழ். பிராந்திய அலுவலகம் ஊடாக 4,600 பேருக்கு இந்திய விசா

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய விசா விண்ணப்ப நிலையத்துக்கு ஊடாக இதுவரை 4 ஆயிரத்து 600 பேருக்கு இந்திய விசா வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த மே மாதம் ஐந்தாம் திகதி இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தினால் யாழ். பிறவுண் வீதியில் இந்திய விசா விண்ணப்ப நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

அன்று தொடக்கம் கடந்த நவம்பர் மாதம் வரையும் இந்திய விசாவுக்காக விண்ணப்பித்தவர்களில் 4ஆயிரத்து 600 பேருக்கு விசா அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வி.வி.எஸ்.குளோபல் என்ற முகவர் அமைப்பினாலேயே இந்த விசா விண்ணப்ப நிலையம் நடத்தப்பட்டு வருகிறது.

ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பியப் பிராந்தியங்களில் உள்ள 48 நாடுகளில் வி.வி.எஸ். குளோபல் முகவர் அமைப்பு செயற்பட்டு வருகிறது.

அத்துடன் சர்வதேச ரீதியாக 378 இற்கும் மேற்பட்ட விசா விண்ணப்ப நிலையங்களைக் கொண்டிருக்கின்றன.

33 தூதரகங்களுக்குரிய விசா நடைமுறைகளையும் மேற்படி நிலையங்கள் முன்னெடுத்து வருகின்றன.

இந்திய விசா விண்ணப்ப நிலையங்கள் இலங்கையில் கண்டி, கொழும்பு யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14)

## மதபோதகர் நடத்தை தவறால் ஏழாலை வடக்கு மக்கள் சீற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.5

ஏழாலை வடக்கில் உள்ள மதபோதகர் ஒருவரின் தவறான நடத்தையால் ஏழாலைப் பகுதி மக்கள் பெரும் சினம் அடைந்துள்ளனர். இதனைப் பொலிஸாரும் குறிப்பிட்ட பகுதி கிராம மட்ட அரச அலுவலரும் உறுதிப்படுத்தினர்.

குறிப்பிட்ட மதபோதகர் இளம் பெண்களை கையடக்கத் தொலைபேசி கமராவினால் புகைப்படம் எடுப்பதுடன் சிலருடன் பாலியல் சேட்டைகளில் ஈடுபடுகிறார் என்றும் குற்றச்சாட்டப்படுகிறது. அண்மையில் பாடசாலை ஒன்றின் பின்னால் இருக்கும் மக்கள் மீளக் குடியமர்ந்த பகுதியில் அமைந்துள்ள உடைந்துள்ள வீடொன்றினுள் பாடசாலை மாணவி ஒருவரை அழைத்துச் சென்ற இந்த மதபோதகர் அவருடன் தகாத முறையில் நடக்க முற்பட்டுள்ளார். உடனே மாணவி கூச்சலிட்டுள்ளார். கூச்சலைக் கேட்டு அருகில் உள்ள சனசமூக நிலையத்தில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் மூவர் குரல் வந்த இடத்துக்கு ஓடிச் சென்றுள்ளனர். அவர்களிடம் மதபோதகர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். எனினும் அவர்களை மிரட்டி அங்கிருந்து விரட்டி விட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிராம அலுவலர் மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதாக மதபோதகரால் மிரட்டப்பட்ட இளைஞர்கள் தெரிவித்தனர்.

இளைஞர்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து விசாரணைக்குச் சென்ற அப்பகுதிக் கிராம அலுவலர் போதகரின் தந்தையால் அவமரியாதை செய்யப்பட்டார் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (உ-68)

### ஆசிரியையின் துணிச்சலால் தப்பியது சங்கிலி

பாடசாலை சென்றுகொண்டிருந்த ஆசிரியையின் சங்கிலியை அறுக்க முயன்ற இளைஞனின் முயற்சி கைகூடாத நிலையில் தப்பிச் சென்றுள்ளான்.

சுன்னாகம் ஜெற் மோட்டார் ஒழுங்கையில் சைக்கிளில் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த ஆசிரியையின் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த நபர் அறுக்க முற்பட்டுள்ளார். ஆசிரியையின் துணிச்சலான நடவடிக்கையினால் அந்த முயற்சி தடுக்கப்பட்டது. (201-86)

### சடலத்தை இனங்காணுமாறு பொலிஸார் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிசெ. 06

யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட ஆணின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அந்தச் சடலத்தை இனங்காண உதவுமாறு யாழ்.பொலிஸ் நிலைய முறைப்பாட்டுப் பிரிவு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திலகரட்ண வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-15)

## தொடர்ந்தும் அவலத்தையே எதிர்கொள்ளும் சங்கானை நீதிவான் முகாம் மக்கள்

### யாழ்.அரச அதிபருக்கு தமிழரசுக் கட்சி கடிதம்



யாழ்ப்பாணம், டிசெ.6

சங்கானை நீதிவான் முகாமில் தங்கியுள்ள 74 குடும்பங்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றன.

காரைநகர் மடத்துவளவு பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த இவர்கள் சங்கானை நீதிவான் முகாமில் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் குடியிருக்கும் காணியின் உரிமையாளர்கள் அவர்களை வெளியேறுமாறு தெரிவித்துள்ளதால் இவர்கள் செய்வதறியாது திண்டாடுகின்றனர். அவர்களுக்கான மாற்று நடவடிக்கை எடுக்குமாறும் இலங்கை தமிழரசுக் கட்சி யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காரைநகர் 'துறைமுகம்' மடத்துவளவு பகுதியில் 1990ஆம் ஆண்டுவரை சுமார் தொண்ணூறு குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. இவர்கள் காரைநகர்-ஊர்காவற்றுறை படகுசேவை, கூலித்தொழில்போன்றவற்றைச் செய்துவந்தனர். சீநோர் நிறுவனத்திலும் சிலர் வேலை செய்தனர். இவர்களில் சுமார் நாற்பத்தி நான்கு குடும்பம் வரை தேசிய வீடமைப்பு அதிகார சபையின் குடியிருப்புத் திட்டத்திலும் ஏனையோர் தமது சொந்தக் காணிகளிலும் வாழ்ந்து வந்தனர்.

யுத்தநிலை காரணமாக 1990 ஆம் ஆண்டு இங்கிருந்து இடம் பெயரவேண்டிய சூழ்நிலையில் சங்கானைப் பிரதேசத்தில் ''நீதிவான் முகாம்'' என்ற முகாமில் கடந்த இருபது ஆண்டுகளாக வாழ்கின்றனர்.

இவர்கள் இடம் பெயர்ந்து குடிசை அமைத்து வாழ்கின்ற காணியின் உரிமையாளர்கள் இவர்களை காணியிலிருந்து வெளியேறுமாறு இப்பொழுது கோருகின்றனர். அதேநேரம், வலி.மேற்கு பிரதேச செயலகம் இவர்கள் மூன்று மாதங்களுக்குள் அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் எனவும் அதற்கு மேல் அவர்களுக்கான நிவாரணங்கள் நிறுத்தப்படும் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

இதனால் அவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர். இவர்கள் தமது சொந்த இடத்தில் மீளக் குடியமர முடியாத நிலை உள்ளது. இவர்கள் வாழ்ந்த தேசிய வீடமைப்பு அதிகார சபையின் குடியிருப்புப் பகுதியை பாதுகாப்புக் காரணமாக கடற்படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அதேநேரம் தமது சொந்தக் காணிகளிலும் அவர்களால் குடியமர முடியவில்லை. காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை,கண்ணிவெடி அபாயம் நீங்கவில்லையெனக் கூறி அங்கு மீள்குடியமர அனுமதி வழங்க முடியாதெனக் கூறியுள்ளது.

மீளக் குடியமரும் விடயத்தில் பலியாகுவது வீடமைப்புத் திட்டங்களாகவே உள்ளன. இவர்கள் விடயத்திலும் கடற்படையினர் விட்டுக்கொடுக்காத பட்சத்தில் இப்பிரதேசத்தில் உள்ள வெற்று நிலங்களில் வீடமைப்புத் திட்டத்தில் வசித்தோரைக் குடியமர்த்துதல் அரசின் பொறுப்பாகும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம் -என்றுள்ளது. (ம)

### நெருக்கடி...





அழிவு: தற்போது பெய்துவரும் மழையால் யாழ்.குடாநாட்டில் உள்ள வீதிகள் சேதமடைந்துள்ள நிலையில் வெள்ளத்தில் மூழ்கிக்காணப்படுகின்றன. இந்த நிலையில் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். பாஷையூர் யூதாதேயு சொரூப சந்தியில் இருந்து பழைய பூங்கா வீதிக்கு இடைப்பட்ட கடற்கரை வீதி, பிரதான வீதியில் லொயலாஸ் நிறுவன சந்தியிலிருந்து [illegible] இடைப்பட்ட வீதி ஆகியவற்றின் பரிதாப நிலை இது. வேறு பல வீதிகளும் இப்படி [illegible] காணப்படுகின்றன. (204-23)

## 'ரெலிகொம்' கம்பம் விழும் நிலையில்



யாழ்ப்பாணம், டிசெ. 6

யாழ்.நகரில் றக்கா வீதியில் உள்ள மைதானத்தின் அருகில் காணப்படும் தொலைத்தொடர்பு நிலையக் கம்பம் முறிவடைந்த நிலையில் காணப்படுவதனால் அந்த வீதியில் பயணிக்கும் பொதுமக்கள் பயத்துடன் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வீதியை நாளாந்தம் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

முறிவடைந்த இந்தப் கம்பத்துக்கு மிக அருகில் ஆரம்ப பாடசாலையும் அமைந்துள்ளது.

எனவே இந்த முறிவடைந்த தொலைத் தொடர்புக் கம்பத்தினை அகற்றி புதிய கம்பம் நடுமாறு அந்தப் பகுதி மக்கள் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
சிலர் மீது கோபம் வந்தாலும், வெளிக்காட்டாமல் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். உறவினர்கள் உங்களின் மன நிலையை அறிந்து செயற்படுவர். உடன் பிறப்புக்கள் உங்கள் மூலம் காரியம் சாதிக்க முற்படுவர். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சை தவிர்க்க வேண்டும். உதிரி வரவுகளைப் பெறலாம்.

**இடபம்:**
பிள்ளைகள் மனம் கோணாமல் நடக்க முற்படுவீர்கள். தேக ஆரோக்கியம் சீராகும். பணவரவு ஒன்றை எதிர்பார்த்து செலவு செய்வீர்கள். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். எந்த விடயத்திலும் முந்திக் கொண்டு செயற்படுவதை தவிர்க்கவும். சக ஊழியர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வெற்றிகரமான நாள்.

**மிதுனம்:**
சிறிய விடயத்திற்காக சிலரிடம் கோபித்துக் கொள்வீர்கள். எதிர்பாராத வகையில் செலவுகளைச் சந்திக்கலாம். அரசியலில் தொடர்புடையவர்கள் திடீர் பயணங்கள் செல்லலாம். வீண் பிடிவாதங்களைத் தவிர்த்து விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள். மனைவி அல்லது கணவன் உடல் நலனில் கவனம் அவசியம்.

**கடகம்:**
ஒருவருக்கு கடனாக பணம் கொடுக்கலாம். எந்த வேலையையும் புத்திசாலித்தனமாக செய்வீர்கள். உறவினர் ஒருவர் உங்களிடம் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிக்கலாம். தாயார் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். உங்களை பயன்படுத்தி சிலர் ஆதாயம் பெற முற்படலாம்.

**சிங்கம்:**
மனதில் புதுமையான எண்ணங்கள் தோன்றும். கணவன் மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் பணியில் அதிக ஈடுபாட்டுடன் செயற்படுவர். வெளியூர் பயணங்களால் திட்டமிட்ட காரியங்கள் நிறைவேறும். மாமன், மைத்துனர்கள் உதவிகரமாக இருப்பர். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும்.

**கன்னி:**
பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். எதிர்ப்புகளை சமாளிக்க நேரிடலாம். தந்தை வழி உறவுகளால் அனுகூலம் பெறலாம். அயலாருடன் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். திட்ட மிட்ட வேலை ஒன்றை செய்ய முடியாமல் ஏதாவது குறுக்கீடு ஏற்படலாம்.

**துலாம்:**
பிடிவாதமாக இருந்து நினைத்த காரியங்களை முடிப்பீர்கள். உங்களுக்கு எதிராக செயற்பட நினைத்தவர்களை தந்திரமாக வீழ்த்துவீர்கள். ஆதாயமான பணவரவுகளைப் பெறலாம். சகோதரர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர். சிலரை கேலி, கிண்டல் பேசி வெறுப்பேற்றுவீர்கள். அனுகூலமான நாள்.

**விருச்சிகம்:**
தேவையற்ற செலவுகளை தவிர்க்க வேண்டிய நாள். யாரையும் குறை கூறும் வகையில் பேச வேண்டாம். காலை நேரத்தில் முக்கியமான செய்தியைக் கேட்கலாம். ஒரு வகையில் சங்கடமான அனுபவத்தையும், மற்றொரு வகையில் சந்தோஷமான அனுபவத்தையும் எதிர்கொள்ளலாம். வீண் பயம் ஆள்கொள்ளும்.

**தனுசு:**
ஆதாயம் தரும் விஷயங்களில் ஈடுபடுவீர்கள். சந்தோஷமான அனுபவங்களால் மனதில் உற்சாகம், தெம்பு அதிகரிக்கும். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். உறவுப் பெண்கள் சிலர் மூலம் உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வீர்கள். வாய்ப்புகள் தேடி வரும்.

**மகரம்:**
எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். கடந்த காலத்தில் நீங்கள் செய்த உதவி ஒன்றுக்கு இப்போது பலன் கிடைக்கலாம். தந்தை வழியில் உருவான மனக்கசப்புகள் மாறி அன்பு அதிகரிக்கும். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். உறவினர்கள் சிலர் உங்களிடம் அவசர உதவி கேட்கலாம். சந்தோஷ செய்தி கேட்கலாம்.

**கும்பம்:**
சவால்களை, போட்டிகளை எதிர்கொள்ளும் நாள். நீங்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு உறவினர்கள் மத்தியில் மதிப்பு இருக்கும். சிலரை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைப்பீர்கள். சொந்த விவகாரங்களை, மற்றவர்களிடம் சொல்வதை தவிர்க்கவும். உங்களுக்கு வேண்டியவர்களுக்காக மற்றவர்களிடம் உதவி கேட்கலாம்.

**மீனம்:**
சுறுசுறுப்பாக செயற்பட நினைத்தாலும் ஏதாவது ஒரு வகையில் தடைகளை எதிர்கொள்ளலாம். விலை உயர்ந்த பொருள்களை கவனமாக கையாள வேண்டும். உடல் நலக் குறைவால் மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். புதிய முயற்சிகளை தவிர்க்க வேண்டிய நாள். பிறர் சொல்லும் வார்த்தைகளை நம்பி எதையும் செய்ய வேண்டாம்.

## மக்களுக்குச் சேவை.....




உதவி: இலங்கை செஞ்சிலுவைச்சங்க கோப்பாய் பிரிவின் ஏற்பாட்டில் விதவைகளுக்கு உதவிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளை உப தலைவர் டாக்டர் வை.தியாகராஜா உரையாற்றுவதையும் அருகில் பிரிவுத் தலைவர் இ.மயில்வாகனம், நிர்வாக உறுப்பினர்களான எஸ்.சந்திரலிங்கம், மு.பரமசிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் உதவிகள் பெறவந்த விதவைப் பெண்களையும் காணலாம். (204-236)

# வீதியில் தேங்கிய வெள்ளத்தை பொலிஸார் அகற்றினர்

தென்மராட்சி, டிசெ.6

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் பிரதேச செயலகம் முன்பாக தேங்கிநின்ற மழைவெள்ளம் பொலிஸாரின் முயற்சியினால் வெளியேற்றப்பட்டது.

இயந்திர வாகனம் மூலம் வீதியோரத்தில் வாய்க்கால் வெட்டப்பட்டு வெள்ளம் வெளியேற்றப்பட்டது.

வெள்ளம் தேங்கி நின்ற பாரிய பள்ளங்களைச் சீர்செய்யும் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதி மழை வெள்ளம் தேங்கி நின்றதால் வாகனங்கள் வேறு வீதிகள் ஊடாக திருப்பி விடப்பட்டன. (204-207)

# நேரம் வந்தாச்சு



''என்ன யோசிக்கிறீங்கள்?'' கண்ணன் தனது நண்பன் ராமுவைக் கேட்டான். ''அடுத்ததாக என்ன நாவல் எழுதலாம் என யோசிக்கிறேன்'' என்று கூறினார் நண்பர். ''நீங்கள் தொடர்ந்து எழுத வேண்டும். அதுதான் என்னுடைய ஆசை'' என்றார்.

''நீங்கள் புரிந்துகொண்ட அளவுகூடப் பத்திரிகைக்காரர்கள் என்னைப் புரிந்துகொள்ள வில்லை. மனவருத்தமாக இருக்கிறது'' என்றார் கண்ணன். ''அதைப் பொருட்படுத்தாதீர்கள், நீங்கள் எழுதிக் கொண்டே இருங்கள் மேல்நாட்டு நாடக ஆசிரியர் ஒருத்தர் அப்படித்தான் பல நாள்கள் எழுதினார். அவருடைய படைப்புக்களைப் பிரசுரிக்க யாரும் முன்வரவில்லை. பசியாலும் பட்டினியாலும் வாடினார். ஒருநாள் அவருடைய நாடகங்கள் அத்தனையையும் ஒரு மூடையாகக் கட்டிச் சுமந்துகொண்டுபோய் ஒரு கடையிலே எடைபோட்டு விற்றார்''.

கடைக்காரர் ஒவ்வொரு ஏடாக விரித்து பார்சல் கட்டும்போது சில பக்கங்கள் அவர் கண்ணிலே பட்டன. உடனே ஒரு பதிப்பாளரிடம் சென்று சிபாரிசு செய்தார். அதுவரைக்கும் பார்சல் கட்டாமல் இருந்த பல நாடகங்கள் அச்சாக வெளிவந்தன. அதன்பின் அந்த நாடக ஆசிரியருக்கு நல்ல வரவேற்பு, புகழ், பணம் எல்லாம் வந்து சேர்ந்தன என்றார் ராமு. யார் அவர் என கண்ணன் கேட்டான். ''அவர் தான் பிரபல நாடக ஆசிரியர் இப்சன்'' என்றான் ராமு.

''அவர் மாதிரி நானும் ஒரு நாள் பிரபல்யமாவேன்'' என்றார் கண்ணன்.

''அதற்கான நேரம் வந்துவிட்டது. அதுதான் நான் உங்கள் படைப்புக்களை வாங்குவதற்கு வந்துள்ளேன்'' என்று இவர்கள் இருவரின் உரையாடலைக் கேட்ட ஒருவர் கூறினார். ''மிக்க நன்றி! நீங்கள் எந்தப் பதிப்பகம்'' என்று கேட்டார் கண்ணன். ''பதிப்பகம் இல்லை பலசரக்குக் கடை'' என்று கூறினார் அந்த நபர்.

**கோ.சுவாமிநாதன்.**

# ஒரே ஊர், இரண்டு பாதைகள்

முற்காலத்தில் உறங்காவில்லி என்ற இல்லற நெறிநின்ற வேடுவ குலச் சீடர் மீது தமது துறவறச் சீடர்களை விடவும் மிகுந்த அன்பு செலுத்தினார் இராமானுஜர். இது அவரின் சந்நியாசி சீடர்களுக்குப் பிடிக்கவில்லை.

ஒருமுறை சந்நியாசி சீடர்களின் காவியுடை கிழிந்திருந்தபோது ஒருவர் மற்றவர் மீது சந்தேகப்பட்டு, மாறி மாறிக் குறை கூறினார்கள். உறங்காவில்லியின் பெருமையை விளக்க இதுதான் சந்தர்ப்பம் என்று இராமானுஜ முனிவர் முடிவுசெய்தார்.

தம்முடைய நம்பிக்கைக்குரிய திருமண் அணிந்த வைணவர்களை அழைத்து உறங்காவில்லியின் வீட்டுக்குச் சென்று வில்லி இல்லாதபோது அவர் மனைவி பொன்னாயி உறங்கும் சமயம் பார்த்து, அவளது வைரத்தோடு, நகைகளைக் கழற்றி வரும்படி பணித்தார். ஒரு பக்கமாகத் உறங்கிக்கொண்டிருந்த பொன்னாயி வைணவ பக்தர்கள் நகை கழற்றுவதை உணர்ந்தும் தெரியாதவள் போல் துயில்கொண்டாள். ஒரு பக்கம் முழுதும் கழற்றிய பிறகு அடுத்த பக்கம் உள்ள தோட்டை கழற்றிக் கொள்ளட்டும் என்று பக்கம் மாறித் துயின்றிருந்தாள்.

அவள் விழித்துக் கொண்டதாகப் பயந்து வைணவர்கள் கிடைத்த நகைகளை இராமானுஜரிடம் கொடுத்தனர். சிறிது நேரம் கழித்து வீடு திரும்பிய உறங்காவில்லி நிகழ்ந்தது அறிந்து கொதித்துப் போனார். மனைவியிடம் சண்டை பிடித்துக் கொண்டு 'இனி உன்னுடன் வாழ முடியாது' என்று கூறிவிட்டு புறப்பட்டு விட்டார்.



'நகை முழுவதையும் கழற்ற விடாமல் பயத்தில் வெளியேறவிட்டு விட்டாள்' என்பதும் பாகவதர்கள் தேவைக்கு உதவாமல் விரட்டி விட்டாள் என்பதுமே மனைவியிடம் கோபம். 'நல்லது தானே நினைத்தேன்' என்று பொன்னாயி கூறியது அவருக்கு புரிய வில்லை.

இராமானுஜரிடம் முறையிட இருவரும் வந்தார்கள். நகைகளை எடுத்து முன்வைத்த இராமானுஜர், தமது சந்நியாச சீடர்களை அழைத்தார். விலை உயர்ந்த நகைகளைப்பற்றிக் கவலைப்படாமல் பக்தர்களுக்கு உதவ முடியாமல் போன வில்லியின் துக்கம். கிழிந்துபோன காவித் துணிக்காக ஒருவருடன் ஒருவர் சண்டையிட்ட சந்நியாசிகளின் துக்கம்.....

இரண்டையும் ஒப்பிட்டு வில்லியின் சந்நியாசமும் அவன் மனைவியின் சந்நியாசமும் சந்நியாசிகளின் சந்நியாசத்தை விட மேலானது என விளக்கினார்.

காவிநிறம் தியாகத்தின் அடையாளம்... சந்நியாசம் மனதில்தான் இருக்க வேண்டும். துணியில் மட்டுமல்ல!

**சுகி சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு மேர்வின் சில்வா

**'சிறிலங்கா கார்டியன்' என்னும் இணையத்தளத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்தவின் லண்டனுக்கான பயணத்தின் பின்னணி பற்றி தயா ரணசிங்க எழுதிய கட்டுரை.**

நான் வருகிறேன், முடிந்தால் பிடித்துப்பார் எனச் சவால் விடும் வகையிலேயே ஜனாதிபதி ராஜபக்ஷ பிரிட்டனுக்கு வருகைதந்தார்.



லண்டனில் இருந்து ஜனாதிபதி மஹிந்த நாடுதிரும்பிய போது விமான நிலையத்தில் அவர் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டார்.

நானறிந்தவரை இது போன்றதொரு லண்டன் பயணத்தினை மேற்கொள்ள வேண்டாம் என லண்டனிலுள்ள இலங்கையினது தூதரகம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அறிவுறுத்தியிருக்கிறது. பிரிட்டனில் தற்போதுள்ள பாதுகாப்புப் பிரச்சினைகளையும், ஏனைய பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டி இது போன்ற பயணம் எதனையும் இப்போதைக்கு மேற்கொள்ள வேண்டாம் என மஹிந்தவுக்கு அவர்கள் எடுத்துக் கூறியிருந்தனர். இப் போதைக்குப் பிரிட்டனுக்கு வரவேண்டாம் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரிட்டன் கிளையும் அதிபர் ராஜபக்ஷ வினை மண்டியிட்டுக் கோரியிருந்தது.

### மாணவர் அமைப்புகள்

ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் ஏராளமான சிறிய அமைப்புக்களையும், சங்கங்களையும் வேறுபட்ட நாடுகளையும், இனங்களையும் சேர்ந்த மாணவர்கள் அமைத்திருக்கிறார்கள். இந்திய மாணவர்கள், பங்களாதேஷைச் சேர்ந்த மாணவர்கள், துருக்கி மாணவர்கள், சீன மாணவர்கள் எனப் பல குழுமங்கள் அங்குண்டு. இவ்வாறு ஒவ்வொரு மாணவர் சமூகங்களும் தமக்கான அமைப்புக்களைக் கொண்டிருக்கின்றன. இவர்கள் ஆண்டு நிகழ்வுகளை நடத்துவார்கள். இந்த நிகழ்வுகளின்போது தத்தமது நாடுகளிலிருந்து கலைஞர்களையும் பேச்சாளர்களையும் சில மாணவர் குழுக்கள் வரவழைப்பதுண்டு. ஆனால் இதற்கான முன் அனுமதியினை இவர்கள் பல்கலைக்கழகத்தின் அதிகாரிகளிடமிருந்து பெற்றிருக்கவேண்டும். இதன் பின்னர்தான் பல்கலைக்கழகத்தினது கடிதத் தலைப்புக்களைப் பயன்படுத்தி மாணவர் அமைப்புக்களின் தலைவர்கள் தொடர்புடையவர்களுக்கு அழைப்பிதழ்களை அனுப்புவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

ஏனைய நாடுகளின் மாணவர் அமைப்புக்களைப் போலவே ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழத்தில் 16 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை மாணவர் அமைப்பு ஒன்றும் உள்ளது. இதிலுள்ள அனைவரும் சிங்களவர்களே. இந்தப் பல்கலைக்கழகத்தில் 12 தமிழர்கள் கல்விகற்றாலும் அவர்கள் மேற்குறித்த இந்த மாணவர் அமைப்புடன் இணைந்து செயற்படுவதில்லை. இங்கு கற்கும் சிங்கள மாணவர்களும் இரண்டு குழுக்களாகப் பிரிந்தே இருக்கிறார்கள். இதன் காரணமாக எட்டு சிங்கள மாணவர்களே அதிபர் ராஜபக்ஷவினது இந்த நிகழ்வினை ஒழுங்கு செய்திருந்தார்கள் இலங்கையைச் சேர்ந்த மாணவர் அமைப்பின் தலைவர் டிலான் பெர்னாண்டோ என்பவரே ஜனாதிபதி மஹிந்தவை உரைநிகழ்த்த வருமாறு கோரி அதற்கான அழைப்பினை அனுப்பியிருந்தார்.

### தவறான புரிதல்

இங்கு நாங்கள் அலசிக்கொண்டிருப்பது எதுவோ அதனைவிட வேறொரு கட்டமைப்புத்தான் ஒக்ஸ்போர்ட் யூனியன். ஒக்ஸ்போர்ட் யூனியன் தனியான நிர்வாக அலகுகளைக் கொண்டிருக்கிறது. இதற்கும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் இலங்கையைச் சேர்ந்த மாணவர்கள் எவருமே ஒக்ஸ்போர்ட் யூனியனில் அங்கத்தவர்களாகக்கூட இல்லை.

பண்டாரநாயக்காவாக இருக்கலாம் அல்லது லலித் அத்துதலத்முதலியாக இருக்கலாம், அவர்கள் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற காலத்தில் இலங்கை மாணவர் அமைப்பு அளவில் பெரிய மாணவர் அமைப்பாகத் திகழ்ந்ததோடு, இவர்கள் ஒக்ஸ்போர்ட் யூனியனிலும் அங்கம் வகித்தார்கள். ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரைநிகழ்த்து வதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு அழைப்புக் கிடைத்திருக்கிறது என அந்த அழைப்புத் தொடர்பாக இலங்கையில் பெருமையுடன் அதிகம் பேசப்பட்டது. ஆனால் உண்மை என்னவென்றால் தவறான புரிந்துணர்வினால் வந்த விளைவுதான் இது.

### வீரதுங்காவின் விளாசல்

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உரைநிகழ்த்துவதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு அழைப்புக் கிடைத்திருக்கிறதென்றும், அனைத்துலக ஊடகவியலாளர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் கருத்துக்களைக் கூறுவதற்குக் கிடைத்த அரியதொரு சந்தர்ப்பம் என்றும், இந்த அழைப்புக் கிடைத்தது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருந்தாராம். ஆனால் லண்டனில் இடம்பெறும் ஏதாவது நிகழ்வில் கலந்துகொள்வதற்கோ அன்றி உரைநிகழ்த்துவதற்கோ இலங்கையைச் சேர்ந்தவர்கள் வருகைதருமிடத்து, நிகழ்வு இடம்பெறும் இடத்தில் காலியாகவுள்ள இருக்கைகளை நிரப்புவதற்கு லண்டன்வாழ் சிங்களவர்கள் வரவழைக்கப்படுவதுதான் உண்மை. இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்பாக வெளிநாட்டவர்கள் அலட்டிக்கொள்வதில்லை. இந்த உண்மையினை நான் நன்கறிவேன்.

இங்குள்ள அனைவரும் பேசுவதைப் போல ஜனாதிபதி ராஜபக்ஷ கடந்த வாரம் பிரிட்டனுக்கு மேற்கொண்ட பயணமானது பெருந்தொகைப் பணத்தையும் பொன்னான காலத்தினையும் வீணடித்த செயலேயன்றி வேறெதுவுமில்லை. மஹிந்தவுடன் ஒரு பரிவாரமே இங்கு வந்து இறங்கியது. எதற்காக இந்தப் பகட்டாரவாரம்? மஹிந்த வருகிறாரெனில் ஏனிந்தப் பரிவாரம்? மேலும் ஐரோப்பாவில் தற்போது குளிர்காலம் ஆரம்பமாகிவிட்டது, கடுமையான பனிப்பொழிவு தொடர்கிறது. இந்தக் கடுங்குளிர்காலத்தில் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைக் கருத்திற்கொண்டு அரச தலைவர்கள் லண்டனுக்கான தங்களது பயணங்களைத் தவிர்த்துக்கொள்வார்கள்.

### ஒக்ஸ்போர்ட் நிலைவரம்

ஒக்ஸ்போர்ட்சயர் பகுதி மிகவும் சிறிய பிராந்தியம். இந்தப் பகுதியில் காவல்துறை அளவில் சிறிய கட்டமைப்பையே கொண்டிருக் கிறது.ஆயிரக் கணக்கான ஆர்ப்பாட்டக் காரர்கள் வீதிகளில் இறங்குமிடத்து அதனைக்கட்டுப் படுத்துவதற்கு இவர்களால் முடியாது. ஏனைய பகுதிகளிலிருந்தும் மேலதிக காவல்துறையினர் வரவழைக்கப்படமாட்டார்கள். இங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பது அதிக செலவினைத் தரும் விடயம்.

எல்லாவற்றையும் விட பிரிட்டன் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பில் அமைந்த பயணம் அல்ல மஹிந்தவின் பயணம். ஆதலினால் ஆயிரக் கணக்கான தமிழர்கள்போராட்டத்தில் ஈடுபடுவதற் காகத் திரண்டுவருகிறார்கள் என்ற தகவல் கிடைத்தவுடன் பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த நிகழ்வினை நிறுத்துமாறு காவல்துறை ஒக்ஸ்போர்ட் யூனியன் நிர்வாகத்தினைக் கோரியது. இதனைவிட வேறெந்தத் தேர்வும் அவர்களுக்கு இருக்கவில்லை. நடந்தது இதுதான்.

### [illegible]

பிரிட்டனில் வாழும் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆக்கபூர்வமாக அவர்களால் எதனையும் செய்துவிடமுடியாது.

இவர்களில் பலர் வியாபார நிலையங்களிலும், மக் டொனால்ட் விற்பனை நிலையங்களிலும், பல்பொருள் அங்காடிகளிலும், எரிபொருள்நிரப்பு நிலையங்களிலும் பணிசெய்கிறார்கள். இவர்கள் இதுபோன்ற போராட்டங்களுக்கு எப்போதுமே புலிக்கொடியையும் ரீ-சேட்டுக்களையும் தயார் நிலையில் வைத்திருப்பார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இதுபோன்ற போராட்டங்களில் ஈடுபடுவது ஒரு சுற்றுலாப் பயணம் . அவ்வளவுதான். குறுகிய நேரத்தில் குறித்ததொரு இடத்தில் ஆயிரக்கணக்கில் திரளக்கூடியவாறு இவர்கள் உள்ளார்கள். கடந்த பல ஆண்டுகளாகப் புலிகளின் செயற்பாட்டாளர்களிடமிருந்து பெற்ற பயிற்சி தான் இது. இந்த ஆர்ப்பாட்டக் காரர்களில் வன்னியிலிருந்து தப்பிச் சென்ற ஆயுதப் பயிற்சி பெற்ற சிலநூறு போராளிகளும் உள்ளார்கள். ஆதலினால் சந்தர்ப்பம் கிடைக்குமிடத்து தமக்குப் பயிற்றுவிக்கப்பட்டது எதுவோ அதனைச் செய்யாமல் இந்த முன்னாள் போராளிகள் விடமாட்டார்கள்.

சனல்-4 உள்ளிட்ட பிரிட்டன் ஊடகங்கள் சிலவும் வேறு சில வெளிநாட்டு அமைப்புக்களும், இலங்கை தொடர்பான விரோதப் போக்குடன் செயற்பட்டுவரும் இந்த நிலையில் ஜனாதிபதி ராஜபக்ஷ தனது வெளிநாட்டுப் பயணத்தினைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடாது. அண்ணளவாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் போர் முடிவுக்குவந்தது முதல் இலங்கைக்கு எதிரான இதுபோன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன். இவை அனைத்தையும் நன்கறிந்திருந்தவர்கள் ஜனாதிபதி ராஜபக்ஷ பிரிட்டனுக்கு வருவதைவிரும்பவில்லை.

### ஆலோசகர்கள் எங்கே?

இதுபோன்ற குறைந்தளவிலான மக்கள் திரளும் கூட்டங்களில் ஜனாதிபதி ராஜபக்ஷ உரையாற்றுவதன் மூலம் கிடைக்கப்போவதுதான் என்ன? இந்த நாடுகளுடன் நாங்கள் வர்த்தக உடன்பாட்டினை ஏற்படுத்தப்போகிறோமா? இல்லையே. சரிவர்த்தக ரீதியிலான முனைப்புக்கள் எதுவும் என்றால் வர்த்தக அமைச்சர்களை அனுப்பியிருக்கலாமே.

சரி , ஜனாதிபதி ராஜபக்ஷ கட்டாயம் உரையாற்றத்தான் வேண்டுமென்றால் தற்போதுள்ள நவீன தொழிநுட்பங்களின் உதவியுடன் இலங்கையில் இருந்தவாறே அதனை ஒழுங்கு செய்திருக்கலாமே?


ஜனாதிபதி ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரை நிகழ்த்தப் போகிறாராம் என்ற செய்தி கிடைத்தவுடன் ஒரு மாதத்துக்கு முன்னரே இவர்களிடமிருந்து கிடைக்கும் அழைப்பினை நம்பி ராஜபக்ஷ அதனை ஏற்றுக்கொள்ளக்கூடாது என நான் எழுதியிருந்தேன். ஆனால் மஹிந்த அந்த அழைப்பினை ஏற்றுக்கொண்டார். விளைவு, கசப்பான அனுபவத்துடன் அவர் அன்று நாடு திரும்பியிருக்கிறார்.

இலங்கையின் ஜனாதிபதி ராஜபக்ஷ பிரிட்டனுக்கு வருகை தருமிடத்து போர்க் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைதுசெய்யப்படலாம் என ஊடகங்களில் செய்தி வந்திருந்தது என்றும், 'நான் வருகிறேன், முடிந்தால் பிடித்துப்பார்' எனச் சவால் விடும் வகையிலேயே ஜனாதிபதி ராஜபக்ஷ பிரிட்டனுக்கு வருகை தந்தார் எனவும் சிலர் கூறுகிறார்கள்.

அனைவரது அறிவுறுத்தல்களையும் மீறி, தானாக முடிவெடுத்து, ஜனாதிபதி ராஜபக்ஷ தனது பயணத்தினை மேற்கொண்டமைக்கான காரணம் இதுவாகவே இருக்கமுடியும். தான் இன்னொரு 'மேர்வின் சில்வா' எனக் காட்டும் வகையில் ஜனாதிபதி ராஜபக்ஷ செயற்பட்டிருக்கிறார் என்றே கூறத் தோன்றுகிறது. என்னைப் பொறுத்தவரையில்ஒரு நாட்டின் தலைவர் மேற்கொள்ளக்கூடிய 'துணிவானதொரு' செயலாக ஒருபோதும் இது இருக்காது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்கும் தலையிடிகள்....?



கட்டுநாயக்க விமான நிலையத்தில் வழமையை விடவும் கெடுபிடிகள் அன்றைக்கு அதிகமாக இருந் தன.( எடுபிடிகளின் நடமாட்டமும் தான்). எங்கு பார்த்தாலும் பெரும் புள்ளிகளின் தலைகளே தெரிந்தன. பளபளக்கும் வாகனங்களில், தம் பரிவாரங்கள் சகிதம் வெள்ளையும் சொள்ளையுமாக வந்திறங்கியவர்கள் காதுகளில் செல்போ னைப் பொருத்தியபடி, ஒரு வித 'அவசரத்தனத்தை' தம் முகங்களில் அணிந்திருந்தனர். சற்றைக் கெல்லாம் சொல்லி வைத்தாற்போல ஏககாலத்தில் அவர்கள் அனைவரது பார்வையும் வானத்தை நோக்கித் திரும்பியது. வானில் தாழ்வாக வந்த விமானம் ஒன்று ஓடுபாதையில் இறங்கியதும் இவர்களது முகங்களில் ஆயிரம் கோடி சூரியர்கள் ஒன்றாகச் சேர்ந்தது போல பிரகாசம் உதித்திருந்தது .

"ஜெய வேவா!" கோஷம் விண்ணைப் பிளக்க , விமான நிலையத்தின் உள்ளிருந்து வெடித்துக் கிளம் பும் புன்னகையை முகத்தில் ஏந்திக்கொண்டு , ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ வெளிவந்தார். அவரது உருவம் தென்பட்டதும்தான் தாமதம்! அமைச்சர்கள் எல்லோரும் அடித்துப்பிடித்துக் கொண்டு, ஜனாதிபதிக்கு வாழ்த்துக் கூறவும், அவரது மீளுகை பற்றிய தம் மகிழ்வைப் பரிமாறவும் தொடங்கினர். மும்மதத்தலைவர்களும் அங்கேயே வருகை தந்து ஜனாதிபதிக்குத் தம் ஆசீர்வாதங்களை அள்ளி வழங்கினர். யுத்தம் முடிவுற்ற காலத்தில் வெளிநாட்டு பயணத்தை முடித்துக் கொண்டுவந்த ஜனாதிபதி, கட்டுநாயக்க விமான நிலைய வாசலில் இலங்கை மண்ணை முத்தமிட்ட சமயத்தில் கூட இத்தனை அலாதியான வரவேற்பு நிகழ்வு எதுவும் நடந்திருக்கவில்லை. ஒரு யுத்தகளத்தில் வாகை சூடிவிட்டு வந்த மன்னனுக்கு நிகழ்த்தப்படுவது போன்ற சடங்கு,சம்பிரதாயங்களும் அங்கே அரங்கேறத் தொடங்கின.

உண்மைதான். இப்போது ஜனாதிபதி ஒரு யுத்தத்தினை சந்தித்து விட்டுத்தான் வந்திருக்கிறார்.(ஆனால் அந்த யுத்தத்தில் அவர் வெற்றிபெற்றாரா? இல்லையா? என்பதை உலகமே அறியும்). இந்த யுத்தம் இலங்கையின் எந்தவொரு ஆட்சியாளருக்கும் நிகழாத அவமானத்தை ஜனாதிபதிக்கு உண்டுபண்ணியிருந்தது. இப்போது அந்த யுத்தம் எதுவென நீங்கள் கண்டுபிடித்திருப்பீர்கள். லண்டனில் இலங்கை ஜனாதிபதி மஹிந்தவைப் போர்க் குற்றங்களின் கீழ் கைது செய்யுமாறு புலம்பெயர் மக்கள் நடத்திய தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களே ஜனாதிபதிக்கு வரலாறு காணாத சிக்கலை உண்டுபண்ணியிருந்தன.

பிரிட்டன் சட்டத்தின் படி, சர்வதேச ரீதியாக நடந்த எந்தவொரு போர்க்குற்றம் தொடர்பாகவோ அல்லது மனித உரிமைமீறல்கள் தொடர்பாகவோ வழக்குத்தொடர முடியும். 1998ஆம் ஆண்டு சிலி நாட்டின் சர்வாதிகாரி அகஸ்டோ பினோசே, இத்தகையதொரு போர்க்குற்றச் சாட்டின் அடிப்படையில் பிரிட்டனில் கைது செய்யப்பட்டிருந்தார். இதேபோன்று பலஸ்தீனியர்கள் போர்க்குற்ற வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யப்போவதாக அறிவித்ததும் , பிரிட்டன் பிரதமரின் அழைப்பின் பேரில் அங்கு சென்றிருந்த இஸ்ரேலின் அப்போதைய பிரதமர் ஏரியல் ஷெரொன், ஹீத்ரு விமானநிலையத்தில் இறங்கிய கையோடே திரும்பிச் சென்றுவிட்டார்.இத்தகைய பாடங்கள் நிறையவே இருந்தமையாலேயே லண்டனுக்கான தன் தனிப்பட்ட பயணத்தை ஜனாதிபதி ஒத்திவைத்துக் கொண்டே வந்தார்.

ஆனாலும் 'பிரிட்டனில் கைது செய்யப்படலாம்' என்ற அச்சம் காரணமாகவே அவர் தனது லண்டன் விஜயத்தினை தள்ளிப்போடுவதாக 'ரைம்ஸ் ஒஃவ் இந்தியா' என்ற ஊடகம் பற்றவைத்த திரி , பரபரவெனப் பரவியதால், ஜனாதிபதியின் தன்மானத்துக்கே சவால் விடுமளவுக்கு நிலைமை சென்றுவிட்டது. இதுபோன்ற வாதங்கள் பொய் என நிரூபிக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு எழுந்ததனால், ஒரு சில முன்னேற்பாடுகளுடன் ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரையாற்றவென ஜனாதிபதி லண்டனுக்கு கடந்த 29 ஆம் திகதி புறப்பட்டுச் சென்றார்.(பிரிட்டன் மகாராணிக்கு இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த கெஞ்சும் தொனியில் அமைந்த கடிதமொன்றை அனுப்பி, அவரிடம் உறுதி மொழி ஒன்றைப் பெற்றுக்கொண்ட பின்னரே லண்டன் சென்றதாகவும் சொல்லப்படுகிறது. லண்டனில் ஜனாதிபதியே எதிர்பார்த்திராத அளவுக்கு அவருக்கு எதிரான சம்பவங்கள் மளமளவென்று நிகழ்ந் தேறத்தொடங்கின. லண்டனுக்குள் ஜனாதிபதி ஆசுவாசமாக நுழைவதற்குக் கூட புலம்பெயர் தமிழர்கள் அனுமதிக்கவில்லை.

ஹீத்ரு விமானநிலையத்தில் மஹிந்தவின் காலடி பட்ட மறுகணமே அங்கு திரண்டிருந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் குதித்துவிட்டனர். இதில் இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால் மஹிந்தவுக்கு எதிரான இந்த ஆர்ப்பாட்டத்தில் சிங்கள மக்களும் கலந்துகொண்டமைதான். அவர்கள்-புலம் பெயர் சிங்கள மக்கள்- சரத் பொன்சேகாவை விடுவிக்குமாறு நடத்திய ஆர்ப்பாட்டம், ஜனாதிபதி மஹிந்த இலங்கையில் உள்ள எல்லா இனத்தவர்களுக்கும் எதிரானவர் என்ற விம்பத்தையே ஏற்படுத்தியதால் ஜனாதிபதியின் நிலை தர்மசங்கட மாகிவிட்டது.

ஹீத்ரு விமான நிலையத்தோடு புலம்பெயர் மக்கள் அடங்கிப் போய்விடுவார்கள் என்றே மஹிந்த எதிர்பார்த்தார். ஆனால் அவர் லண்டனில் இருக்கும் ஒவ் வொரு கணமும் புலம்பெயர் மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் வெவ்வேறு திசைகளில், வெவ்வேறு வடிவங்களில் வெளிப்பட்ட வண்ணமே இருந்தன. ஒக்ஸ்போர்ட் யூனியனில் மஹிந்த உரையாற்றும் சமயத்தில் அந்த இடத்தைச் சூழ மிகப் பெரியளவில் ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவற்றில் கலந்து கொள்ளவென வேறு நாடுகளில் இருந்தும் புலம்பெயர் தமிழ் மக்கள் லண்டனுக்கு விரைந்து வந்தனர். நிலைமை கட்டுமீறிச் செல்வதை பிரிட்டன் பொலிஸாரும், ஒக்ஸ்போர்ட் யூனியனும் கண் முன்னே காண நேர்ந்தது. இதன் விளைவாக அவர்கள் எடுத்த முடிவு, மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பேரிடியைக் கொடுத்தது.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட் யூனியனில் ஆற்றவிருந்த உரை நிகழ்வு இரத்துச் செய்யப்படுகிறது. என்பதே அந்த அதிர்ச்சிகரமான முடிவு. முகத்தில் கரியைப்பூச வைத்த இந்நிகழ்வோடு ஜனாதிபதியைப் பீடித்திருந்த பிரச்சினைகள் முடிவுக்கு வந்துவிடவில்லை. ஒக்ஸ்போர்ட் யூனியனுக்கு முன்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டம், மஹிந்தவின் உரை இரத்துச் செய்யப்பட்டதால் அது ஜனாதிபதி மஹிந்த தங்கியிருந்ததாகக் கூறப்படும் ஹோட்ட லுக்கு இடம்மாற்றப்பட்டது. இதைவிட தமிழர் நலன்சார் அமைப்புக்கள் சில மஹிந்த மீது போர்க்குற்றச்சாட்டு வழக்குகளை பதிவுசெய்யும் நடவடிக்கைகளிலும் இறங்கியிருந்தன. இதனால் ஜனாதிபதி பிரிட்டனில் கைது செய்யப்படலாம் என்ற ஊகங்கள் சடுதியாகக் கிளம்பின. உரையாற்ற முடியாவிட்டாலும் பரவாயில்லை. பத்திரமாக இலங்கை போய்ச்சேர்ந்தாலே போதும் எனுமளவுக்கு ஜனாதிபதியின் நிலை மோசமாகி விட்டது. தலைதப்பியது தம்பிரான் புண்ணியம் என்ற கணக்காக - புண்பட்ட மனதோடு - கட்டுநாயக்காவுக்கு வந்த ஜனாதிபதியின் மனதைக் குளிர்விக்கவே அமைச்சர் குழா மின் இத்தகைய தடல்புடல் ஏற்பாடுகள்.

லண்டனில் ஒரு நாளோடு முடிந்து போகவிருந்த புலம்பெயர் தமிழர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள வைத்ததிலும், மஹிந்தவின் ஒக்ஸ்போர்ட் யூனியன் உரை இரத்தானதிலும் பெரும் பங்கு சனல்-4 என்ற தொலைக்காட்சி அலைவரிசைக்கு உண்டு. தமிழ்த் திரைப்படங்களில் முக்கியமான தருணத்தில் வந்து குதிக்கின்ற ஹீரோவைப் போல மஹிந்தவின்

**ஔண்யன்**

லண்டன் பயணச்சிறப்பு வெளியீடாக சனல்-4 வீடியோ ஆதாரம் ஒன்றை வெளியிட்டுப் பரபரப்பைக் கிளப்பியது. சதுப்பு நிலத்தில் நிர்வாணமாக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்படுதல், பாலியல் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட இசைப்பிரியா உள்ளிட்ட இளம் பெண்களின் நிர்வாண நிலையிலான சடலங்களைப் படையினர் பார்த்து ரசித்தல் என்பன இந்த வீடியோவில் பதிவாகி இருந்தன. முன்னரும் இதுபோன்ற வீடியோ ஆதாரத்தை சனல்-4 வெளியிட்டிருந்தது. அப்போது இது பொய்யான வீடியோ ஆதாரம் என்றும், கிரபிக்ஸ் முறையில் செய்யப்பட்டிருப்ப தாகவும் இலங்கை அரசு ஒற்றைக்காலில் நின்றது. ஆனா லும் அந்த வீடியோவில் எவ்வித கிரபிக்ஸ் புகுத்தல்களும் இடம்பெறவில்லை என்பது சர்வதேச ரீதியில் நிரூபிக்கப்பட்டது. இப்போதும், சனல்-4 வெளியிட்ட புதிய ஆதாரமும் முன்னரைப் போன்றே பொய்யான ஆதா ரம் என்ற பழைய பல்லவியைப் பலவீனமான குரலில் இலங்கை அரசு பாடியது. ஆனாலும் இந்த வீடியோ புலம்பெயர் மக்களையும், மன்னிப்புச்சபை போன்ற மனித உரிமைக்காகப் பாடுபடும் அமைப்புகளையும் உசுப்பி விட்டன. இதனாலேயே ஆர்ப்பாட்டங்கள், போர்க்குற்ற வழக்குப் பதிவுகள் என்பவற்றில் ஆயிரக்கணக்கான மக்கள் உணர்ச்சிப் பெருக்கோடு பங்கேற்க முன்வந்தனர்.

விரும்பியோ விரும்பாமலோ 'அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்' என்ற பழமொழியை இலங்கையரசு நம்பவேண்டிய கட்டாயத்தினை போர் முனையில் பதிவுசெய்யப்பட்ட இந்த வீடியோ ஆதாரங்கள் ஏற்படுத்தி விட்டன. இப்போது புலிகளை விடவும் - புலம்பெயர் தமிழ் மக்களை விடவும் - அரசுக்கு சவால் விடுக்கின்ற பிரதான எதிரியாக சனல்-4 தொலைக்காட்சி அலைவரிசை மாறியிருக்கிறது. மஹிந்தவுக்கு வரலாற்று அவமானத்தை ஏற்படுத்துவதற்கு பெரும் காரணமாக அமைந்த இந்த அலைவரிசை மீது அரசுத்தரப்பு கடுப்பில்இருக்கிறது.

சனல்-4 வெளியிட்ட வீடியோ ஆதாரத்தை விட, இன்னொரு வீடியோவும் இணையங்களில் வெளியாகி இலங்கை அரசின் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது. ஒரு காலத்தில் விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறைத் தளபதியாக இருந்த கேணல் ரமேஷ் படை அதிகாரிகளால் விசாரணை செய்யப்படும் காட்சியே இந்த வீடியோவில் உள்ளது. இந்த வீடியோவில் படையினரின் கேள்வி ஒன்றுக்கு 'அந்த நேரத்தில் நான் மட்டக்களப்பில் இருந்தேன்' என்று அரைகுறை ஆங்கிலத்தில் சொல்லும் ரமேஷ் அதன்பின்னர் பேசமுடியாமல் தடுமாறுகிறார்.இதற்கிடையில் வீடியோவில் மறைக்கப்பட்டுள்ள அவரது வலக்கையில் ஒரு படைவீரர் ஏதோ செய்கிறார். ரமேஷின் முகத்தில் வேதனையின் ரேகைகள் தெரிகின்றன. தனக்கு ஆங்கிலம் பேச வராது என்பதை தன்னை விசாரிப்பவர்களிடம் சொல்ல முற்படுகிறார். தமிழில் அவரை விசாரிக்க ஒருவரை அழைத்து வருவதற்காக அங்கிருந்த ஒருவர் செல்கிறார். இவ்வளவும் தான் அந்த வீடியோவிலுள்ள காட்சிகள். கேணல் ரமேஷ், புலித்தேவன், நடேசன் ஆகியோர் படையினருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வெள்ளைக் கொடியோடு சென்ற போது கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியிருந்தது. ஆயினும் இவர்கள் யுத்தத்தின் போதே கொல்லப்பட்டதாக அரசுத்தரப்பு சாதித்தது. ஆனால் இப்போது வெளியாகியிருக்கும் வீடியோ ஆதாரம் படையினரால் ரமேஷ் கைது செய்யப்பட்டு, விசாரணைக்குள்ளாக்கப்பட்டு, அதன்பின்னரே கொல்லப்பட்டிருக்கிறார் என்பதை சொல்லி நிற்கிறது. பொன்சேகாவுக்கு எதிராக நடத்தப் படும் வெள்ளைக்கொடி விவகார வழக்கிலும் இந்த வீடியோ ஆதாரம் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர படையினர் நிகழ்த்திய போர்க்குற்றங்களைக் கூறுகின்ற நான்கு புகைப்படங்களும் வெளியாகியுள்ளன. இத்தகைய போர்க்குற்ற ஆதாரங்கள் ஒரே சமயத்தில் வெளியாகிய நோக்கம் ஜனாதிபதி மஹிந்தவின் பிரிட்டனில் கைது செய்ய வைப்பதுதான். ஆனாலும் அது உடனடியாகச் சாத்தியமாகவில்லை.

எனினும் சர்வதேச ரீதியான போர்க்குற்ற விசாரணைகள் இலங்கையில் நிகழ்த்தப்பட வேண்டுமென்ற கருத்தை மீளவும் வலிமையாக்க இந்த ஆதாரங்கள் உதவியிருக்கின்றன. எனவே சர்வதேச ரீதியான விசாரணைக் குழுவைச் சந்திக்க வேண்டிய தலையிடியை மஹிந்தவுக்கு இந்த வீடியோ ஆதாரங்கள் ஏற்படுத்தி விட்டன. இதைவிட இன்னொரு தலையிடிக்கான எதிர்வுகூறலும் சனல்- 4 வெளியிட்ட வீடியோவில் இருக்கிறது. சனல்-4 வெளியிட்ட வீடியோவில் இளைஞர்கள் கண்கள் கட்டப்பட்டு நிர்வாண நிலையில் கொல்லப்படும் போதும், பெண்களின் நிர்வாணச் சடலங்களை படையினர் பார்த்து இரசிக்கும் போதும் இன்னும் சில கைத்தொலைபேசிகளில் குறித்த காட்சிகள் படைவீரர்களால் பதிவுசெய்யப்படுவதை அவதானிக்க முடிகிறது. எனவே அந்த வீடியோக்களும் - பெரும் பூதமாக - எப்போது வெளியாகப் போகின்றதோ? என்ற பயத்தில் அரசு வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு காத்திருக்கிறது. ஆனாலும் பூதங்கள் எப்போது புறப்படப் போகின்றன என்பது மட்டும் யாருக்கும் தெரியவே இல்லை. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துஞ்சினோர்க்கு வரமருளும் யாழ். மரியன்னை பேராலயம்




இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் நிர்வாக அலகுகள் மறை மாவட்ட முறையில் பிரிக்கப்பட்டு அப்பகுதிகளுக்கென நியமிக்கப்பட்ட ஆயர்களினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. யாழ். மறை மாவட்டமானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். பல நூற்றுக்கணக்கான ஆலயங்களைக் கொண்ட கூட்டுத் திருச்சபையாக யாழ். மறை மாவட்ட கத்தோலிக்கத் திருச்சபை ஆன்மீக பயணத்தை முன்னெடுத்து வருகிறது.

நீண்ட கத்தோலிக்க பாரம்பரியத்தைக் கொண்ட யாழ். மறை மாவட்டத்தில் யாழ்.பேராலயத்திற்கு விசேட இடமும் தனிச்சிறப்பும் உண்டு. அது மறைமாவட்ட ஆயரின் இருக்கையை கொண்டிருப்பதால் பிரதான ஆலயமாகக் கருதப்படுகிறது.

யாழ். நகரை அண்மித்துப் பிரதான வீதிக்குச் சமீபமாக குருநகர், கொய்யாத்தோட்டம், சுண்டிக்குளி ஆகிய கிராமங்களின் மத்தியில் ஒரு கம்பீரமான, உறுதியான பாதுகாப்புச் சின்னமாக வழிபாட்டுத் தலமாக, ஒற்றுமையின் அடையாளமாக, விசுவாசத்தின் சிகரமாக, கட்டடக் கலையின் அழகுவடிவாக விரிந்து உயர்ந்து நிற்கிறது யாழ். புனித மரியாள் பேராலயம்.

தற்போதைய பேராலயம் அமைந்துள்ள வளாகத்தின் ஒரு பகுதியில் நின்ற புளிய மரத்தின் கீழ் களிமண்ணாலான ஆலயம் அமைத்து ஒல்லாந்தரின் மதத் தடைகளின் மத்தியிலும் 1789 வரை கிறிஸ்தவர்கள் வழிபட்டு வந்தனர். இவ்வாலயம் காலப் போக்கில் இடவசதி குன்றியும் சிதைவடைந்து வருவதையிட்டும் பாரிய கல்லினால் ஆன ஆலயம் கட்ட முடிவுசெய்து 1789 ஆம் ஆண்டு அத்திபாரம்



இடப்பட்டது. (தற்போதைய ஆலயத்திற்கு முந்திய ஆலயம்)

முக்திப்பேறு பெற்ற யோசேவாஸ் அடிகளாரின் தியான சம்பிரதாய சபைக் குருவும் முதல் பங்குத்தந்தையுமான லெயோனாட் றெபேயிறோ அடிகளின் அயராத உழைப்பினாலும் அக்காலத்தில் கோட்டை இராணுவத்தின் சிறாப்பராயிருந்த மூப்பர் தொ.அந்தோனிப்பிள்ளை மற்றும் பங்கு மக்களின் உதவியால் கட்டடப் பணிகள் 1794 இல் நிறைவுபெற்றன.

ஆலயத்தின் பராமரிப்பு மற்றும் திருத்தப்பணிகளைக் கவனிக்கும் பொருட்டு பங்குத்தந்தை 'ஆலய கட்டளைக்காரர்' என்ற அமைப்பை ஏற்படுத்தி அவர்களது பொறுப்புக்களை வரிசைப்படுத்தி நிர்வகித்து வந்

**எஸ்.யோசுதாஸ்**

தார். இக்குழு1873 ஆம் ஆண்டு வரை செயற்பட்டது. பின்னர் இவ்வாலயக் கிறிஸ்தவர்கள் 'திருப்பணிச் சங்கம்' என்ற கட்டமைப்பை உருவாக்கி ஆலயத் திருப்பணிகளில் ஈடுபட்டு வந்தனர். (வளரும்)

# தரைமட்டமான பின்னும் தழைத்தோங்கி நிற்கும் யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

1991 ஆம் ஆண்டு இப் பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்ற கு.சண்முகநாதன் காலத்தில் அவரால் 'சாந்துணையும் கல்' என்ற மகுட வாசகம் பொறிக்கப்பட்ட இலச்சினையுடன் பாடசாலைக் கொடியும் மாணவிகளுக்கான நீலம், வெள்ளை நிறம் கொண்ட கழுத்துப்பட்டியும் உருவாக்கப்பட்டன.

மாணவர்களை விளையாட்டுத் துறைகளில் உள்ளீர்க்கும் நோக்குடன் பிரதி அதிபராக இருந்த ந.சிவராஜாவின் முயற்சியால் சத்தியம் (சிவப்பு நிறம்), சிவம் (மஞ்சள் நிறம்), சுந்தரம் (பச்சை நிறம்) என மூன்று இல்லங்களும் தோற்றுவிக்கப்பட்டன. அவை முறையே உண்மை, நன்மை, அழகு எனப் பொருள் பொதிந்து அமைந்தமை சிறப்புக்குரியது.

வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் ஐந்து பாடசாலைகளுக்குத் தலைமைப் பாடசாலையாக இயங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

இடப்பெயர்வின் பின் மீண்டும்




சொந்த இடத்தில் ஆரம்பமான இந்தப் பாடசாலைக்கு ஜி.ரி.சற் (G.T.Z) நிறுவனத்தின் உதவியுடன் நவீன முறையுடன் கூடிய மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

2000ஆம் ஆண்டு ஜிம்னாஸ்ரிக் போட்டியில் பங்குகொண்ட இப் பாடசாலை மாணவர்கள் விளையாட்டுச் செயற்பாடுகளின் புதிய பரிமாணமாக - கீழ் பிரிவில் வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் 2001ஆம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுப் பாடசாலைக்குப் புகழ் சேர்த்தனர். 1998ஆம் ஆண்டு அதிபராகக் கடமை புரிந்த செ.பத்மநாதன் காலத்திலும் பாடசாலையில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் வளர்ச்சிப்பாதையில் பயணித்தமை குறிப்பிடத்தக்கது.

2001ஆம் ஆண்டு சு.நடராஜலிங்கம் அதிபராகப் பொறுப்பேற்றார்.

இவரது முயற்சியின் பயனாக கால மாற்றத்திற்கு ஏற்றாற்போல் மாணவர்கள் கணினி அறிவைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் பழைய மாண




வர்களின் நிதி உதவியுடன் கணினிகள் பெறப்பட்டு, கணினிச் செயற்பாட்டு அறையும் அமைக்கப்பட்டது.

திணைக்களங்களின் நிதி உதவியுடன் நவீன முறையிலமைந்த மனைப் பொருளியல் கூடமும் இன்று புதுப் பொலிவுடன் விளங்கும் ஆரம்பக் கல்விச் செயற்பாடுகளுக்கான வகுப்பறைகளும் புனரமைக்கப்பட்டன.

2003, 2004, 2005 ஆம் ஆண்டுகளில் கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற 'அழகெழல்' போட்டியில், பிரபல பாடசாலைகளுடன் போட்டியிட்டு 2ஆம், 4ஆம் இடங்களை கொட்டடி நமசிவாயம் வித்தியாலய மாணவர்கள் பெற்றமை திறன் விருத்திக்கு ஒரு சான்றாகும்.

2006 ஆம் ஆண்டு தீவகத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வின் விளைவாக அப்பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அடைக்கலம் கொடுத்து, அவர்களையும் தமது பாடசாலை மாணவர்களாகக் கருதி அறிவூட்டிய பெருமையும் இப் பாடசாலைக்கு உண்டு.

ஜே.ஐ.சி.ஏ (JICA) நிறுவனத்தின் செயற்றிட்டத்தில் இப்பாடசாலையும் தெரிவுசெய்யப்பட்டதனால் பாடசாலை வளர்ச்சியில் உயர்வு நிலை ஒன்று உண்டாகியது.

சு.நடராஜலிங்கத்தைத் தொடர்ந்து பாடசாலையின் அதிபராக சோமசேகரம் பொறுப்பேற்றார்.

அதன்பின் 2010ஆம் ஆண்டு கணேசன் அதிபராக பொறுப்பேற்ற பின்னர் பாடசாலையின் கட்டமைப்புக்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. புதிதாக மாணவர்களுக்கு சமையல் அறை கட்டப்பட்டது. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களின் அறிவு விருத்திக்கு கணினிகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் பாடசாலை மாணவர்கள் தமது கணினி அறிவை வளர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் கணினி சார் அறிவு போதிக்கப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டு 100 இற்கும் மேற்பட்ட புள்ளிகளை 28 மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 2009ஆம் ஆண்டு ஜீ.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் அனைவரும் கணித பாடத்தில் சித்தியடைந்து, 15 பேர் உயர்தரத்துக்கும் தகுதி பெற்றுள்ளனர்.

ஆண், பெண் இரு பாலாரும் தரம்-1 தொடக்கம் தரம்-11 வரை கல்வி கற்கும் இப்பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் கோட்ட மட்ட ரீதியில் திருக்குறள் மனனப் போட்டி, வாய்பாடு, மனக்கணிதப் போட்டி, பேச்சுப்போட்டி, சிறுகதைப் போட்டி என்பவற்றில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

வலய மட்டத்திலும் பேச்சுப் போட்டியில் இப்பாடசாலை மாணவர்கள் வெற்றிகளை ஈட்டத் தொடங்கியுள்ளனர். ''பின்னை நேயம்'' போட்டியிலும் கோட்ட மட்டத்தில் இடம் பிடித்துள்ளார்கள்.

இவ்வாறு கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் திறமை மிக்கவர்களாக விளங்கும் இப்பாடசாலை மாணவர்களுக்குக் கிடைக்கும் பௌதிக வளங்களில் குறைபாடுகள் இருக்கத் தான் செய்கின்றன.

வன்னியில் இருந்து வந்த 40 மாணவர்கள் தற்போது இங்கு கல்வி கற்கிறார்கள். இப்பாடசாலையில் பயிலும் மாணவர்களின் மொத்தத்தொகை 419 ஆக உள்ள நிலையில் அதற்கேற்ற வகையில் கட்டடவசதிகள் போதுமானதாக இல்லை. இதனால் ஆசிரியர்கள் திறம்படக்கல்வியை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கணினிகள் புதிதாகக் கிடைக்கப் பெற்ற போதும் அதற்கெனத் தனி அறை கிடையாது. அத்துடன் விஞ்

**நிசா, வாணி**

ஞான ஆய்வு கூடம், விளையாட்டு மைதானம் என்பனவும் இப்பாடசாலைக்கு இதுவரை கிடைக்கவில்லை.

பாடசாலை இயங்கும் கட்டடக் காணி சிறியதாக இருப்பதால் பாடசாலைக்கென தனியான விளையாட்டு மைதானம் இதுவரைகாலமும் இல்லை. அருகில் காணிகள் இருந்த போதும் அவற்றை உரிமைகோர முடியாமல் இருப்பதால், அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையே தொடர்கிறது. அந்தக் காணிகள் கொள்வனவு செய்யப்படுவது பாடசாலையின் அபிவிருத்திக்கு உந்து சக்தியாக விளங்கும்.

சமகால சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய சமூக எதிர்பார்ப்புகளுக்கு ஒத்திசைவான ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட மாணவர் சமுதாயத்தைக் கட்டியெழுப்புதலே பாடசாலையின் நோக்கமாகும்.

30 ஆசிரியர்களும் 02 தொண்டர் ஆசிரியர்களும் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிப் பாதைக்கு ஊக்கம் கொடுக்கிறார்கள்.

இவர்களது சேவை தொடர்ந்து நடைபெறுவதன் மூலம் சிறந்த பாடசாலையாகக் கொட்டடி நமசிவாய வித்தியாலயம் தலைநிமிரும் என்பதே எல்லோரதும் நம்பிக்கையாகும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேவை**

மாணவர்களுக்கு உரிய ரை மோனிற்றர் பச், பிறிபெக்ட் பச், பிளாஸ்ரிக் அடையாள அட்டை, மெடல்கள், கேடயங்கள், பெயர்ப் பலகை என்பனவற்றை உடனுக்கு உடன் செய்து பெற்றுக்கொள்ள.

**எஸ்.எஸ்.பாசோதரன் ஆர்ட்ஸ்**

இல. 381, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 0777110610, 0217903020


# வடிகால் சீரின்மையால் வெள்ளம் தேங்கும் நிலை

யாழ்ப்பாணம், டிசெ.6

கொழும்புத்துறை, இலந்தைக்குளம் வீதியில் உள்ள வடிகால் உரிய முறையில் துப்புரவு செய்யப்படாததினால் வெள்ளம் வழிந்தோட முடியாது தேங்கிக் காணப்படுகின்றது.

மாம்பழம் சந்தி, பிரப்பங்குளத்தில் இருந்து செல்லும் இந்த வடிகால் இலந்தைக்குளம் வழியாக பாஷையூர் கடலுக்கு செல்கின்றன.

இலந்தைக்குளம் நிரம்பி அருகில் உள்ள இந்து மகா வித்தியாலய மைதானத்தை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

மைதான பகுதியில் இருக்கும் ஆரம்ப பப் பாடசாலை வகுப்பறை கட்டடங்களையும் வெள்ளம் சூழ்ந்திருப்பதால் மாணவர்கள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். (204-26)

# மதுபோதையில் நடமாடிய நால்வருக்குச் சிறை

தென்மராட்சி, டிசெ. 6

மதுபோதையில் பொதுமக்களுக்கு இடைஞ்சல் தரும் வகையில் செயற்பட்ட நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா இரு வாரங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான் என்.எம்.எம். அப்துல்லா இருவாரு கடூழியசிறைத் தண்டனையுடன் நால்வருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (204-207)


## ජාතික සම්පත

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 79
திகதி - 04.12.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **Y** அதிர்ஷ்ட இலக்கம் **05** வெற்றி இலக்கம் **5 6 8 5 3**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y 05 5 6 8 5 3 | ரூ. 23,635,108.00 | - |
| 1 பரிசு | 05 5 6 8 5 3 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 5 6 8 5 3 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 6 8 5 3 | ரூ. 10,000.00 | 26 |
| 4 பரிசு | 8 5 3 | ரூ. 1,000.00 | 241 |
| 5 பரிசு | 5 3 | ரூ. 50.00 | 2471 |
| 6 பரிசு | 3 | ரூ. 20.00 | 23878 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 5 6 8 5 | ரூ. 1,000.00 | 26 |
| 8 பரிசு | 5 6 8 | ரூ. 100.00 | 248 |
| 9 பரிசு | 5 6 | ரூ. 50.00 | 2498 |
| 10 பரிசு | Y | ரூ. 20.00 | 9760 |
| 11 பரிசு | Y 05 | ரூ. 100.00 | 1133 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. **1,886,310.00**

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூபா இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ. 24,002,736.00



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2179 திகதி 04 – 12 – 2010

ஆங்கில எழுத்திற்கும் **P**

வெற்றி எண்கள் **08 23 29 66**

போனஸ் இல: **68**

ஜக்பொட் பரிசு ரூ. **25,117,125/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 181213 | 20/- | 3,624,260/- |
| 2 இல | 12904 | 100/- | 1,290,400/- |
| 3 இல | 279 | 1,000/- | 279,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7322 | 40/- | 292,880/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 511 | 1,000/- | 511,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 25,117,125/- | - |
| 1 இல + போனஸ் இல | 8728 | 100/- | 872,800/- |
| 2 இல + போனஸ் இல | 417 | 500/- | 208,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 300 | 200/- | 60,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,681,340/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 211716 | | 9,281,340/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| திருகோணமலை | 302599349-9-05 |
| மொனராகலை | 302594825-3-23 |
| புத்தளம் | 302595995-0-49 |
| வவுனியா | 302597908-8-32 |
| கொழும்பு | 302600246-6-21 |
| கொழும்பு | 302600996-5-28 |
| நுவரேலியா | 302598824-4-03 |
| பொலன்னறுவை | 302600178-1-40 |
| கம்பஹா | 302600891-5-33 |
| கேகாலை | 302601520-5-24 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 25,612,075/-

ஜதா நிற டிக்கட்டுகள் 2010 டிசம்பர் 08ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை



# UNIVERSITY OF JAFFNA TENDER NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed tenders from the qualified contractors for the following works.

| Work/Service Details | Security deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Approximate direct cost of the work (Rs. in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Improvements to Buildings and Services and Painting Boundary wall at Sports Complex, University of Jaffna. | 90,000.00 | 750.00 | 6.3 | C7 (Buildings) |
| Rehabilitation/Improvements at Faculty of Arts, University of Jaffna. | 75,000.00 | 750.00 | 5.0 | C7 (Buildings) |

Tender forms may be obtained from Senior Assistant Registrar / Capital Works & Planning University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above tender fee at the Shroff's Counter, University of Jaffna until 15.12.2010.

Perfected tender should be sealed and marked with the job and the name of the work/service on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registra's Office, University of Jaffna.

**All Bids shall be accompanied by a Bid Security for and which shall be;**

- In the form included in Section 09 of the Bidding document,
- In favour of Vice-Chancellor, University of Jaffna.
- For an amount indicated above.
- Valid up to 22nd April, 2011.
- Issued by one of the agencies indicated in Clause 16 of the Bidding Data.

Tenders will be accepted till 2.00 p.m on 22.12.2010 and open immediately thereafter.

Tenderers or their accredited representatives could be present at the time of opening of tenders.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Capital Works & Planning Branch of this University during office hours, if necessary.

P.O Box 57,
Thirunelvely,
Jaffna.
03. 12.2010

(c/573370)

Registrar
University of Jaffna






சசிதரன்- மனோகரி தம்பதியரின் செல்வப் புதல்வி ஹாஷினி தனது முதலாவது பிறந்தநாளை அவரது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, தாத்தாமார், பாட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணாமார், தங்கை அபி, மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்,நண்பர்கள் ஆகியோர் நாச்சி அம்மன் அருள்பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்க என்று வாழ்த்துகின்றனர்.

**சிவபாலமூர்த்தி**
(தாத்தா)
திருநெல்வேலி.

Birthday Party






இணுவில் கிழக்கு
அங்கலப்பாயைச் சேர்ந்த
சிவஸ்ரீ
சோமசபேசக்குருக்கள்-
வடிவாம்பிகை தம்பதியரின்
**செல்வப் புதல்வி சிந்துஜா**
தனது இரண்டாவது பிறந்த
தினத்தை இன்று (06.12.2010)
திங்கட்கிழமை 'ஸ்ரீ வித்யா'
இல்லத்தில்கொண்டாடுகின்றார்
இவரை அப்பா, அம்மா, பேரன்,
பேர்த்தி, பெரியப்பாமார்,
பெரியம்மாமார், சித்தப்பாமார்,
சித்திமார், மாமாமார், மாமிமார்,
அக்காமார், அத்தான்மார்,
அண்ணாமார், அண்ணிமார்,
மச்சான்மார்,மச்சாள்மார், தம்பி,
தங்கை, உற்றார், உறவினர்,
நண்பர்கள்
இணுவை சிவகாமி
அம்பிகையின் துணையுடன்
பல்கலையும் பெற்றுப்
பல்லாண்டுகாலம்
வாழ வாழ்த்துகின்றனர்.
சிவஸ்ரீ இ.கேதீஸ்வரக் குருக்கள்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் நீடித்த மழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு

ஆலையடிவேம்பு, டிசெ.5

கடந்த சில தினங்களாக அம்பாறை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் பல அபிவிருத்தி வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் கரையோரப் பகுதியில் சில இடங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. இந்தப் பிரதேசங்களில் மீள் குடியேறிய குடும்பங்களில் பலர் பாதிக்கப்பட்டு உறவினர்களின் வீடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

வெள்ளப்பெருக்கால் பானமை - உகந்தை வீதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இந்த வீதியில் உள்ள இரு பாலங்களும் உடைந்துள்ளன. பல இடங்களில் பெரும் போக நெல் விதைத்த வயல்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இடிமின்னலோடு கூடிய மழை நீடிக்கிறது. இவ்வருடத்தில் இடிமின்னல் தாக்குதலில் இம்மாவட்டத்தில் அநேகர் பலியாகியுள்ளனர். கடல் கொந்தளிப்பாக இருந்து வருவதால் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது. (ளி)




# பழங்குடியிருப்பு மடுப் பகுதியில் குண்டுவெடிப்பு; இளைஞர் காயம்

வவுணதீவு,டிசெ.5

வவுணதீவு, பழங்குடி யிருப்பு, மடுப்பகுதியில் உள்ள விவசாய வயலுக்குள் கிருமி நாசினி விசிறியபோது காணப்பட்ட வெடிகுண்டை பரி சோதிக்க முற்பட்ட போது அது வெடித்ததில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த புதன்கிழமை காலை கன்னங்குடாவைச் சேர்ந்த பாலப்போடி புரன்தரன் தமது வயலுக்குள் கிருமிநாசினி விசிறிக் கொண்டிருந்தபோது அங்கு கிடந்த வெடிபொருளை அகற்ற தூக்கியவேளை இந்த வெடிப்புச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. படுகாய மடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள இந்த இளை ஞர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ளி)

# ஆற்றில் தோணி கவிழ்ந்தது; மூவர் காப்பாற்றப்பட்டனர்

காத்தான்குடி, டிசெ.5

வாழைச்சேனை ஆற்றில் தோணியொன்று கடந்த புதன் கிழமை மாலை கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதனால் ஆற்றில் விழுந்த பயணிகள் காப்பாற்றப் பட்டனர்.

புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது. தோணியில் சைக் கிள் ஒன்றையும் இவர்கள் ஏற்றிக் கொண்டு பயணித்துள்ளனர்.

தோணி கவிழ்ந்ததால் நீரில் விழுந்து தத்தளித்த இவர்களின் அபயக்குரலைக் கேட்டு மோட்டார் படகில் விரைந்தவர்களால் இம் மூவரும் காப்பாற்றப்பட்டனர்.

இந்த ஆற்றை கடப்பதற்கான படகுச் சேவை மாலை 6 மணியுடன் நிறுத்தப்படுகின்றது. இப்பகுதியில் இதற்கு முன்னரும் இத்தகைய விபத்துகள் இடம்பெற்றுள்ளன. தற்போது மழை பெய்து வருவதால் ஆற்றின் நீரோட்டம் அதிகரித்துள்ளது. (ளி)

## காத்தான்குடிப் பிரதேச மீனவர்கள் பேரணி

காத்தான்குடி பிரதேச மீனவர்கள் கடந்த வியாழக்கிழமை காலை பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன், கண்டனப் பேரணியிலும் பங்குபற்றினர்.

மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்களம் கடந்த புதன்கிழமை மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது கைப்பற்றப்பட்ட சட்டவிரோத வலைகளைத் திருப்பி ஒப்படைக்குமாறு கோரியே இப்போராட்டம் நடத்தப்பட்டது என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ளி)

# மகா ஓயா சுடுநீர் கிணறுகளை புனரமைக்குமாறு வேண்டுகோள்

அம்பாறை, டிசெ.7

அம்பாறை மாவட்டத்தின் மகாஓயா பிரதேசத்திலுள்ள சுடுநீர் கிணறுகளையும் சூழவுள்ள பகுதிகளையும் புனரமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பொதுமக்களும் பிரதேச அமைப்புக ளைச் சேர்ந்தோரும் கேட்டுள்ளனர்.

மகாஓயா பிரதேசத்தில் அமைந்துள்ள 7 சுடுநீர் கிணறு களையும் அவற்றை அண்மித் துள்ள பகுதிகளையும் 1976 ஆம் ஆண்டு அம்பாறைத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த செனரத் சோரெட்ன புனரமைப்புச் செய்தார். அத்துடன் சுற்று மதில்களையும் அமைத்துக்கொடுத்தார். இக்கிணறுகள் நாளடைவில் முறையாகப் பராமரிக்கப்படவில்லை. அத்துடன் சுற்றியுள்ள மதில்களும் சிதைவடைந்து விட்டன.

இச்சுடுநீரில் குளிப்ப தனால் தோல் நோய்கள் குண மடையும் என்ற நம்பிக்கையில் இக் கிணறுகளைப் பார்வை யிட வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பெருகிவருகிறது. எனவே இவற்றைப் புனர மைத்துத் தருமாறு பிரதேச அமைப்புகளைச் சேர்ந்தோரும் பொது மக்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுள்ளனர். (ளி)

# விக்ரோறியா நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் தானாகத் திறந்தன

மலையகப் பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக பிரதான நீர் தேக்கங்கள் அனைத்தும் நீரினால் நிறைந்துள்ளன.



கண்டி விக்டோரியா நீர் தேக்கத்தின் இரண்டு கதவுகள் நேற்று முன்தினம் அதிகாலை தானாகத் திறப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை ஒரு வினாடிக்கு 760 கன மீற்றர் நீர் திறபட்ட கதவுகள் ஊடாகத் தள்ளப்படுகிறது.

122 மீற்றர் உயரமும் 520 மீற்றர் நீளமும் கொண்ட விக்டோரியா நீர்த்தேக்கம் பல வருடங்களுக்குப் பின்னர் நேற்று முன்தினமே அதன் தன்னியக்கக் கதவுகள் தானாகத் திறந்துள்ளன.

மிகுதியாகவுள்ள ஆறு தன்னியக்க கதவுகளில் இன்னும் ஒரு கதவு திறப்பதற்கான சாத்திய கூறுகள் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பல வருடங்களுக்குப் பின்னர் கதவுகள் திறக்கப்பட்டுள்ள விக்டோரியா நீர் தேக்கத்தை பார்வையிடுவதற்காகப் பெரும் தொகையான மக்கள் வந்த வண்ணம் உள்ளனர். (ம)

# உரிய சாட்சியங்கள் இன்றேல் வழக்குத் தாக்கல் செய்யாதீர்

## கண்டி நீதிவான் பொலிஸாருக்கு எச்சரிக்கை

கண்டி, டிசெ.5

தக்க சாட்சியங்கள் இன்றி வழக்குகளைத் தாக்கல் செய்து நீதிமன்றத்தின் நேரத்தை விரயம்செய்யவேண்டாம் - எனகண்டி நீதிமன்ற நீதிவான் லலித் ஏக்க நாயக்க திறந்த நீதிமன்றத்தில் பொலிஸாரை எச்சரித்தார்.

கடுகண்ணாவை பொலிஸாரால் மூன்று வெவ்வேறு குற்றச் சாட்டுகளின்பேரில் சந்தேகநபரொருவர் கண்டி நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார். எனினும், இவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கான சாட்சிகளை பொலிஸார் நீதிமன்றில் ஆஜராக்கவில்லை.

இவர்மீதான வழக்குகள் மூன்றுதினங்களில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. அந்த மூன்று தினங்களிலும் எவ்வித சாட்சிகளும் இல்லாதபடியால் கடந்த புதன்கிழமை சந்தேக நபரை விடு தலை செய்து தீர்ப்பளித்த போதே நீதிவான் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

இத்தகைய வழக்குகள் மூலம் நீதிமன்றங்களின் நேரத்தை பொலிஸார் விரயமாக்குகிறார்கள் எனவும் நீதிவான் சுட்டிக் காட்டினார்.

ரெலிக்கொம் நிறுவனத்துக்குச் சொந்தமான பொருள்களைத் திருடியமை, வியாபார நிலையமொன்றின் முன் மோசமாக நடந்து கொண்டமை, வேறொரு நிறுவனத்தினது பொருட்களைத் திருடியமை ஆகிய மூன்று குற்றச் சாட்டுகளின் பேரில் இவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# இ.தொ.காவுடன் இணைந்து செயற்பட வருமாறு கொழும்பு தமிழர்களுக்கு அழைப்பு

கொழும்பு, டிசெ.5

கொழும்பு வாழ் மலையக இளைஞர்கள் மற்றும் வர்த்தகர்களின் எண்ணங்களுக்கு மதிப்பளித்துச் செயற்படுவதற்கு இ.தொ.கா.தயாராக உள்ளது. அப்போதுதான் எமது சக்தியை மேலும் வலுப்படுத்த முடியும். எனவே, கொழும்பு வாழ் இந்திய வம்சாவளி மக்களுக்கு எம்முடன் இணைந்து பணியாற்ற வருமாறு அழைப்பு விடுக்கின்றோம் - என்று இ.தொ.கா. பொதுச் செயலாளரும், கால்நடை வள மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.




அமைச்சின் கேட் போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற மலையக இளைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இ. தொ. கா. பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், இளைஞர் - யுவதிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்து வதற்கும் பாடுபட்டு வருகிறது. இன்று எம்மவர் கள் கல்வி யிலும் பிறதுறைகளிலும் தலைநிமிர்ந்து வருகின்றார்கள். இதற்கு இ.தொ.காவே காரணம்.

இ.தொ.காவின் முடிவுகள் ஒருநாளும் மக்கள் நலனுக்கு எதிராக அமைந்ததில்லை. ஆ[illegible] தோ[illegible] மக்களின் தேவைகளை நிறை வேற்றி வந்துள்ளோம்-என்றார். (ளி)

# பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில் கைதான தொண்டராசிரியருக்கு பிணை வழங்க வேண்டாம்

## மலையக மக்கள் கொந்தளிப்பு


தரம் ஐந்தில் கல்விக்கற்கும் மாணவிகள் ஏழுபேரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியருக்குப் பிணை வழங்க வேண்டாமெனக்கோரி கடந்த புதன் கிழமை ஹற்றன் நகர சபையின் முன்றிலில் கவன யீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது. டிக்கோயாவுக்கும் நோட்டனுக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலுள்ள தமிழ்ப் பாடசாலை ஒன்றில் சேவைபுரிந்த 25 வயதுடைய இளம் தொண்டர் ஆசிரியரொருவர் சந்தே கத்தின்பேரில் கடந்த 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில் சந்தேகநபர் கடந்த புதன்கிழமை ஹற்றன் நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்டபோது இவருக்குப் பிணை வழங்க வேண்டாமெனக்கோரியும், இவ்வாறான சம்பவங்கள் மலையகத் தமிழ் பாடசாலைகளில் இனிமேலும் இடம்பெறக் கூடாது என்று வலியுறுத்தியும் பெற்றோர் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் ஒன்றிணைந்து ஹட்டன் நகர சபைக்கு முன்னாள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து சந்தேகநபரை எதிர்வரும் 15 ஆம்திகதிவரை விளக் கமறியலில் வைக்குமாறு ஹற்றன் நீதிவான் உத்தரவிட்டார்.(ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொண்டிக் குதிரையும் பரமார்த்தக் குருவும்



(தொடர்ச்சி)

மறுபடியும் குரு அதன் மேல் உட்கார்ந்தார். இப்போது மட்டி, அதன் வாலைப் பிடித்து முறுக்கினான். கோபம் கொண்ட குதிரை எட்டி ஓர் உதை விட்டது. அது உதைத்த உதையில் கீழே விழுந்து புரண்ட மட்டிக்கு நாலு பற்கள் உடைந்து விட்டன! வாயெல்லாம் இரத்தம்.

இதை எல்லாம் பார்த்த குருவுக்கு உதறல் எடுத்தது.

சீடர்களே! எனக்குப் பயமாக இருக்கிறது. நான் கீழே இறங்கி விடுகிறேன்! என்றார்.

குருவே! நீங்கள் கவலையே பட வேண்டாம். அப்படியே உட்கார்ந்து இருங்கள். நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்! என்று பதில் சொன்னான் முட்டாள்.

மண்டுவுக்கும் மடையனுக்கும் வேறு ஒரு யோசனை உதித்தது.

குதிரைக்கு முன்னால் நின்று கொண்டு, முகத்தைக் கோணலாக்கி, கண்களை உருட்டி, உதட்டைப் பிதுக்கி,''ஆ....ஊ....ஊ...'' என்று ஊளையிட்டுப் பயம் காட்டினார்கள்.

இதனால் குதிரை ஒரேயடியாக மிரண்டு, மெல்ல மெல்லப் பின் பக்கமாக நடக்க ஆரம்பித்தது! குருவுக்கும், சீடர்களுக்கும் அதிசயமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. சுற்றி இருந்தவர்கள் கைதட்டிச் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

தொடர்ந்து பின்பக்கமாகவே குதிரை ஓடவும் தொடங்கியது.

நொண்டிக் குதிரை! குறுட்டுக் குதிரை! குருவுக்கேற்ற குதிரை! கழுதைபோல எட்டி உதைக்கும்! நாயைப் போல் ஆளைக் கடிக்கும்! ஓரம் போங்கோ! வழியை விடுங்கோ! என்று பாடியபடி சீடர்கள் போய்க் கொண்டு இருந்தனர். பின்பக்கமாகவே ஓடுவது குதிரைக்குப் பழகி விட்டது.


அப்போது அடுத்த ஊரின் எல்லை வந்தது. அங்கிருந்த மணியக்காரர்கள் இவர்களை நிறுத்தினார்கள். வெளியூர்க் குதிரைக்கு வரி கட்ட வேண்டும். பத்துப் பணம் எடுங்கள் என்றார்கள்.

வரியா? நான் ஏறி வருகிற குதிரைக்கு வரி வாங்கலாமா? அதுவும் இது இனாமாகவே வந்த குதிரை. இதற்கு வரி கட்ட மாட்டோம்! என்று கூறினார் குரு.

எதுவானாலும் சரி. வரி கொடுக்காவிட்டால் விடமாட்டோம் என்று சொல்லி அவர்களை மடக்கினார்கள், மணியக்காரர்கள்.

(தொடரும்...)

# ஆமை பற்றிய அறிவு



ஆமை ஊர்வன இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு ஆகும். இவை நீரிலும் நிலத்திலும் வாழவல்ல இரு வாழ்விகள் ஆகும்.

நிலத்தில் வாழும் ஆமைக்கு கால்களில் நகங்கள் அமைந்திருக்கின்றன. ஆமை தரையில் நடக்கும் வேகம் மணிக்கு சுமார் 70 மீட்டர். கடலில் வாழும் ஆமை வகைகளின் கால்களே துடுப்புப் போன்று அமைந்திருக்கும். கடல் ஆமை ஒரே சமயத்தில் 200 முட்டைகளிடும்.

இதன் உடல் ஓட்டினால் மூடப்பட்டதாக இருக்கும். உலகில் ஏறத்தாழ 300 வகையான ஆமையினங்கள் உள்ளன.

இவற்றில் சில இனங்கள் அழிவாபத்தை எதிர்கொள்கின்றன. கடலாமைகள் ஒப்பீட்டளவில் பெரியவை. தோல்முதுகுக் கடலாமை என்ற ஆமையினம் 900 கிலோகிராம் நிறை வரை வளர்கிறது.

பொதுவாக உயிரினங்களில் ஆமைகளுக்கு நீண்ட ஆயுள் உள்ளது. அதன் இதயம் மிகவும் நிதானமாகத் துடிப்பதே அதன் நீண்ட ஆயுளுக்குக் காரணமாக அமைகிறது.

ஆமைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் இனத்தைச் சேர்ந்தது. கடலில் வாழும் பெண் ஆமைகள், கருத்தரித்ததும், கடற்கரையை நோக்கி கூட்டமாக பயணிக்கத் துவங்கும். கரையை அடைந்ததும் மண்ணில் குழி தோண்டி முட்டைகளை இட்டு விட்டுச் சென்றுவிடுகின்றன. ஒவ்வொரு கடல் ஆமையும் 200 முட்டைகளைகூட ஒரே சமயத்தில் இட்டுவிடும்.

கடல் ஆமைகளில் ஆறு வகை மிகவும் பிரசித்தி பெற்றவை.

மிகச்சிறிய ஆமையாக கருதப்படும் 110 மி.மீ., கொண்ட சுஸ்டிங்காட் ஆமையினம் வடகிழக்கு அமெரிக்காவில் உள்ளன. மற்ற ஐந்து வகை ஆமைகள் இந்திய கடற்பகுதியில் வாழ்கின்றன. பேராமை, சித்தாமை, அழுங்காமை, தோணி ஆமை, பெருந்தலை ஆமை என்பவை அவற்றின் பெயர்களாகும்.

பெருந்தலை ஆமையை தவிர மற்ற வகை ஆமைகள் மட்டுமே இந்திய கடற்கரை பகுதியில் முட்டையிடும். நவம்பர் - ஏப்பிரல் இவை முட்டையிட ஏற்ற காலமாகும். இதில், சித்தாமைகள் அதிக அளவில் முட்டையிடும். இவை, இந்திய கிழக்கு கடற்கரை பகுதியான ஒரிசாவின் கஹிர்மாதா, ருசிகுல்யா, தேவி ஆற்று முகத்துவாரத்தில் தான் முட்டையிடுகின்றன. இதற்காக ஆண்டுக்கு ஆறு லட்சம் சித்தாமைகள் தமிழகம், ஆந்திர கடலோரப் பகுதியை கடந்து செல்கின்றன.

பயணத்தின் வழியிலும் முட்டையிடும் பழக்கம் கடல் ஆமைகளுக்கு உண்டு.

## சிந்தனைக்குச் சில....

- அதிகப்படியான சிரிப்பு அறிவு சூனியத்தைக் காட்டிவிடும்
- கோபமாகப் பேசும்போது தான் அறிவு முகத்தைத் திரையிடுகின்றது
- உனது வெற்றிக்காக ஆயிரம் முறை முயற்சி செய் ஓராயிரம் முறை தோல்வியுற்றாலும் மீண்டும் ஒருமுறை முயற்சி செய்ய கைக்கொள்
- பாவம் செய்பவன் மனிதன். பாவம் செய்ததற்காக வருந்துபவன் ஞானி. பாவம் செய்ததற்காகப் பெருமைப்படுபவன் சாத்தான்
- படித்துக் கொண்டிருந்தால் அறிவு பெருகும் என்பது சாப்பிட்டுக் கொண்டிருந்தால் பலசாலி ஆகலாம் என்பதற்கு ஒப்பானது.
- அறிவு கூறும் வழியில் செல்வதை விட இதயம் கூறும் வழியில் செல்வது மேலானது.

# பொது அறிவு

கண்கள் இருந்தும் பார்வையற்ற பிராணி - வௌவால்
எந்த தட்ப வெப்பத்திலும் உறையாத தனிமம் - கிலியம்
பனிக்கட்டியில் மேல் வளரும் தாவரம் - க்ரயோபைட்ஸ்
தன் வாழ் நாளில் நீரே அருந்தாத மிருகம் - கங்காரு எலி
உலகில் முதல் செயற்கை கோள் - ஸ்புட்னிக்-1
மெரினா கடற்கரையை வடிவமைத்து பெயர் சூட்டியவர்- கிரண்டடப்
முதல் முதலில் கேள்விக்குறியைப் பயன்படுத்திய மொழி- இலத்தின்
ஈபிள் ரவரை வடிவமைத்தவர் - கஸ்டவ் ஈபில்.
உலகிலயே மிக வேகமாக ஒடும் பூச்சி இனம் - கரப்பான் பூச்சி மணிக்கு 4.28 வேகத்தில்.
கைரேகையைப் பயன்படுத்தி குற்றவாளியை கண்டுபிடிக்கும் முறையை கண்டுபிடித்தவர்- எட்வர்ட் ஹென்றி.

ஈக்களின் (கொசு) ஆயுட் காலம் - 14 நாள்.
பப்பாளி பழத்தின் தாயகம் - மெக்சிக்கோ.
தக்காளி பழத்தின் தாயகம் - தாய்வாந்து.
ஸ்கூட்டரை கண்டுபிடித்தவர் - கிரேலில் பராட்சா.

# பூனை

சின்னச் சின்னப் பூனை
சிறந்த நல்ல பூனை
என்னைப் பார்த்துத் துள்ளும்
எங்கள் வீட்டுப் பூனை

வட்டமான கண்கள்
வண்ணமான செவிகள்
கட்டையான கால்கள்
காட்டும் நல்ல பூனை

நாயைப் பாத்துச் சீறும்
நகத்தால் மரத்தைக் கீறும்
பாயப் பதுங்கி ஓடும்
பந்தை உருட்டி ஆடும்

உண்ணுஞ் சோறும் பாலும்
ஊட்டி வளர்த்த பூனை
கண்ணைப் போன்ற பூனை
கட்டிக் கரும்புப் பூனை

துள்ளித் துள்ளி ஓடுது
மெள்ளத் தலையைத் தூக்குது!
கள்ள விழியில் பார்க்குது
காட்டுக்குள்ளே மறையுது!


புள்ளி போட்ட சட்டையைப்
போட்டுப் போட்டுக் காட்டுது!
அள்ளிக் கொள்ள நெருங்கினால்
அஞ்சு நூறு தாவுது!

புல்லைப் புல்லை மேயுது
புலியைக் கண்டு ஓடுது!
எல்லை தாண்டிப் போகுது
ஏனோ மாட்டிக் கொள்ளுது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதிகளை ஒழிக்க நடவடிக்கை ஆப்கானிஸ்தானில் ஒபாமா சூளுரை



பக்ராம், டிச. 06

தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு இராணுவச் சிப்பாய்கள் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ளனர்.

இந்த நிலையில் விடுமுறை கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி ஒபாமா கடந்த வெள்ளிக்கிழமை இரவு திடீரென ஆப்கானிஸ்தானுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

அவர் பயணம் செய்த விமானம் பக்ராம் விமான படைத் தளத்தில் தரை இறங்கியது. அங்கு அவரை ஆப்கானிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதர் காரி ஐகென்பெரி, கொமாண்டர் ஜெனரல் டேவிட் பெட் ராயஸ் உயர் அதிகாரிகள் ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர், அவர் பக்ராம் விமான படைத் தளத்திலுள்ள 3,500 அமெரிக்கச் சிப்பாய்கள் மத்தியில் எழுச்சி உரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில்,

நீங்கள் (அமெரிக்க வீரர்கள்) உங்கள் பணியை வெற்றிகரமாக செய்து வருகிறீர்கள். தலிபான்களின் ஆதிக்கம் முடிவுக்கு வரும் வேளை நெருங்கிவிட்டது.

அமெரிக்காவின் மீது தாக்குதல் நடத்தத் துடிக்கும் அவர்கள் ஆப்கானிஸ்தானில் இனி சுகவாசியாகப் பாதுகாப்புடன் வாழ முடியாது. அவர்களை ஒழிப்போம். அதற்காகத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார்.

மேலும் அங்கு பணியில் ஈடுபட்டுள்ள சிப்பாய்களைப் பாராட்டி உற்சாகப்படுத்தினார். இந்த நிகழ்ச்சியில் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி கர்சாய் பங்கேற்கவில்லை.

ஆரம்பத்தில் அவர் கலந்து கொள்வதாக இருந்தது. ஆனால், பாதுகாப்புச் சூழ்நிலை கருதி அவர்களின் சந்திப்பு கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

ஆப்கான் சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ''ஆப்கன் படையினரிடம், அந்நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பை ஒப்படைப்பது மிகவும் சுமுகமாக நடக்கும்'' என ஜனாதிபதி ஹமீத் கர்சாயிடம் உறுதியளித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, வெள்ளிக்கிழமை திடீரென ஆப்கானிஸ்தானில் பக்ரம் என்ற இடத்தில், அமெரிக்கப் படையின் கட்டுப்பாட்டிலுள்ள விமானப்படைத்தளத்துக்குச் சென்றுள்ளார்.

மோசமான வானிலை காரணமாக, அவர் விமானப் படைத் தளத்தை விட்டு வெளியே செல்லவில்லை. எனினும், ஆப்கான் ஜனாதிபதி ஹமீது கர்சாயிடம் தொலைபேசியில் பேசினார்.

ஆப்கன், பாகிஸ்தான் ஆகியவற்றுக்கான மூத்த ஆலோசகரும் ஒருங்கிணைப்பாளருமான டக்ளஸ் ல்யூட் கூறுகையில்,

''எதிர்வரும் 2014இற்குள், ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புப் பொறுப்பு அந்நாட்டு படையினரிடம் ஒப்படைக்கப்படும் என ஜனாதிபதி ஒபாமா உறுதியளித்துள்ளார். இது சுமுகமாக நடைபெறும்'' எனத் தெரிவித்துள்ளார்.

''அதேநேரத்தில், பயங்கரவாதத்துக்கு எதிராக கடந்த ஒன்பதாண்டுகளாக அமெரிக்கா நடத்திவரும் போருக்காக ஜனாதிபதி ஒபாமாவிடம் கர்சாய் நன்றி தெரிவித்துக் கொண்டார்'' என்றார்.

இதற்கிடையில், பாகிஸ்தான், ஆப்கன் ஆகிய நாடுகளுக்கிடையிலான உறவுகள், வர்த்தகம் ஆகியவற்றை மேம்படுத்துவது குறித்து பேச்சு நடத்த, பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி சனிக்கிழமை இரண்டு நாள்கள் பயணமாக ஆப்கன் சென்றுள்ளார்.

ஆப்கன் ஜனாதிபதி மாளிகையில் கர்சாய் தலைமையில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

## பக்தாத்தில் பல இடங்களில் குண்டுவெடிப்பு: 10 பேர் பலி

ஈராக் தலைநகர் பக்தாத்தில் சனிக்கிழமை காலை பல இடங்களில் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களில் ஈரானை சேர்ந்த யாத்திரிகர்கள் 7 பேர் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

கதிமியா என்ற இடத்திலுள்ள விடுதியில் குண்டுவெடித்ததில் ஈரான் நாட்டைச் சேர்ந்த யாத்திரிகர்கள் 5 பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர்.

சுவாலா பகுதியில் வெடிகுண்டு நிரப்பப்பட்ட வாகனம் ஒன்றை ஈரான் யாத்திரிகர்கள் பயணிக்கும் பஸ் மீது ஒருவர் மோதவிட்டு வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளார். இதில் ஈரான் நாட்டவர் 2 பேர்பலியானார்கள். 28பேர்காயமடைந்தனர்.

தெற்கு ஈராக்கில் வெள்ளிக்கிழமை 2 பஸ்கள் மோதிக்கொண்டன. ஈரான் நாட்டு பக்தர்கள் 14 பேர் பலியாயினர். 42 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நடைபெற்று 24 மணி நேரத்திற்குள் இந்த வெடிப்புச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

பக்தாத்தின் புறநகர் பகுதியான பாய்யா என்ற இடத்தில் கார்க் குண்டு வெடித்ததில் 3 பேர் பலியாயினர். 32 பேர் காயமடைந்தனர். நகரின் மத்திய பகுதியிலுள்ள சதுக்கம் ஒன்றுக்கு அருகே பொது மக்களை குறிவைத்து சாலையோரம் வைக்கப்பட்டிருந்த வெடி குண்டு வெடித்ததில் ஒருவர் பலியானார். 8 பேர் காயமடைந்தனர்.



பிரான்ஸின் 2011ஆம் ஆண்டுக்கான அழகு ராணியாகத் தெரிவுசெய்யப்பட்ட லோரி திலிமென், மகுடம் சூட்டப்படுகிறார். வடமேற்கு பிரான்ஸிலுள்ள கேய்ன் சன்னுமிடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இவ்வைபவம் இடம்பெற்றது.

## சீனாவில் வெடிவிபத்து: 6 பேர் சாவு, .37 பேர் காயம்!

பீஜிங், டிச. 06

சீனாவில் இடம்பெற்ற பயங்கர வெடி விபத்தில் 6 பேர் பலியாயினர். 37 பேர் படுகாயமடைந்தனர்.

சீனாவின் தென்மேற்கு மாகாணமான குயிஷ்ஹோ பகுதியிலுள்ள இணையத்தள மையம் ஒன்றில் சனிக்கிழமை இரவு 10.30 மணிக்கு குண்டு ஒன்று வெடித்தது.

இந்த இணையத்தள மையத்திலிருந்த வருகைப்பதிவேடு வெடி விபத்தில் எரிந்து சாம்பலானது. விபத்தில் 6 பேர் வரை பலியாகியுள்ளனர். 37 பேர் படுகாயமடைந்தனர்.

இதில் 11 பேரின் நிலைமை கவலைக் கிடமாகவுள்ளது. விபத்தின் போது அருகிலுள்ள கட்டடங்களும் சேதமடைந்தன.

தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. உள்ளூர் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இந்தியர்களின் வீடுகளில் திருடிய அமெரிக்கப் பெண் கைது

வாஷிங்டன், டிச. 06

அமெரிக்காவைச் சேர்ந்தவர் மெலின்டா எம்.சோட்டோ. இவர் தன் கணவர் டாகோ பெர்ட்டோ ரமிரெஸ் உடன் சேர்ந்து வர்ஜீனியாவிலுள்ள இந்தியர்களின் 37 வீடுகளில் திருடினார்.

ரூபா 3 கோடி மதிப்புக்கு தங்க, வைர நகைகளைத் திருடினார். இந்தத் திருட்டுகள் தொடர்பாக அவர் கைதுசெய்யப்பட்டார். அவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. நீதிமன்றத்தில் திருடியதை அவர் ஒப்புக்கொண்டார்.

## புற்று, இருதய நோய்களை தடுக்க ஆஸ்பிரின் மாத்திரை

லண்டன், டிச. 06

புற்றுநோய், இருதய நோய் ஆகியவை வராமல் தடுக்கும் ஆற்றல் ஆஸ்பிரின் வலிநிவாரண மாத்திரைக்கு உள்ளது என சமீபத்திய ஆய்வு தெரிவிக்கிறது.

மனிதர்களுக்கு 40 வயதை கடந்துவிட்டால், கொடிய நோய்கள் அழையா விருந்தாளிகளாக உடலில் புகுந்து விடுகின்றன.

இதில் புற்றுநோய், இருதய நோய் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. தவிர, உலகில் ஏற்படும் பெரும்பாலான உயிரிழப்புகளுக்கு இந்த இரண்டு நோய்களும் முக்கிய காரணங்களாக உள்ளன.

இந்த நிலையில், 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் தினமும் 75 மி.கி. ஆஸ்பிரின் வலி நிவாரண மாத்திரை எடுத்துக்கொண்டால், புற்றுநோய், இருதய நோய் ஆகியவற்றின் பாதிப்புகளிலிருந்து தற்காத்துக்கொள்ள முடியும் என பிரிட்டன் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தீவிர ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வறிக்கை 'தி லான்செட்' பத்திரிகையில் சமீபத்தில் வெளியிடப்பட்டது.

இதுகுறித்து ரோயல் சொசைட்டி மருத்துவ நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறியவை வருமாறு:-

புற்றுநோய், இருதய நோய் ஆகியவை பெரும்பாலும் நடுத்தர வயதுடையவர்களையும், முதியவர்களையும் தாக்குகின்றன. இதைத் தடுப்பது குறித்து தீவிர ஆய்வு நடத்தப்பட்டது.

இதில், ஆஸ்பிரின் வலி நிவாரண மாத்திரையை தினமும் 75 மி.கி. அளவுக்குத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு சாப்பிட்டவர்களுக்கு, புற்றுநோய், இருதய நோய் ஆகியவற்றின் பாதிப்புகள் வெகுவாக குறைந்தன.

ஆனால் இந்த மாத்திரையை டாக்டர் ஆலோசனையுடன், அவர் குறிப்பிடும் அள வில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு விஞ்ஞானிகள் கூறினர்.

உலக அரங்கில்

## கின்னஸ் சாதனை புத்தகத்தில் சீனாவின் அதிவேக ரயில்

பெய்ஜிங், டிச.06

சீனா மணிக்கு 486 கிலோ மீற்றர் வேகத்தில் இயங்கும் அதிவேக ரயிலை வடிவமைத்துள்ளது. சீனத் தலைநகர் பீஜிங், ஷாங்காய் ஆகிய நகரங்களுக்கிடையே இந்த ரயில் வெள்ளோட்டம் வெள்ளிக்கிழமை விடப்பட்டது.

1,318 கி.மீற்றர் தூரமுள்ள இந்தத் தூரத்தை இந்த ரயில் சுமார் 5 மணி நேரத்தில் சென்றடைந்தது. இந்த ரயில் எதிர்வரும் 2012ஆம் ஆண்டு முதல் பயணிகள் பயன்பாட்டிற்கு விடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில் ஓடத் தொடங்கும் பட்சத்தில் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெறும் வாய்ப்புள்ளது. கடந்த 2007ஆம் ஆண்டு பிரான்ஸின் டி.ஜி.வி. அதிவேக ரயில் மணிக்கு 574 கி.மீற்றர் வேகத்தில் ஓட்டி வெள்ளோட்டம் நிகழ்த்தப்பட்டது.

2005ஆம் ஆண்டு ஜப்பானில் மணிக்கு 581 கி.மீற்றர் வேகத்தில் சோதனை ஓட்டம் நிகழ்த்தப்பட்டது. தற்போது சீனாவின் அதிவேக ரயில் சோதனை ஓட்டம் (வெள்ளோட்டம்) நடத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2012ஆம் ஆண்டு மக்கள் பயணம் செய்யும் வகையில் ஓட்டப்படும். அதற்காக ரூ. ஒரு இலட்சத்து 60 ஆயிரம் கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது என சீன அரசு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்

## O/L மாவட்ட வலம்

கல்வி உலகின் ஊடக முன்னோடி உதயன்

நன்றிக்குரிய ஆசிரியர்
ஆர்.எஸ்.சந்திரன்,
மானிப்பாய் இந்துக்கல்லூரி
(வருகை ஆசிரியர்),
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776649134

வரலாறு

33 - T

முற்றுமுழுதான எதிர்பார்ப்பு வினாக்களுடன் யாழ் பிரபல ஆசிரியர்களின்

## முன்னோடி வெளியீடு - 02

### வரலாறு I — 1 மணித்தியாலம்

* எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. புராதன கால இலங்கையின் வரலாற்று மரபுகள் தொடர்பான சரியான கூற்று பின்வருவனவற்றில் எது?
   1) வரலாற்று மரபைப் பதிவுசெய்த நூல்களில் கிடைப்பனவற்றில் மகாவம்சமே மிகவும் பழைமையானது.
   2) வரலாற்று நூல்களில் மிகவும் பிரசித்தமானது தீபவம்சம் ஆகும்.
   3) இலங்கையின் வரலாற்று மரபு இலங்கையில் பௌத்த சமயம் அறிமுகமானமையை மூலமாகக் கொண்டது.
   4) இலங்கையின் வரலாற்று மரபுகள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்தவர்களின் மரபைக் கொண்டது.

02. பண்டைக்கால இலங்கையின் வரலாற்றை மீள நிர்மாணிப்பதில் மிக பயனுள்ளவையாக அமையும் வரலாற்று ஏடுகளை உள்ளடக்கிய தொகுதி எது?
   1) மகாவம்சம், ராஜாவலிய, கவிசிலுமின.
   2) மகாவம்சம், கவிசிலுமின, தீபவம்சம்.
   3) மகாவம்சம், தீபவம்சம், ராஜாவலிய.
   4) மகாவம்சம், தாதுவம்சம், கவிசிலுமின.

03. அநுராதபுர இராச்சியத்தின் நிர்வாக ஒழுங்கமைப்புத் தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களிடையே சரியான கூற்று எது?
   1) முடியாட்சி சர்வாதிகார முறைமையிலானதாகக் காணப்பட்டது.
   2) உள்ளூர் நிர்வாகம் பற்றிய சட்டங்கள் கல்பொத்த கல்வெட்டில் காணப்பட்டன.
   3) புரோகிதர், தோவரிக்க, சேனாதிபதி ஆகியோர் மத்திய நிர்வாகத்தின் முக்கியமான அலுவலர்களாக இருந்தனர்.
   4) அரசனுக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்ட அமைச்சர் சபை கம்சபா என அழைக்கப்பட்டது.

04. A - உரோமாபுரிக்கு இலங்கைத் தூதுக்குழு சென்றமை.
   B - இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபம் பற்றிய விவரங்கள்.
   C - யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய விவரங்கள்
   D - அபயகிரி விகாரை பற்றிய விவரங்கள்.
   மேலே தரப்பட்டுள்ள வரலாற்று விவரங்களை வெளியிட்ட யாத்திரிகர்களின் பெயர்களைச் சரியான ஒழுங்கு முறையில் காட்டும் விடை யாது?
   1) தொலமி, பிளினி, பாகியன், கொஸ்மஸ்.
   2) பிளினி, கொஸ்மஸ், இபன்பதூதா, பாகியன்,
   3) பிளினி, பாகியன், கொஸ்மஸ், இபன்பதூதா.
   4) தொலமி, இபன்பதூதா, பாகியன், கொஸ்மஸ்.

05. தேவநம்பியதீசன் காலத்தில் இந்தியாவின் அசோக மன்னனுக்கு அனுப்பிய தர்ம தூதுக்குழு இரண்டிற்கும் தலைமைதாங்கிய அமைச்சர் யார்?
   1) அரிட்டன். 2) மகாநாம. 3) தீகாயு. 4) ராமகோப.

06. ஆரியர் மற்றும் தேசிய மக்கள் இனத்தவரிடையே ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதில் வெற்றிகரமான நடவடிக்கை ஒன்றை எடுத்த இலங்கையின் முதலாவது ஆட்சியாளன் யார்?
   1) துட்டகைமுனு. 2) பண்டுகாபயன்.
   3) மகாவிஜயபாகு. 4) மகாபராக்கிரமபாகு

07. தென்மேற்கு நோக்கி இராசதானி கிரமவரிசையில் மாற்றியமை தொடர்பாக சரியான பட்டியல் எது?
   1) தம்பதெனியா, யாப்பகுவ, குருணாகல், கம்பளை, கோட்டை.
   2) தம்பதெனியா, கம்பளை, யாப்பகுவ, குருணாகல், கோட்டை.
   3) தம்பதெனியா, குருணாகல், யாப்பகுவ, கம்பளை, கோட்டை.
   4) தம்பதெனியா, யாப்பகுவ, கம்பளை, குருணாகல், கோட்டை.

08. ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் சாதனையாகக் கருதப்படக்கூடியது,
   1) கலிங்க மாகனைத் தோற்கடித்தமை. 2) சந்திரபானுவைத் தோற்கடித்தமை.
   3) இலங்கையை ஐக்கியப்படுத்தியமை.
   4) பாண்டிய தேசத்தின்மீது படையெடுத்தமை.

09. இலங்கையின் சட்டவாக்க சபைகளில் முதன் முறையாகப் படித்த இலங்கையராக தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி யார்?
   1) எப்.ஆர்.சேனநாயக்க. 2) பொன்னம்பலம் இராமநாதன்.
   3) டி.பி.ஜயதிலக்க. 4) ஜேம்ஸ் பீரிஸ்.

10. போர்த்துக்கேயருக்கும் சிங்களவருக்கும் இடையே உண்டான போர்களின் காலவரன் முறையில் ஒழுங்காக உள்ளடக்கும் விடை யாது?
   1) முல்லேரியா, தந்துரே, ரந்தெனிகல, பலன.
   2) முல்லேரியா, பலன, தந்துரே, ரந்தெனிகல.
   3) முல்லேரியா, தந்துரே, பலன, ரந்தெனிகல.
   4) முல்லேரியா, தந்துரே, கன்னொருவ, பலன.

11. அசோகன் தனது தந்தை இறந்தபோது அரச பதிலாளனாக எந்நகரில் ஆட்சிபுரிந்தான்?
   1) பாடலிபுரம். 2) உச்ஜேனி. 3) தக்ஷிலம். 4) சுவர்ணகிரி.

12. கி.பி 4 - 6 ஆம் நூற்றாண்டுகளில் கங்கை, யமுனை சமவெளிகளை மையமாகக் கொண்டு எழுச்சிபெற்ற பேரரசு எது?
   1) மௌரியப் பேரரசு. 2) குப்த பேரரசு.
   3) மொகலாயப் பேரரசு. 4) விஜயநகரப் பேரரசு.

13. நிரல் X இல் நீர்வள நாகரிக கால மன்னர்களும் நிரல் Y இல் அவர்களது நீர்ப்பாசனப் பணிகளும் தரப்பட்டுள்ளன.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1) வசபன் | A - குருளுவாவி |
| 2) மகாசேனன் | B - மகாவிலச்சியவாவி |
| 3) முதலாம் உபதிஸ்ஸன் | C - கந்தளாய்க் குளம் |
| 4) இரண்டாம் அக்ரபோதி | D - தோப்பவாவி |

   நிரல் X இலுள்ள ஒழுங்குமுறைக்கேற்ப நிரல் Y ஐப் பொருத்தமாக்கும்போது சரியான விடை,
   1) BADC 2) ACDB 3) DCBA 4) CADB

14. இலங்கையின் நீர்வள நாகரிகம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களிடையே பொருத்தமற்ற கூற்று யாது?
   1) மினிப்பே அணைக்கட்டு மகாவலிகங்கையில் அமைந்துள்ளது.
   2) வசப மன்னன் காலத்தில் சுரங்க வழி மூலம் நீர் கொண்டுசெல்லப்பட்டது.
   3) வரலாற்றில் முதற் குளமாக அபயவாவி உள்ளது.
   4) சோழர்களின் படையெடுப்புடன் நீர்நிலைகள் அழிந்தன.

15. அநுராதபுர கால அரசசபையில் இருந்த அதிகாரிகள் நிரல் X இலும், அவர்களால் நிறைவேற்றப்பட்ட பணிகள் நிரல் Y இலும் தரப்பட்டுள்ளன. நிரல் X ஐ நிரல் Y உடன் பொருத்தும்போது சரியான விடை யாது?

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1). தோவரிக்க | A - போர் உபகரணங்களுக்குப் பொறுப்பான அதிகாரி. |
| 2) அசிக்காகிக் | B - திறைசேரிக்குப் பொறுப்பான அதிகாரி. |
| 3) மஹலே | C - வாயில் காப்போன். |
| 4) படகாரிக் | D - அரச ஆவணங்களுக்குப் பொறுப்பான அதிகாரி. |

   1) BCDA 2) ADCB 3) CADB 4) CABD

16. இலங்கையின் பௌத்த சமய வளர்ச்சி பற்றிய பின்வரும் கூற்றுக்களில் மிகவும் சரியான இரு இயல்புகளும் எவை?
   A - தேவநம்பியதீச மன்னன் ஆட்சியின்போது பிக்கு, பிக்குணி சங்கம் தாபிக்கப்பட்டது.
   B - மகாசேன மன்னன் ஆட்சிககாலத்தில் புனித தந்ததாது கொண்டுவரப்பட்டமை.
   C - வலகம்பாகு மன்னன் ஆட்சிக்காலத்தில் திரிபீடகம் நூலவடிவில் தொகுக்கப்பட்டமை.
   D - ஸ்ரீமேவ மன்னன் ஆட்சிக்காலத்தில் பௌத்தமதப் பிரிவுகள் ஒன்றிணைக்கப்பட்டமை.
   1) AB 2) AC 3) CD 4) BD

17. ஐரோப்பாவில் தேசிய இனப்போர் என்று சொல்லத்தக்க நூற்றாண்டுப் போரில் பங்குகொண்ட இரு நாடுகளும் எவை?
   1) இங்கிலாந்து - ஸ்பானியா. 2) இங்கிலாந்து - போர்த்துக்கல்.
   3) இங்கிலாந்து - பிரான்ஸ். 4) இங்கிலாந்து - ஜேர்மனி.

18. A - ஜேர்மனியில் நாசிஸம் எழுச்சி பெற்றமை.
   B - ரஷ்யா, இத்தாலி என்பவற்றுக்கு இடையிலான காலனித்துவப் போட்டி.
   C - சர்வதேச சங்கம் தோல்வியுற்றமை.
   D - பேர்லின், ரோம், டோக்கியோ ஆகிய அச்சுக் கூட்டணியின் உருவாக்கம்.
   மேல்வருவனவற்றில் இரண்டாம் உலகப்போருக்கு வழிவகுத்த காரணங்கள் யாவை?
   1) ACD 2) BCD 3) ABC 4) ABD

19. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குச் செல்வாக்கு செலுத்திய ஒன்றாகக் கருதப்படக்கூடிய காரணி.
   1) சமய நடவடிக்கைகளுக்காக பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டமை.
   2) பிரதேசத் தலைவர்களின் பலம் குறைந்துசென்றமை.
   3) ஸ்கந்தகுப்தனின் பின் ஆட்சிக்கு வந்தவர் பலம் குன்றியிருந்தமை.
   4) மகா அலெக்சாண்டரின் படையெடுப்புக்கள்.

20. ''நிலம், பாண், சமாதானம்'' எனும் சுலோகத்துடன் இடம்பெற்ற புரட்சி எது?
   1) ரஷ்யப் புரட்சி. 2) பிரான்ஸியப் புரட்சி.
   3) அமெரிக்கப் புரட்சி. 4) ஆங்கிலப் புரட்சி.

21. சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுவதில் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகள் சில வேளைகளில் தோல்வி கண்டதற்கான காரணம் பின்வருவனவற்றுள் எது?
   1) செயலாளர் நாயகத்தின் வினைத்திறனின்மை.
   2) வல்லரசு நாடுகளின் வீட்டோ அதிகாரம்.
   3) உறுப்பு நாடுகள் குழுக்களாகப் பிரிதல். 4) வல்லரசுகளின் அதிகாரப்போட்டி.

22. 16ஆம் நூற்றாண்டளவில் இலங்கையில் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுகளின் ஆண்டுகள் சில நிரல் X இல் உள்ளன. அவ்வாண்டுகளில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகள் சில நிரல் Y இல் உள்ளன. நிரல் X ஐ நிரல் Y உடன் பொருத்தமாக்கும்போது சரியான விடை யாது?

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. கி.பி 1521 | A - முதலாம் இராஜசிங்கன் கண்டி மீது படையெடுத்தமை. |
| 2. கி.பி 1557 | B - தர்மபாலன் கத்தோலிக்கனாகச் சமயம் மாறியமை. |
| 3. கி.பி 1562 | C - முல்லேரியாப் போர். |
| 4. கி.பி 1582 | D - விஜயபாகு கொள்ளைச் சம்பவம். |

   1) ACBD 2) CABD 3) DBCA 4) BCAD

23. ஜப்பானில் டொகுகாவா ஷோகுன் அரசவம்சத்தை ஏற்படுத்திய ஆட்சியாளன் யார்?
   1) இயேயாசு. 2) ஹிடேதடா. 3) இயேமிஞ்சு. 4) சுனயோஷி.

24. சீனாவில் ஆட்சியிலிருந்த இறுதி அரசவம்சம் எது?
   1) ஷாங்வம்சம். 2) டாங்வம்சம். 3) சின் வம்சம். 4) மஞ்சு வம்சம்.

25. பிரான்ஸியப் புரட்சியின் பிரதான கட்டங்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் பொருத்தமற்ற கூற்று எது?
   1) ஸ்ரேற் ஜெனரல் என்ற பாராளுமன்றம் கூடியமை.
   2) டெனிஸ் மைதானத்தின் சத்தியப் பிரமாணம்.
   3) 17ஆம் லூயி மன்னன் முடிசூட்டப்பெற்றமை.
   4) பஸ்ரீஸ் சிறைச்சாலை தகர்த்தமை.

26. இந்தியாவில் குடியேறிய ஆரியர்களின் வாழ்க்கை பற்றிய சரியான விடயம் அடங்கிய கூற்று எது?
   1) ஆரிய முதல் குடியிருப்பு தக்கணத்தில் தாபிக்கப்பட்டது.
   2) ஆரிய சமூகம் தாய்வழிச் சமூகம் ஆகும்.
   3) சமூக அமைப்பின் அலகாகக் குடும்பம் விளங்கியது.
   4) சமூகப் பிரிவில் சத்திரிய குலமே உயர்வாகக் காணப்பட்டது.

27. மத்திய கிழக்கு நாடுகளில் தமது ஆதிக்கத்தை செலுத்த ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா சேர்ந்து உருவாக்கிய புதிய நாடு எது?
   1) இஸ்ரேல். 2) பலஸ்தீனம். 3) குவைத். 4) துருக்கி.

28. 19ஆம் நூற்றாண்டில் இந்துசமய மறுமலர்ச்சியைத் தொடக்கியவர் யார்?
   1) நடேச ஐயர். 2) சேர்.பொன்.அருணாசலம்.
   3) முத்துக்குமாரசாமி. 4) ஆறுமுகநாவலர்.

29. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இறுதியாக அமைக்கப்பட்ட மாகாணம் எது?
   1) சப்பிரகமுவ மாகாணம். 2) ஊவா மாகாணம்.
   3) வடமேல் மாகாணம். 4) வடமத்திய மாகாணம்.

30. உலகப் புகழ்மிக்க ஸ்வேதகொன் விகாரை எந்த நாட்டில் உள்ளது?
   1) சீனா. 2) பர்மா. 3) சீயம். 4) ஜாவா.

31. A - சுயதேவை கிராமப் பொருளாதாரம் வீழ்ச்சியடைதல்.
   B - இடையிடையே ஏற்பட்ட பஞ்சம்.
   C - கைத்தொழிலை வளர்க்கப் பிரித்தானியர் முயற்சித்தல்.
   D - ஜனநாயகம் பற்றிய விளக்கம் இந்தியரிடம் இல்லாமை.
   மேற்குறித்த விடயங்களில் இந்தியர்களிடையே தேசிய உணர்வு ஏற்பட வழிகோலிய காரணங்கள் முறையே,
   1) AB 2) AC 3) BD 4) BC

32. மேஜீஜீ காலத்தில் ஜப்பானின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட முக்கியமான மாற்றம் எது?
   1) விவசாயத்தை முதன்மையான பொருளாதாரமாகக் கொள்ளல்.
   2) வியாபாரத்தை முதன்மையான பொருளாதாரமாகக் கொள்ளல்.
   3) மானியமுறையை முதன்மையான பொருளாதாரமாகக் கொள்ளல்.
   4) கொமினிஷ கொள்கைகளுக்கு ஏற்ப பொருளாதாரத்தை மேம்படுத்தல்.

33. சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணும் முக்கிய பொறுப்புள்ள ஐக்கிய நாடுகள் அமையத்தின் உறுப்பு பின்வருவனவற்றுள் எது?
   1) பொருளாதார சங்கசபை. 2) நம்பிக்கைப் பொறுப்புச்சபை.
   3) பொதுச்சபை. 4) பாதுகாப்புச் சபை.

34. இலங்கை அரசியல் யாப்புத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்குப் பெறவேண்டிய பாராளுமன்ற மொத்த உறுப்பினர்களின் ஆகக்குறைந்த வாக்குகளின் எண்ணிக்கை யாது?
   1) மூன்றிலொன்று. 2) இரண்டிலொன்று.
   3) மூன்றிலிரண்டு. 4) ஆறில் ஐந்து.

35. 1978ஆம் ஆண்டு யாப்பின்படி நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி உரித்தற்ற பணி பின்வருவனவற்றுள் எது?
   1) பிரதம நீதியரசரை நியமித்தல். 2) சபாநாயகரை நியமித்தல்.
   3) பிரதமரை நியமித்தல். 4) மாகாண ஆளுநரை நியமித்தல்.

36. நாட்டின் அடிப்படைச் சட்டங்கள் போன்று மேன்மையான உயர்சட்டம் பின்வருவனவற்றுள் எது?
   1) அரசியல் யாப்பு. 2) தண்டனைச் சட்டக்கோவை.
   3) தாபனக் கோவை. 4) மீயுயர் நீதிமன்றத் தீர்ப்புகள்.

37. ஜேர்மனிய ஐக்கியப்படுத்துவதற்குச் சாதகமாக அமைந்த காரணி எது?
   1) அல்சேஸ் லொறேயின் பகுதிகள் ஜேர்மனியுடன் இணைந்தமை.
   2) ஆஸ்திரியா வழங்கிய பேராதரவு.
   3) பிஸ்மாக்கினுடைய ராஜதந்திர ஆற்றல்கள்.
   4) நெப்போலியனின் சட்டத்தொகுப்பு அமுலாக்கப்பட்டமை.

38. 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழிற்புரட்சியின் பேறான கண்டுபிடிப்புகள் இடம்பெறும் நான்கு சோடிகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் பிழையான சோடி எது?
   1) ஜோன் கே - நெசவு நாடா.
   2) ஜோன் ஆக்ரைட் - நீர்ச்சட்டம்.
   3) கிரகாம்பெல் - தொலைபேசி.
   4) டெம்னற் - புகைபோக்கிப் படகு.

39. சீனப் பிக்குவான ஹியுங் சாங் இந்தியாவில் பௌத்த சமயத்தைக் கற்றுக்கொண்ட பல்கலைக் கழகம் எது?
   1) நாலாந்த. 2) தக்ஷில. 3) விக்கிரமசீலா. 4) ஜகத்தலா.

40. பின்வருவனவற்றுள் இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி தொடர்பான சரியான கூற்று எது?
   1) கிராமிய விவசாய தேவைகளுக்கு இராஜகாரிய முறையைப் பயன்படுத்தினர்.
   2) நெற்பயிர்ச்செய்கைக்குப் பொருளாதாரத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டமை.
   3) தேசிய கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தமை.
   4) பெருந்தோட்டப் பயிர்களின் மீது அதிக அக்கறை காட்டியமை. (23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கைகளை

# அரசு சாதகமாக பரிசீலித்தால் மாணவர்களுக்கு இலவச பயண வசதி

கொழும்பு,டிசெ.6

தனியார் பஸ் உரிமையாளர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கு அரசு சாதகமான பதிலை அளிக்குமானால் அடுத்த வருடம் முதல் பாடசாலை மாணவர்களுக்கு தங்கள் பஸ்களில் இலவசமாகப் பயணம் செய்யும் அனுமதியை வழங்குவோம் என்று ஐக்கிய இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சம்மேளனத்தின் இணைத் தலைவர் ரூபன் சில்வா தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்தின் பின் தனியார் பஸ் உரிமையாளர்களின் நிலைப்பாடு பற்றித் தெளிவுபடுத்துவதற்காக நாரஹேன்பிட்டி மகளிர் ஆராய்ச்சி கேந்திர நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பொன்றின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனியார் பஸ்கள் இன்றி இலங்கைப் போக்குவரத்துச் சபையால் மட்டும் தனியாகப் போக்குவரத்து வசதிகளை வழங்க முடியாது. டிசெம்பர் 11ஆம் திகதி பஸ் உரிமையாளர்களின் வீடு வீடாகச் சென்று அவர்களுக்கு ஆலோசனை வழங்கவுள்ளோம். - என்றார்.

சம்மேளனத்தில் இணைத் தலைவர் ஸ்டான்லி பெர்னாந்து கருத்துத் தெரிவிக்கையில் -

தற்சமயம் கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையில் சுமார் ஆயிரம் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. எனவே மேலதிகமாக அனுமதிப் பத்திரங்களை வழங்குவதை அரசு நிறுத்த வேண்டும். மேலும் 150 பஸ்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. அது அவசியமற்றது.

போக்குவரத்துக்கு ஓர் அமைச்சரும் தனியார் பஸ் போக்குவரத்துக்கு வேறொரு அமைச்சரும் நியமிக்கப்பட்டுள்ளதால் ஒன்றிணைந்த நேர அட்டவணையை தயாரிப்பது சிரமமாகிறது - என்றார்.

சம்மேளனத்தின் பிரதான செயலாளர் அஞ்சன பிரியன்ஜித் கிட்டத்தட்ட 18 ஆயிரம் தனியார் பஸ்கள் இப்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பயணிகள் போக்குவரத்தில் 70 வீதத்தை தனியார் பஸ்களே வழங்குகின்றன. எனவே தனியார் பஸ்களின் உதவியின்றி அரச பஸ் சேவையால் ஒருபோதும் முற்றான போக்குவரத்தை வழங்க முடியாது. டிசெம்பர் 11ஆம் திகதி பஸ் உரிமையாளர்களின் வீடு வீடாகச் சென்று அவர்களுக்கு ஆலோசனை வழங்கவுள்ளோம்- என்றார்.(ஐ-5)

## வரலாறு II — 3 மணித்தியாலங்கள்

- பகுதி I இல் முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி III இல் இருந்து இரு வினாக்களுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

01. அ. கீழே (1) இன் கீழ்க் காட்டப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (2) இன் கீழ்க் காட்டப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்ட உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.
   1) திஸாவாவி, தம்பதெனிய, மல்வானை, ஊரத்தோட்ட, தீகவாவி, தெதுறு ஓயா, கொட்டியாரம், சிதுல்பவ்வ, மடு தேவாலயம், சமந்தகூட.
   2) லண்டன், சிசிலித் தீவு, பாக்தாத், பீஜிங், இமயமலை, கோவா, பேர்ள் துறைமுகம், ஜெருசலம்.

   ஆ. 1) கீழே A, B, C, D எனக் காட்டப்பட்டுள்ள வரலாற்றுப் பிரசித்திபெற்ற நிகழ்ச்சிகளுடன் தொடர்புபட்டவர்களை ஒழுங்குமுறையாகத் தருக.
   A. பொலநறுவைக் காலத்திற்குரிய கல்பொத்த என்ற கற்பலகைச் சாசனத்தை உருவாக்கிய அரசன் யார்?
   B. கி.பி 2ஆம் நூற்றாண்டில் இலங்கையையும் உள்ளடக்கிய உலகப்படத்தை வரைந்தவர் யார்?
   C. றோயல் அக்கடமி (Royal Academy) எனும் தாபனத்தை ஆரம்பித்து கல்வி நடவடிக்கையை முன்னெடுத்த பிரித்தானிய ஆளுநர் யார்?
   D. போர்த்துக்கேயரின் நாடுகாண் பயணங்களின் குறிக்கோளை வெளிப்படுத்தும் ''நாம் வாசனைத் திரவியங்களையும் கிறிஸ்தவர்களையும் தேடியே வந்தோம்'' எனப் பிரகடனப்படுத்திய கடலோட்டி யார்?

   2) கீழே A, B, C, D எனக் காட்டப்பட்டுள்ள கலைப்படைப்புக்களை முறையே குறிப்பிடுக.


A



B


C


D

   3) கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.
   A. அயல் இராச்சியங்களுடன் அரசுரிமை உறவுகளைப் பேணி அதிகாரச் சமநிலையுடைய வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றிய பொலநறுவை ஆட்சியாளர் யார்?
   B. முதலாம் இராஜசிங்க மன்னனால் கட்டப்பட்டதாகக் கருதப்படும் வரலாற்றுப் புகழ்பெற்ற பெரண்டி ஆலயம் எந்த இராச்சியக் காலத்திற்கு உரித்தான தொல்பொருள் சின்னம்?
   C. ஆதிகாலத்தில் அரேபிய இனத்தவர்கள் இலங்கையைக் குறிப்பிடப் பயன்படுத்திய பெயர் யாது?
   D. இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது நாஸிசவாதத்துக்கு எதிராக மக்களை அணிதிரளச்செய்த பிரித்தானியப் பிரதமர் யார்?

### பகுதி II




02. 1) இலங்கையின் பண்டைய மூன்று பிரதேசப் பிரிவுகள் தரப்பட்டுள்ள தேசப்படத்தில் A,B,C எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குவரிசைப்படி பெயரிடுக.
   2) அநுராதபுரக் காலத்தில் பின்வரும் பணிகளுக்குப் பொறுப்பான நடவடிக்கைகளை மேற் கொண்டவர்களின் உத்தியோகபூர்வ பதவிப் பெயர்களைக் குறிப்பிடுக.
   A. அரசனின் ஆலோசகராகப் பணியாற்றுதல்.
   B. அரசனின் திறைசேரிக்குப் பொறுப்பாகப் பணியாற்றுதல்.
   C. அநுராதபுர நகரின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாகப் பணியாற்றுதல்.
   D. கிராமத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாகப் பணியாற்றுதல்.
   3) அநுராதபுர - பொலறுநவைக் காலத்தில் அரசர்கள் மக்களுக்காக எத்தகைய பணிகளை ஆற்றினார்கள் என்பதை இரண்டு விடயங்கள் கொண்டு விளக்குக.
   4) அநுராதபுர, பொலநறுவைக் காலப்பகுதியில் வளர்ச்சிபெற்ற நிலையிலேயே கலைகள் இருந்தன என்பதை உதாரணங்கள் இரண்டின் மூலம் விவரிக்குக.

03. 1) கீழே குறிப்பிடப்படும் ஒவ்வொரு விளக்கத்திற்கும் பொருத்தமான நீர்ப்பாசனப் பெயரை A, B, C என்ற ஒழுங்கு வரிசைப்படி எழுதுக.
   A. தேவநம்பியதிஸ்ஸ மன்னனால் கட்டப்பட்ட அநுராதபுர நகருக்கு அண்மையிலுள்ள வாவி.
   B. அம்பன்கங்கையை மறித்து அணைகட்டி நீரைக் கொண்டு செல்வதற்காக வசப மன்னனால் கட்டப்பட்ட கால்வாய்.
   C. தோபா வாவியையும் தும்புறு வாவியையும் இணைத்துக் கட்டப்பட்ட பெரிய நீர்ப்பரப்பு.
   2) பின்வரும் குளங்கள் எந்த நதியுடன் தொடர்புடையவை என A, B, C, D என்ற ஒழுங்கு வரிசைப்படி குறிப்பிடுக.
   A. கலாவாவி. B. மஹகனதரவாவி.
   C. குருலு வாவி. D. நாச்சதுவ வாவி.
   3) ஒரு குளத்தின் பிரதான பகுதிகள் இரண்டினைக் குறிப்பிட்டு அப்பகுதிகளினால் வெளிப்படுத்தப்படும் முன்னோரின் தொழில்நுட்ப அறிவைச் சுருக்கமாக எழுதுக.
   4) மகாபராக்கிரமபாகு மன்னன் தக்கிண தேசத்து அரசனாக இருந்த காலத்தில் அமைத்த நீர்ப்பாசனத் திட்டங்களை மூன்று உதாரணங்கள் தந்து விவரிக்குக.

04. 1) A. 2ஆம் பராக்கிரமபாகு. B. முதலாம் புவனேகபாகு.
   C. 6ஆம் பராக்கிரமபாகு.
   ஆகிய அரசர்கள் ஆட்சி நடத்திய இராச்சியங்களின் பெயர்களை ஒழுங்கு வரிசைப்படி குறிப்பிடுக.
   2) கீழே தரப்படும் விவரங்களில் கூறப்படுபவர்கள் யார் என்பதை A, B, C என்ற ஒழுங்கு வரிசைப்படி எழுதுக.
   A. கி.பி 1344இல் இலங்கைக்கு வந்த முஸ்லிம் பயணி.
   B. 6ம் புவனேகபாகு என்னும் பெயரில் கோட்டை அரசனான இளவரசன்.
   C. கம்பளை இராசதானிக் காலத்தில் இலங்காதிலக விகாரையைக் கட்டிய சேனாதிபதி.
   D. ஐக்கிய இலங்கையைத் தோற்றுவித்த கடைசி மன்னன்.
   3) சிங்கள இராசதானிகள் தென்மேற்கு நோக்கி புலம்பெயர்ந்த காலத்தில் நிலவிய பொருளாதார இயல்பினை இரண்டு விடயங்கள் மூலம் விளக்குக.
   4) கோட்டை அரசன் 6ஆம் பராக்கிரமபாகுவின் அரசியல் சாதனைகளை இரண்டு விடயங்கள் கொண்டு விளக்குக.

05. 1) இலங்கையின் அரசியல் செல்வாக்கைப் பரப்புவதற்கு வந்த
   A. போர்த்துக்கேயர் B. ஒல்லாந்தர் C. ஆங்கிலேயர்
   ஆகிய ஐரோப்பியர்களின் தாய்நாட்டின் பெயர்களைக் கீழே தரப்பட்ட அட்டவணையிலிருந்து தெரிந்தெடுத்து அதே ஒழுங்கில் தருக. (இங்கிலாந்து/ஸ்பானியா/போர்த்துக்கல்/நெதர்லாந்து/இத்தாலி/பிரான்ஸ்)
   2) A. ஜோன் டொய்லி எனும் பிரித்தானியர் மலைநாட்டு ''ரெசிடனற்'' என நியமித்தல்.
   B. ஒல்லாந்தரினால் இலங்கையின் கரையோரப் பிரதேசம் பிரித்தானியருக்கு கையளிக்கப்படல்.
   C. அரசாங்கத்தினால் இந்நாட்டில் ஆங்கிலமொழி மூலமாகக் கல்வி வழங்கப்பட வேண்டுமென விதந்துரைக்கப்படுதல்.
   D. பிரித்தானியருக்கு எதிராக ஊவாவெல்ஸ்ஸவில் முதலாவது சுதந்திரப் போராட்டம் ஆரம்பமாகுதல் எனும் இந்த ஒவ்வொரு நிகழ்வுடன் தொடர்பான ஆண்டினை ஒழுங்கு வரிசைப்படி எழுதுக.
   3) கி.பி 1815இல் பிரித்தானிய ஆளுநர் ரொபேட் பிறவுண்றிக் கண்டி இராச்சியத்தை இலகுவில் கைப்பற்றக்கூடியதாக இருந்தது ஏன் என்பதைக் இரு சான்றுகளைக் கொண்டு விவரிக்குக.
   4) பிரித்தானியர் ஆட்சியினால் இலங்கை பெற்ற நன்மை ஒன்றையும் தீமை ஒன்றையும் விளக்குக.

06. 1) இலங்கையில் ஆரம்பமான அரசியல் கட்சிகள் சில காணப்படுகின்றன. அக்கட்சிகளின் தலைவர்களை தரப்பட்ட பட்டியலில் இருந்து தெரிந்தெடுத்து A, B, C என்ற ஒழுங்கில் எழுதுக.
   A. இலங்கைத் தொழிலாளர் கட்சி. B. இலங்கை சமசமாஜக் கட்சி.
   C. இலங்கை கொம்யூனிஸக் கட்சி.
   (பிலிப் குணவர்த்தன/என்.எம்.பெரேரா/ஏ.ஈ.குணசிங்க/கொல்வின் ஆர்.டீ.சில்வா/எஸ்.ஏ.விக்கிரமசிங்க/டீ.எஸ்.சேனநாயக்க)
   2) ஜனாதிபதிக்குரிய அதிகாரமும் பணிகளும் நான்கு குறிப்பிடுக.
   3) ஜனநாயக ரீதியில் நாடு முன்னேற்றம் அடைவதற்கு அரசியல் கட்சிகள் இருத்தலின் முக்கியத்துவத்தை இரு விடயங்கள் கொண்டு விளக்குக.
   4) இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார பிரதிநிதித்துவத்தின் ஒரு பலத்தையும் பலவீனத்தையும் விவரிக்குக.

### பகுதி III

07. ''மத்திய ஐரோப்பா நவீன ஐரோப்பாவாக மாற்றம் அடைவதற்கு மறுமலர்ச்சியே பிரதான காரணமாகும்.''
   1) மேலே குறிப்பிடப்பட்டவாறு ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாக செல்வாக்குக்கு உட்பட்ட மூன்று துறைகளைப் பெயரிடுக.
   2) ஐரோப்பாவில் மறுமலர்ச்சி தோன்றுவதற்கான காரணங்கள் இரண்டு கூறுக.
   3) மறுமலர்ச்சிக் காலத்தில் மாட்டின் லூதர் சமய மறுமலர்ச்சிக்கு மேற்கொண்ட பங்களிப்பினை இரண்டு விடயங்கள் கொண்டு விளக்குக.
   4) மறுமலர்ச்சியினால் ஐரோப்பாவில் ஏற்பட்ட விளைவுகளை மூன்று விடயங்கள் கொண்டு விளக்குக.

08. 1) பின்வரும் நிகழ்ச்சிகளுடன் தொடர்புபட்ட மூவரைக் கீழேயுள்ள பட்டியலில் இருந்து தெரிந்தெடுத்து A, B, C என்னும் ஒழுங்கில் குறிப்பிடுக.
   A. சீனக் கூட்டாட்சியின் முதலாவது ஜனாதிபதியான இவர் மீண்டும் மன்னராட்சி முறையை உருவாக்குவதற்கு முயற்சி மேற்கொண்டு தோல்வியடைந்தவர்.
   B. சீன மக்களிடையே தேசப்பற்றையும், இன உணர்வையும் வளர்ச்சியடையச் செய்த இவரை மக்கள் ''புரட்சியின் தந்தை'' என அழைத்தனர்.
   C. ''நாடுகளுக்குச் சுதந்திரம் தேவை. இனங்களுக்கு விடுதலை தேவை, மக்களுக்கு புரட்சி அவசியம்'' எனக் கூறிய இவர் சீனாவின் கொமியூனிஸ ஆட்சியின் பிரதமரும் ஆவார்.
   (சியாங்-காய்-செக் / சங்-யாத்-சென் / மா-ஓ-சேதுங் / சௌ-என்-லாய் /யுவான்-ஷி-காயிகே )
   2) தேசியவாதப் புரட்சியை சீனாவில் ஏற்படுத்த கோமிங்டாங் கட்சி மேற்கொண்ட இரு நடவடிக்கைகளைக் கூறுக.
   3) கோமிங்டாங் கட்சி வீழ்ச்சியடைவதற்குச் செல்வாக்குச்செலுத்திய காரணிகள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக.
   4) சீனாவில் கொம்யுனிஸ ஆட்சி நிறுவ மா-ஓ-சேதுங் மேற்கொண்ட மூன்று நடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்குக.

09. ''பிரான்ஸியப் புரட்சி நவீன ஐரோப்பாவினுடைய உருவாக்கத்தை செல்வாக்குக்குட்படுத்திய மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும்.''
   1) பிரான்ஸியப் புரட்சிக்கு பங்களிப்புச்செய்த தத்துவ அறிஞர்கள் மூவரின் பெயர்களைத் தருக.
   2) பிரான்ஸியப் புரட்சிக்கான காரணங்கள் இரண்டினைத் தருக.
   3) புரட்சிக்கு முன் பிரான்ஸில் நிலவிய சமூக அமைப்பினைப் பற்றி இரு விடயங்கள் கொண்டு சுருக்கமாக விளக்குக.
   4) பிரான்ஸியப் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளை மூன்று விடயங்கள் கொண்டு விளக்குக.

10. 1) பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புபட்டவர்களை A, B, C ஒழுங்கில் தருக.
   A. முதலாம் உலகப் போர் உருவாகும்வேளை ஐரோப்பிய நாடுகளை இரு அணிகளாகப் பிரிப்பதில் முக்கிய பங்குவகித்தவர்.
   B. முதலாம் உலகப் போருக்கு உடனடிக் காரணமாக அமைந்த சரஜிவோ சம்பவத்தில் கொலை செய்யப்பட்ட ஆஸ்திரிய முடிக்குரிய இளவரசன்.
   C. ஜேர்மனியின் அதிகாரத்தை ஆசியாவில் பரப்பும் நோக்குடன் பேர்ளின் முதல் பாக்தாத் வரை புகையிரதப் பாதை அமைப்பதில் கவனம்செலுத்திய ஜேர்மனிய பேரரசன்.
   2) ஐக்கிய நாடுகள் சபையின் இரு நோக்கங்களைக் குறிப்பிடுக.
   3) ஐக்கிய நாடுகள் சபையில் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணும் முக்கிய பொறுப்பு எச்சபையிடம் உள்ளது? அதன் செயற்பாடுகளையும் அதிகாரங்களையும் இரு விடயங்கள் கொண்டு விளக்குக.
   4) ஐக்கிய நாடுகள் சபை தனது செயற்பாடுகளின்போது முகம்கொடுக்க நேரிட்ட இரு பிரச்சினைகளை உதாரணங்கள் கொண்டு விளக்குக.

(முற்றும்)

**உங்கள் அபிமான கல்விச்சுடரில் தற்போது யாழ் பிரபல ஆசிரியர்களின் வினாத்தாள்கள்**

| | | |
|---|---|---|
| 06.12.2010 | - கணிதம் | - கே.சசிதரன் |
| 07.12.2010 | - ஆங்கிலம் | - பி.மதன் |
| 08.12.2010 | - தமிழ்மொழி | - கே.கே.சஸ்வரன் |

இவற்றுக்குரிய விடைகள் யாவும் எதிர்வரும் 09ஆம், 10ஆம் திகதிகளில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்டனாக நீடிக்கிறார் கம்பீர்



நியூசிலாந்துக்கு எதிரான எஞ்சிய இரு ஒரு நாள் போட்டிகளுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. கப்டனாக கவுதம் கம்பீர் நீடிக்கிறார். ஜாகிர்கான், அணிக்குத் திரும்பியுள்ளார். சுரேஷ்ரெய்னா, ஸ்ரீசாந்துக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியா வந்துள்ள நியூசிலாந்து அணி 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று போட்டிகளில் வென்ற கம்பீர் தலைமையிலான இளம் இந்திய அணி, 3-0 என தொடரை வென்றுள்ளது.

இந்நிலையில் எஞ்சிய போட்டிகளுக்கான அணி அறிவிக்கப்பட்டது. நான்காவது போட்டி பெங்களூரிலும், ஐந்தாவது போட்டி சென்னையிலும் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் பங்கேற்கவுள்ள இந்திய அணியின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

டோனி, சச்சின், சேவாக், ஹர்பஜன் ஆகிய சிரேஷ்ட வீரர்களுக்குத் தொடர்ந்து ஓய்வு அளிக்கப்படுகிறது. கப்டன் பதவியில் கம்பீர் நீடிக்கிறார்.

தொடைப் பகுதியில் ஏற்பட்ட காயத்தில் இருந்து மீண்ட வேகப் பந்துவீச்சாளர் ஜாகிர்கான் அணிக்கு திரும்பியிருக்கிறார். பிரவீண்குமார் மீண்டும் வாய்ப்புப் பெற்றுள்ளார். கடந்த போட்டிகளில் 7 விக்கெட் வீழ்த்தி அசத்திய ஸ்ரீசாந்த் மற்றும் சுரேஷ் ரெய்னாவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

நான்காவது மற்றும் ஐந்தாவது போட்டிக்கான அணியில் இரண்டு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

மூன்றாவது போட்டிக்கான அணியில் இடம் பெற்ற சகாவுக்கு பதில், விக்கெட் கீப்பராக பார்த்திவ் படேல் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதே போல வினய் குமாருக்கு பதில் ரோகித் சர்மா சேர்க்கப்பட்டுள்ளார். சுமார் ஆறரை ஆண்டுகளுக்குப் பின் இந்திய அணியில் வாய்ப்புக் கிடைத்துள்ளது பற்றி மகிழ்ச்சி தெரிவித்தார் பார்த்திவ் படேல்.

# கோர்னி கோவா திருமணம்?



ரெனிஸ் அரங்கில், கவர்ச்சி கலாசாரத்துக்கு வித்திட்டவர் அன்னா கோர்னிகோவா. கிளுகிளு உடையில் களமிறங்கி ரசிகர்களை கிறங்கடித்த இவர், 'பஷன்' உலகிலும் கொடி கட்டிப் பறக்கிறார். கடந்த 8 ஆண்டுகளாகப் பொப் பாடகர் என்ரிக் இக்லிசியாசை காதலித்து வருகிறார். இவர்களது திருமண விடயம் மட்டும் தொடர்ந்து பரம ரகசியமாக உள்ளது.

ரெனிஸ் அரங்கில் ரஷ்யாவின் அன்னா கோர்னிகோவா பெரிதாகச் சாதிக்கவில்லை. ஆனாலும், தனது வசீகர தோற்றத்தால் உலக ரசிகர்களைக் கவர்ந்தார். முதுகு மற்றும் தண்டுவடத்தில் ஏற்பட்ட வலி காரணமாக, சர்வதேச போட்டிகளில் இருந்து இளம் வயதிலேயே ஓய்வு பெற்றார். அவ்வப்போது கண்காட்சிப் போட்டிகளில் மட்டும் பங்கேற்று வருகிறார். கடந்த 2002 முதல் ஸ்பெயினை சேர்ந்த பிரபல பொப் பாடகர் என்ரிக் இக்லிசியாசைக் காதலித்து வருகிறார். எஸ்கேப் என்ற என்ரிக்கின் அல்பத்தில் நடித்து பரபரப்பு ஏற்படுத்தினர். இவர்களது திருமணம் 2003 இல் நடந்ததாக செய்திகள் வெளியாகின. இதனை இருவரும் மறுத்தனர். பின் 2007, 2008 ஆம் ஆண்டுகளில் இவர்களது திருமணம் குறித்த செய்திகள் மீண்டும் வெளியாகின.

சமீபத்தில் அன்னா கோர்னிகோவா தனது விரலில் விலை உயர்ந்த வைர மோதிரம் அணிந்துள்ளார். இதை யடுத்து இவர்கள் திருமணம் முடித்துக் கொண்டதாகச் செய்தி அடிபடுகிறது. இது குறித்து 29 வயதான அன்னா கூறுகையில், திருமணம் முடித்த சிலர் கூட, எங்களைப் போல 8 ஆண்டுகளாக ஒன்றாக வாழ்ந்ததில்லை. நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம் - என்றார். (த)




# ஊழல் குற்றச்சாட்டுக்கள் உண்மையற்றவை

## பிபா உப தலைவர்

தமக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என சர்வதேச உதை பந்தாட்டப் பேரவையின் உப தலைவர் இஸ்ஸா ஹயட்டோவு தெரிவித்துள்ளார்.

பி.பி.சி சர்வதேச ஊடகத்தில் அண்மையில் வெளியிடப்பட்ட ஓர் விவரணத்தில் ஹயட்டோவு லஞ்சம் பெற்றுக் கொண்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. ஐ.எஸ்.எல். என்ற விளையாட்டுத்துறை சந்தைப்படுத்தல் நிறுவனத்திடம் 100,000 பிரெஞ்சு பிராங்குகளை ஹயட்டோவு லஞ்சமாகப் பெற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணம் ஆபிரிக்க உதை பந்தாட்டப் பேரவைக்காகத் தாம் பெற்றுக் கொண்டதாகவும், இதனை தமது சொந்தப் பாவனைக்காகப் பயன்படுத்தவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு எதிராகப் பிழையான செய்திகளை வெளியிட்ட பி.பி.சி நிறுவனத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்ந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். 1995 ஆம் ஆண்டு இந்த லஞ்சப் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# நாடலுக்கு ராசியான ஆண்டு



உலகின் முதல்தர ரெனிஸ் வீரரான, ஸ்பெயினின் ரபேல் நடாலுக்கு இந்த ஆண்டு மிகவும் ராசியானதாக அமைந்தது.

ஸ்பெயின் ரெனிஸ் வீரர் ரபேல் நடால்; நடப்பு 2010 ஆம் ஆண்டை நம்பர் - 2 வீரராக தொடங்கினார். அப்போது அவர் 6 கிராண்ட்ஸ்லாம் பட்டம் மட்டுமே கைப்பற்றி இருந் தார். ஆஸ்திரேலியன் ஓபன் கிராண்ட்ஸ்லாம் தொடரின் காலிறுதியின் போது, முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாகப் பாதியில் விலகினார். காயம் குணமடைந்த நிலையில் மீண்டும் களமிறங்கிய நடால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி எழுச்சி கண்டார். இவர் பி.என்.பி., பரிபாஸ் ஓபன் ரெனிஸ் தொடரின் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் தோல்வியடைந்தார். இருப்பினும் இரட்டையர் இறுதியில் சம்பியன் பட்டம் வென்றார். பின் மொனாகோவில் நடந்த மாஸ்டர்ஸ் ரெனிஸ், இத்தாலி ஓபன், மட்ரிட் ஓபன், ஜப்பான் ஓபன் உள்ளிட்ட தொடர்களில் சம்பியன் பட்டம் வென்றார்.

கிராண்ட்ஸ்லாம் அரங்கில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால், பிரெஞ்சு ஓபன் தொடரில் 5 ஆவது முறையாக (2005-08, 2010) சம்பியன் பட்டம் வென்றார். அதன்பின் நடந்த விம்பிள்டன் தொடரில் 2 ஆவது முறையாக (2008, 10) சம்பியன் கோப்பையை தட்டிச் சென்றார். நீண்ட நாட்களாக யு.எஸ்., ஓபன் கிராண்ட்ஸ்லாம் தொடரில் சம்பியன் பட்டம் கைப்பற்ற முடியாமல் தவித்து வந்த நடால், இம்முறை தனது முதல் பட்டம் வென்று சாதித்தார். இதன்மூலம் தனது மொத்த கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை 9 ஆக உயர்த்தினார். தவிர, பிரெஞ்சு ஓபன் ரெனிஸ் தொடரின் அரையிறுதிக்கு சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் முன்னேறவில்லை. இதனால் இத்தொடரில் நடால் சம்பியன் பட்டம் வெல்லும் பட்சத்தில் முதலிடத்தை அடைய வாய்ப்பு இருந்தது. அதிர்ஷ்டம் கைகொடுக்க இறுதியில் நடால், ஸ்வீடன் வீரர் ராபன் சோடர்லிங்கை வீழ்த்தி, முதலிடத்தைக் கைப்பற்றினார்.

சமீபத்தில் லண்டனில் நடந்த ஏ.டி.பி., ரெனிஸ் தொடரின் இறுதியில் நடால், சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரரிடம் தோல்வியடைந்தார். இருப்பினும் இவரது முதல் இடத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. இதன்மூலம் நடால், இந்த ஆண்டை முதல்தர வீரராக முடிக்கிறார்.

# விளம்பரத்துக்கு 26 கோடி ரூபா: சச்சினை முந்தினார் டோனி!

இந்திய அணியின் டோனி யின் விளம்பர மவுசு நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் இருக் கின்றது. பிரபல நிறுவனம் ஒன்றின் விளம்பரத்தில் நடிக்க, சுமார் 26 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் இந்திய விளை யாட்டு வீரர்களின் அதிகபட்ச தொகைக்கு ஒப்பந்தம் செய்யப் பட்டவர் என்ற சாதனையை டோனி படைத்துள்ளார்.

கப்டன், துடுப்பாட்ட வீரர், விக்கெட் காப்பாளர் என மூன்று பணிகளிலும் பட்டையை கிளப் பும் டோனிக்கு ரசிகர்கள் மத்தி யில் அமோக வரவேற்பு உள்ளது. இதனால், விளம்பர நிறுவனங் கள் இவரை ஒப்பந்தம் செய் வதற்கு மொய்க்கின்றன. சமீபத் தில் இவரை, 'ரிதி ஸ்போர்ட்ஸ்' என்ற நிறுவனம் மூன்று ஆண்டு களுக்கு சுமார் 210 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்தது. இதையடுத்து சச்சினுக்கு அந் நிறுவனம் வழங்கிவரும் 180 கோடிரூபாவை டோனி முந்தினார்.

தற்போது ஒரு பொருளுக்கு விளம்பரப் படத்தில் தோன்ற வும் அதிகபட்ச தொகைக்கு டோனி ஒப்பந்தம் செய்யப்பட் டுள்ளார். விஜய் மல்லையாவின் யு.பி.குரூப் நிறுவனம் 3 ஆண்டு களுக்கு 26 கோடி ரூபாவுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது. அதா வது ஆண்டுக்கு 8 கோடி ரூபா வுக்கும் அதிகமாக டோனி பெற வுள்ளார். இதற்கு முன் 'ரீபோக்' நிறுவனம் இவரை ஆண்டுக்கு, 6 கோடி ரூபாய் கொடுத்து ஒப் பந்தம் செய்திருந்தது. சச்சின் ஒரு பொருளுக்குமட்டாக தோன்ற 5 கோடி ரூபாய் மட்டுமே சம் பளமாகப் பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# ஆண்டின் சிறந்த வீராங்கனை

இந்த ஆண்டின் சிறந்த டென்னிஸ் வீராங்கனையாக பெல்ஜியத்தின் கிம் கிளிஸ்டர்ஸை, உலக மகளிர் டென்னிஸ் கூட்டமைப்பு தெரிவு செய்துள்ளது.

2005ஆம் ஆண்டு சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்ட கிம் கிளிஸ்டர்ஸ், அதன் பின்னர் ஓய்வு பெற்றிருந்தார். எனினும், கடந்த ஆண்டு மீண்டும் சர்வ தேச டென்னிஸ் உலகிற்குள் புகுந்தார். தற்போது சிறப்பாக ஆடி பல போட்டிகளில் வெற்றிபெற்றமையாலேயே கிம் கிளிஸ்டர்ஸ் ஆண்டின் சிறந்த வீராங்கனையாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



மற்றொரு பெல்ஜியம் வீராங்கனை யும், ஓய்விலிருந்து மீண்டும் களம் புகுந்தவருமான ஜஸ்டின் ஹெனின் ஹார்டீ னுக்கு மீண்டுவந்த சிறந்த வீராங் கனை விருது வழங்கப்பட்டது.

செக்.குடியரசு வீராங்கனையான பெட்ரா கிவிடோவா சிறந்த புதிய வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த இரட்டையர் வீராங்கனைகள் விருது, ஆர்ஜெரீனாவின் கிசேலா டுல்கோ - இத்தாலியின் பிளாவியா பென்னட்டா ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## தலைமை வகிக்க நான் தயாராகவில்லை - ஷாகிப்

பங்களாதேஷ் அணிக்குத் தலைமை தாங்குவதற்குத் தான் தயாராகவில்லை என்று அதன் தற்போதைய தலைவர் ஷாகிப் அல் ஹசன் தெரிவித்துள்ளார். சிம் பாப்வேயுடனான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் தோல்வி யடைந்ததைத் தொடர்ந்து தலை மைப் பதவியில் தான் திருப்தி யாக இல்லை என்பதை அவர் வெளிப்படுத்தினார். "தலைவராக அணியில் எனது வகிபாகம் திருப்தி யளிப்பதாகஇல்லை. எல்லாவற்றை யும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியா இடம்பிடிக்க பிரான்ஸ் ஆதரவளிக்கும்

## பெங்களூரில் வைத்து அந்நாட்டு ஜனாதிபதி தெரிவிப்பு

பெங்களூர்,டிசெ.6

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர இடம்பெற பிரான்ஸ் முழு ஆதரவு தெரிவிக்கிறது என அந்நாட்டு ஜனாதிபதி நிகோலஸ் சர்கோஸி தெரிவித்தார்.

இந்தியாவில் நான்கு நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோஸி, சனிக்கிழமை காலை பெங்களூர் வந்தார். அவருடன் அவரது மனைவி கார்லா புரூனி மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட குழுவினர் அவருடன் வந்தனர். இந்திய விண்வெளி ஆய்வுக் கழக (இஸ்ரோ) வளா கத்தைச் சுற்றிப்பார்த்த பின்னர், இரு நாடுகளும் கூட்டாகச் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ள விண்வெளி திட்டங்கள் குறித்து விஞ்ஞானிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு -

பிரான்ஸ் மற்றும் இந்தியா இரு நாடுகளும் சிறந்த நட்பு நாடுகளாக உள்ளன. மும்பைத் தீவிரவாதத் தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்தியாவின் மீது நடந்த தாக்குதல் ஜனநாயகத்தின் மீதான தாக்குதலாகும். எனவே, எல்லா ஜனநாயக நாடுகளும் இந்தியாவின் பக்கம் இருக்கின்றன. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து தொடுக்கப்படும் தீவிரவாதத் தாக்குதல்கள், உலகின் ஸ்திரத் தன்மையை அச்சுறுத்தி வருகின்றன. தாலிபான்களுக்கு எதிரான போரிலிருந்து பின்வாங்கும் பேச்சுக்கே இடமில்லை. தாலிபான்கள் மீண்டும் தலையெடுக்க விடக்கூடாது.

ஆப்கானிஸ்தானில் உள்நாட்டு சண்டை அதன் உச்சத்தை அடைந்தால், அதனால் யாருக்கும் பலனேதுமில்லை. இதில் வென்றே தீர வேண்டும்.

பிரேஸில், ஜேர்மனி, ஜப்பான், சில ஆபிரிக்க மற்றும் அரேபிய நாடுகளுடன் இந்தியாவும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இடம்பெற வேண்டும். இதற்கு பிரான்ஸ் ஆதரவளிக்கும்.

இந்தியாவின் வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றின் மூலம் அமைதியை நிலைநாட்ட பிரதமர் மன்மோகன் சிங் ஆர்வமாக இருக்கிறார். அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையில் மன்மோகன் சிங்கின் கருத்து சரியானதாக இருக்கிறது. இந்தியாவின் வளர்ச்சி மகத்தானது. உலக அளவில் இந்தியாவின் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும். உலகின் பிரபல நாணயங்களின் வரிசையில் இந்தியாவின் நாணயமும் இடம்பெறும் என்ற நம்பிக்கையுள்ளது.

இந்தியாவின் நட்பு நாடாக பிரான்ஸ் உள்ளது. சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத வகையில் அணு மின்சாரம் தயாரிக்கும் இந்தியாவின் முயற்சிக்கு பிரான்ஸ் ஆதரவு அளிக்கும். இந்தியாவின் அணு மின்சாரத் திட்டங்களை பிரான்ஸ் ஆதரிக்கும்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# தமிழகத்தில் தொடர்கிறது கன மழை; மரண எண்ணிக்கை 163 ஆக உயர்வு

தமிழகத்தில் கனமழை தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதேவேளை, மாநிலத்தில் மழைக்கு பலியானோரின் எண்ணிக்கை 163 ஆக உயர்ந்துள்ளது.

வடகிழக்குப் பருவமழை தமிழகத்தில் தீவிரம் அடைந்துள்ளது. இதனால், கடலோர மற்றும் தென் மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. நேற்றுமுன்தினம் சனிக்கிழமையும் மழையின்அளவு அதிகமாக இருந்தது. காலை 8.30 மணி நிலைவரப்படி, திருவாரூரில் 140 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. அதற்கு அடுத்தப்படியாக வேதாரண்யத்தில் 130 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு, திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஆகிய ஊர்களில் 90 மி.மீ., நாகப்பட்டினம் 80 மி.மீ., திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் 70 மி.மீ., கடலூர், கொடவாசல், மன்னார்குடியில் 60 மி.மீ என மழை அளவு மழை பதிவாகியுள்ளது.

இதனிடையே, இலங்கையின் தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலை தீவிரமடைந்துள்ளதால் தமிழகம், புதுவையில் கனமழை தொடரும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை உருவான இந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையானது, இப்போது வலுப்பெற்று காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாறியுள்ளது என்றும், இதன் காரணமாக மழை மேலும் தீவிரம் அடைய வாய்ப்பு இருக்கிறது எனவும் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதனிடையே, தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்பு உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை அதே இடத்தில் நிலை கொண்டுள்ளது. இந்த இரண்டு காற்றழுத்தத் தாழ்வு நிலைகளால் தமிழகத்தின் கடலோர மற்றும் தென் மாவட்டங்களில் கனமழை தொடர வாய்ப்பு இருக்கிறது என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மழை காரணமாக வீடுகள் இடிந்தன, வெள்ளத்தில் வீடுகள் அடித்துச் செல்லப்படுதல் போன்ற காரணங்களால் உயிரிழப்போரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வடகிழக்குப் பருவ மழை தொடங்கிய கடந்த ஒக்ரோபர் முதல் இதுவரை மழைக்கு பலியானோரின் எண்ணிக்கை 163 ஆக உள்ளது.

அதில், 76 பேர் ஆண்கள், 47 பேர் பெண்கள், 40 குழந்தைகள் ஆவர். ஆயிரத்து 233 கால்நடைகள் இறந்துள்ளன. 23 ஆயிரத்து 812 குடிசைகள் சேதம் அடைந்துள்ளன. அவற்றி, 3 ஆயிரத்து 796 முழுமையாகவும், 20 ஆயிரத்து 16 குடிசைகள் பாதி அளவும் சேதமடைந்துள்ளன என வருவாய்த்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள தங்களது பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன என அங்குள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர். ஐந்து லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்ட பயிர்கள் சேதமடைந்து இருக்கலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

## மாடியிலிருந்து விழுந்து இலங்கை அகதி சாவு

தமிழகத்தில் மாடியிலிருந்து தவறி விழுந்த ஈழ அகதி ஒருவர் நேற்றுமுன்தினம் மரணமானார். வேலூர் அடுத்த விரிஞ்சிபுரம் மேல்மொணவூர் அகதிகள் முகாமைச் சேர்ந்தவர் பொன்னையன் தவராஜா (வயது - 45). இவருக்கு மனைவியும், இரு குழந்தைகளும் உள்ளனர்.

இவர் அண்மையில் முகாமில் இருந்தபோது, மாடியில் இருந்து தவறி விழுந்தார். வேலூர் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இறந்தார்.

# சபை முடக்கம் தொடர்பாக விவாதிக்க எதிர்க்கட்சிகளுக்குப் பிரணாப் அழைப்பு

கொல்கத்தா, டிச. 06



நாடாளுமன்றத்தைச் சுமுகமாக நடத்த எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் - என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கோரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சிகள் அவைக்கு வந்தால் இது தொடர்பாக விரிவாக விவாதிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறியவை வருமாறு:

எதிர்க்கட்சியினரை மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றுதான், அவையின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடாதீர்கள். உங்களது தேவை என்ன என்பதை அவையில் தெரிவியுங்கள். இதுதொடர்பாக விரிவாக விவாதிக்கவும் நாம் தயார்.

2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பாக தலைமைத் தணிக்கை அதிகாரி (சி.ஏ.ஜி.) அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டவுடனேயே இந்த விவகாரம் நாடாளுமன்றத்தின் ஆலோசனைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. மாநிலங்களவை, மக்களவை உறுப்பினர்களைக் கொண்ட நிரந்தரமான குழுவாகும். இதுவே கூட்டு விசாரணைக் குழு (ஜே.பி.சி.) போன்றதுதான். இந்நிலையில் மற்றொரு ஜேபிசி எதற்குத் தேவை?

சி.ஏ.ஜி. அறிக்கையை ஆய்வு செய்ய வேண்டியது அரசமைப்பின் விதிப்படி கட்டாயமாகும். இதை பி.ஏ.சி. மேற்கொள்ளும். இதுதவிர, பக்கத் துணையாக அனைத்து விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாடாளுமன்றம் முடக்கப்பட்டுள்ளதை சரி செய்ய அரசு தரப்பில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேசினேன்.

2-ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பாக அனைத்து கட்ட விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே எதிர்க்கட்சியினர் அவை நடவடிக்கைகளை நடத்த ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். கடைசிக் கட்ட முயற்சியாக எதிர்க்கட்சிகளுக்கு மிகுந்த தாழ்மையுடன் அழைப்பு விடுக்கிறேன்.

- இப்படி அவர் கூறினார்.



கோவையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தொடங்கிய சர்வதேச ஆடைக் கண்காட்சியில் பங்கேற்க வந்த இலங்கை எம்.பி. காசிம் பைசலுக்கு எதிராக ம.தி.மு.க. மற்றும் பெரியார் திராவிடர் கழகத்தினர் உள்ளிட்ட [illegible] உணர்வாளர்கள் போராட்டம் நடத்தியபோது.

# இலங்கை அகதிகள் 220 பேருக்கு தமிழகத்தில் பிறப்புரிமைச் சான்று

விருதுநகரில் இலங்கைத் தமிழ் அகதிகள் 220 பேருக்கு அந்நாட்டுத் துணைத் தூதரக அதிகாரி வடிவேல் கிருஷ்ண மூர்த்தி தலைமையில் இரண்டாம் நிலைத் தூதரக அதிகாரி பத்மநாபன், இரண்டாம் நிலைச் செயலாளர் கோகுலரங்கன் ஆகியோர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிறப்புரிமைச் சான்றிதழ்களை வழங்கினர்.

இதுகுறித்து விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இலங்கைத் துணைத் தூதரக அதிகாரி வடிவேல் கிருஷ்ண மூர்த்தி செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

தமிழகத்தில் இலங்கைத் தமிழர்கள் 120 முகாம்களில் அகதிகளாகத் தங்கி இருக்கின்றனர். விருதுநகர் மாவட்டத்தில் வெம்பக்கோட்டை, குல்லூர் சந்தை, மல்லாங்கிணறு, மொட்டமலை உட்பட 7 இடங்களில் அகதி முகாம்கள் உள்ளன. அவற்றில் 19 ஆயிரத்து 900 குடும்பங்களைச் சேர்ந்த 70 ஆயிரத்து 56 பேர் தங்கியிருக்கின்றனர்.

1985 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தமிழகத்தில் உள்ள அகதி முகாம்களில் பிறந்த குழந்தைகளுக்கு பிறப்புரிமையைப் பதிவு செய்யும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. பிறந்த குழந்தைகளுக்கு பிறப்புரிமைச் சான்றிதழ்களை பெற சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு நேரில் வந்து பதிவுசெய்து தான் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இச்சான்றிதழ்களைப் பெறுவதற்கு இந்திய ரூபா 2,770 செலுத்த வேண்டும். அகதிகளாகவும், வறுமையில் இருப்பதாலும் அவர்களால் சென்னை வந்து செல்ல சிரமம் ஏற்படும். அதைத் தவிர்க்கும் வகையில், இலங்கைத் துணை தூதரக அதிகாரிகள் நடமாடும் சேவை மூலம் அகதிகள் முகாமிற்கே நேரில் வந்து இலவசமாக இச்சான்றிதழ்களை வழங்கி வருகின்றனர்.

இச்சான்றிதழ்களைப் பெறுவதற்கு தமிழகத்தில் உள்ள வைத்தியசாலை உள்ளிட்ட அரச உள்ளாட்சி அலுவலகங்களில் பெற்ற சான்றிதழ்கள், பெற்றோருக்கான குடியுரிமைச் சான்றுகள் அவசியம் வைத்திருக்க வேண்டும். அதைத் தூதரக அதிகாரிகளிடம் கண்டிப்பாகப் பதிவு செய்ய வேண்டும்.- என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடநூல்களில் தமிழர் வரலாறு திரிபுபடுத்தப்பட்டு இருட்டடிப்பு

## திருத்தப்படவேண்டும் என்கிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

கொழும்பு,டிசெ.6

தமிழ்ப் பாடநூல்களில் தமிழர்களின் பாரம்பரிய வரலாறுகள் திரிபுபடுத்தப்பட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. இவை திருத்தப்பட வேண்டும் - என்று வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன் நாடாளுமன்றத்தில் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

கல்வி, உயர்கல்வி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு:

தமிழ்ப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பாடநூல்களில் தமிழர்களின் வரலாறு திரிபுபடுத்தப்பட்டுள்ளன. இதனால் எதிர்கால மாணவர்கள் தமது கடந்தகால பாரம்பரிய வரலாறுகளையும், தமிழ் மன்னர்களின் பெயர்களையும் கூட தெரிந்துகொள்ள முடியாமல் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. இது திருத்தப்பட வேண்டும். உண்மையான வரலாறு உள்ளபடி வெளியிடப்படவேண்டும்.

யுத்தம் முடிந்து 19 மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால், வன்னிப் பிரதேசத்தில் மட்டுமல்ல, வட பகுதியில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் இன்னும் இராணுவத்தினரிடமே உள்ளன.

குறிப்பாக ஓமந்தை தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் என்பனவற்றில் கல்வி பயிலும் மாணவர்களும், ஆசிரியர்களும் கட்டாந்தரைகளிலும், மர நிழல்களிலும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பொழுது தொடர்ச்சியாக மழை பெய்கிறது. கட்டடங்கள் அற்ற, கூரைகள் அற்ற ஒட்டுக் குடிசைகளில் பெரிதும் சிரமங்கள் அனுபவிக்கின்றனர். இப்பாடசாலைகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

இறுதி யுத்தத்தின்போது 1,700 மாணவர்கள் தமது பெற்றோர்களை இழந்து அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். தாய் தந்தையற்ற இம்மாணவர்களை அரசு பொறுப்பேற்கவேண்டும்.

அவர்களின் அன்றாட தேவைகளுக்கும், கல்வி நடவடிக்கைகளுக்கும் அரசு உதவவேண்டும். மாதாந்தம் ஒரு தொகையை இம்மாணவர்களுக்கு அரசு வழங்க வேண்டும்.

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி செயல் இழந்துள்ளது. முகாமாக மாற்றப்பட்டுள்ளது. அங்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கு கடந்த பல மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை.

அவர்களுக்கான சம்பளத்தை நிலுவையுடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது பிரதேசத்தில் காலம் காலமாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு அரசு நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

(சி)

# அமைச்சர் ரிஷாத்துக்குப் பதிலாக பைசல் காசிம் எம்.பி. கண்காட்சியைத் திறக்க கோவை சென்றது எப்படி?

## முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்களில் கேள்வி

கொழும்பு,டிசெ.6

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரிஷாத் பதியுதீனுக்குப் பதிலாக தமிழக, கோவை கொடிசியா வளாகத்தில் புடைவைக் கண்காட்சியைத் திறந்துவைக்க முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான பைசல் காசிம் சென்றது எப்படி என முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்களில் கேள்வி எழுந்துள்ளது.

கோவை, கொடிகிலா கண்காட்சியைத் திறந்துவைக்க கடந்த 4ஆம் திகதி முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. பைசல் காசிம் அங்கு சென்றபோது இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக அவர் பின்வாசல் வழியாகத் தப்பிச் சென்றதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டதை அடுத்தே இக் கேள்வி எழுந்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமும், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் அரசியல் ரீதியாக எதிரும் புதிருமாக செயற்பட்டுவருவது தெரிந்ததே.

பகிரங்க மேடைகளில் கூட இவர்கள் ஒருவருக்கொருவர் கடுமையாக விமர்சித்துக்கொள்வது வழக்கம். இந்த நிலையில், அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்குப் பதிலாக பைசல் காசிம் எம்.பி. கண்காட்சியை திறந்துவைக்கச் சென்றது எப்படி என்றும் ஒருசாரார் கேள்வி எழுப்புகின்றனர்.

கோவை கொடிசியாவில் புடைவைக் கண்காட்சியைத் திறந்துவைக்க அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்து மறைந்த நூர்தீன் மசூரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கோவை செல்லவில்லை.

ஆனால், தமது கட்சியைச் சேர்ந்த சக உறுப்பினரின் இறுதிக்கிரியையும் தவிர்த்து பைசல் காசிம் எம்.பி. கோவை சென்றதன் மர்மம் என்ன என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை, பைசல் காசிம் எம்.பி. இந்தியா சென்றமை குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைக்கு எதுவும் தெரியாது என செயலாளர் ஹசன் அலி எம்.பி. ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

(சி)

# குடாநாட்டு வீதிகள் மோசமாகச் சேதம் உடனடியாகத் திருத்துமாறு அறிவுறுத்தல்

யாழ்.மாவட்ட வீதிகள் தொடர்பில் அவசர பாதுகாப்பு முன்னேற்பாடு நடவடிக்கைகளை எடுக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளருக்கு யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பணித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக பல வீதிகள் சேதமடைந்துள்ளன. இவற்றில் பெரும்பான்மையான வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானவையே.

சாவகச்சேரி மற்றும் பண்ணையிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வீதிகள் மிக மோசமாக சேதமடைந்திருப்பதாக கிடைத்த முறைப்பாட்டையடுத்து அரசாங்க அதிபர் நேரடியாகச் சென்று அந்த வீதிகளைப் பார்வையிட்ட பின்னர் அந்த வீதிகளை உடனடியாகத் திருத்தி அமைக்குமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குப் பணித்துள்ளார்.

இதே வேளை மண்கும்பான், அல்லைப்பிட்டி, வேலணை, நெடுந்தீவில் பல வீதிகள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் சண்டிலிப்பாய் பால வேலைத் திருத்தம் காரணமாக சங்குவேலி ஊடாக மேற்கொள்ளப்பட்ட தற்காலிக பாதையும் மழைகாரணமாக சேதமடைந்திருப்தால் உடனடியாக சண்டிலிப்பாய் பாலத்தை அமைக்கும் பொருட்டு அதற்கு மாற்றான இரும்புப்பாலத்தை பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபடுமாறு பணிக்கப்பட்டுள்ளது. இதற்கு உதவியாக இராணுவத்தினரின் பங்களிப்பு வழங்கப்படுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-15)

# மிருசுவில் இராமாவில் முகாம் மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம்

## இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தால்

யாழ்ப்பாணம்.டிசெ.6

மிருசுவில் இராமாவில் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 341 குடும்பங்களுக்குத் தேவையான அத்தியவசியப் பொருள்களை இந்து அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று முன்தினம் நேரில் சென்று வழங்கியது.

சத்துணவுகள், உலர்உணவுகள், படுக்கை விரிப்புக்கள் போர்வைகள் (பெட்சீற்) ஆகியனவே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன . அந்த முகாமில் உள்ள 1,156 அங்கத்தவர்களைக் கொண்ட 341 குடும்பங்களுக்கும் இவை பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட இந்து அமைப்புக்களின் ஒன்றியத் தலைவரும் யாழ். வணிகர் சங்கத் தலைவருமான ஆர்.ஜெயசேகரம், ஒன்றியத்தின் உபதலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம். செயலாளர் சு. பரமநாதன், பொருளாளர் சி.வி.கே. சிவஞானம் உள்ளிட்ட அதன் பிரதிநிதிகளும், தென்மராட்சி பிரதேச செயலர், செயலகத் திட்டமிடல் உத்தியோகத்தர், கிராம அலுவலர் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தற்போதுள்ள மழைக்கால நிலை காரணமாக முகாமிலுள்ள மக்கள் சமைப்பதற்கு அதிக சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அதற்காக மண்ணெண்ணெய் வழங்கி உதவுமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் மற்றும் கிராம அலுலர்கள் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக இந்து அமைப்புக்களின் ஒன்றியம் வழங்குவதற்கும் சம்மதித்துள்ளது.

(ஒ-14)

# அனலைதீவிலிருந்து பயணிகளுடன் சென்ற படகு சனியன்று நடுக்கடலில் பழுதடைந்தது

யாழ்ப்பாணம்,டிசெ.6

அனலைதீவில் இருந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு ஊர்காவற்றுறைக்குப் புறப்பட்ட பயணிகள் படகு எழுவைதீவு முனைப் பகுதியில் பழுதடைந்ததால் பயணிகள் பெரும் அல்லற்பட்டனர்.

பழுதடைந்த படகு நடுக்கடலில் நங்கூரம் இட்டு நிறுத்தி வைக்கப்பட்டது. படகு ஊழியர்கள் அனலைதீவைச் சேர்ந்த ஏனையபடகு உரிமையாளர்களுக்கு தொலைபேசி மூலம் விடயத்தைத் தெரிவித்து உதவி கோரிய போதும் படகு உரிமையாளர்கள் ஆள்கள் இல்லை, டீசல் இல்லை என நீண்ட நேரமாக பதிலளித்த வண்ணம் இருந்தனர்.

பழுதடைந்த படகில் இருந்து தொடர்ந்தும் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டதையடுத்து 5.30 மணியளவில் அனலைதீவில் இருந்து ஒருபடகு எழுவைதீவு முனைப் பகுதிக்கு வந்து பழுதடைந்த படகைக் கட்டி இழுத்து மாலை 6.30 மணிக்கு அனலைதீவுக் கரையில் சேர்த்தது.

மேற்படி பழுதடைந்த படகே பி.பகல் 4.30 மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து அனலைதீவுக்குச் செல்லும்பயணிகளை ஏற்றிச்செல்ல வேண்டியதர்கும்.

ஊர்காவற்றுறைக்கு வந்து சேர வேண்டிய படகு வராமையால் நீண்ட நேரம் துறைமுகத்தில் தங்கி நின்ற பயணிகள் எழுவைத்தீவுக்கான படகை வாடகைக்கு அமர்த்தி இரவு 7 மணியளவில் அனலை தீவுக்கு வந்து சேர்ந்தார்கள்.

(ஐ-7)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இரட்டைச் சதமடித்தார் பீற்றர்சன்

# அடிலெயிட் டெஸ்டில் இங்கிலாந்து ஆதிக்கம்

அடிலெய்ட், டிசெ.06

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் இரண்டாவது சமரில் இங்கிலாந்து அணி ஆதிக்கம் செலுத்துகிறது.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகிறது.



முன்னர் நடந்த முதலாவது போட்டி சமனிலையில் முடிந்தது.

இந்நிலையில் இரண்டாவது போட்டி கடந்த வெள்ளியன்று ஆரம்பமாகியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதல் நாளிலேயே 245 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது.

பின்னர் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, ஆரம்பத்தில் அதிர்ச்சியை எதிர்கொண்டாலும் பின்னர் வந்த வீரர்களின் சிறப்பான ஆட்டம் காரணமாக இந்த டெஸ்டில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது.

குக் (148) சதமடிக்க, பீற்றர்சன் இரட்டைச் சதமடித்து அசத்தினார்.

இறுதியில் நேற்று ஆட்ட நேரம் முடியும்போது இங்கிலாந்து அணி, 4 விக்கெட்டுகளை மாத்திரமே இழந்து 551 ஓட்டங்களைக் குவித்தது.

பீற்றர்சன் (213), பெல் (41) ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

இன்று ஆட்டத்தின் நான்காவது நாள் என்பதாலும், 306 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா பின்தங்கியுள்ளமையாலும், இங்கிலாந்து அணிக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகிறது.

எனினும், ஆஸ்திரேலிய அணி நின்று நிலைத்து ஆடினால் ஆட்டம் சமனிலையில் முடியவும் கூடும். அதேவேளை, இங்கிலாந்து அணி தோற்பதற்கான சந்தர்ப்பம் சிறிதேனும் இல்லை என்பது தெட்டத் தெளிவு.

## ஐ.பி.எல். தொடரில் கொச்சி விளையாடும்

கொச்சி அணியின் பங்குதாரர்கள் குறித்த பட்டியலை இந்தியக் கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டதையடுத்து, ஐ.பி.எல். தொடரில் கொச்சி அணி பங்குபற்றுவது உறுதியாகியுள்ளது.

அடுத்த ஐ.பி.எல். தொடருக்காகப் புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்த கொச்சி அணியின் பங்குதாரர்கள் குறித்த சர்ச்சை இருந்து வந்தது. இதனால், அந்த அணியின் பங்குதாரர்கள் குறித்து விளக்கம் தரும்படி இந்திய கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டது.

இந்நிலையில், நீண்ட இழுபறிகளுக்கு மத்தியில் கொச்சி அணியினர், பங்குதாரர்கள் குறித்த பட்டியலை வழங்கியது. கொச்சி அணியினர் வழங்கிய பட்டியலைப் பரிசோதித்த இந்தியக் கிரிக்கெட் சபை, அதனை ஏற்றுக்கொண்டது.

# சமநிலையில் முடிந்தது இலங்கை டெஸ்ட் தொடர்



கொழும்பு, டிசெ.06

மேற்கிந்தியத்தீவுகள் - இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவது போட்டியும் சமனிலையில் முடிந்தமையால் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் சமனிலையை எட்டியது.

மேற்கிந்தியத்தீவுகள் - இலங்கை அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் இலங்கையில் நடைபெற்றுவந்தது.

இதில் முன்னர் நடந்த இரண்டு போட்டிகளும் சமனிலையில் முடிந்தன.

இந்நிலையில், மூன்றாவது போட்டி கடந்த முதலாம் திகதி பள்ளேகல மைதானத்தில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, நான்காம் நாளான நேற்றுமுன்தினம், 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 303 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

கடைசி நாளான நேற்றைய ஆட்டம் முழுமையாக நிறுத்தப்பட்டமையால், ஆட்டம் சமனிலையை எட்டியது.

இதனால், 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரும் சமனிலையில் முடிந்துள்ளது.

## டோனி கவர்ச்சியானவர் டெண்டுல்கர் சிறந்தவர்

### பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி கருத்து



புதுடில்லி, டிசெ.06

"உலகின் கவர்ச்சியான கிரிக்கெட் வீரராக, இந்திய அணித்தலைவர் டோனி விளங்குகிறார். அதேவேளை, சிறந்த வீரராக சச்சின் டெண்டுல்கார் ஜொலிக்கிறார்.

- இவ்வாறு பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி யான முஷாரப் வர்ணித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமறு:-

உலகின் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர் இந்தியாவின் சச்சின். அதேவேளை, உலகின் கவர்ச்சிகரமான மற்றும் உற்சாகமான கிரிக்கெட் வீரராக டோனி விளங்குகிறார். ஒரு முறை அவரது நீளமான தலைமுடி குறித்து அவரைப் பாராட்டினேன். தற்போது அவர் தலைமுடியை வெட்டியுள்ளார். ஆனால், அதைப் பார்ப்பதற்கும் கவர்ச்சியாகவே உள்ளார்.

தற்போது இந்தியக் கிரிக்கெட்டின் வளர்ச்சி ஆச்சரியமளிக்கும் வகையில் உள்ளது. அதேவேளை, பாகிஸ்தான் கிரிக்கெட்டின் நிலைமை, மனவேதனை அளிப்பதாகவுள்ளது.

ஒவ்வொரு நாளும் புதுப்புதுப் பிரச்சினைகள், பாகிஸ்தான் கிரிக்கெட்டை ஆட்டிப் படைத்து வருகின்றன. இதிலிருந்து விரைவில் மீள வேண்டும்.

- இவ்வாறு முஷாரப் தெரிவித்தார்.

## இந்திய - நியூஸிலாந்து ஆட்டத்தின் சிறு துளிகள்

*இந்த ஆட்டத்தில் 126 ஓட்டங்களை விளாசிய இந்திய அணித்தலைவரான கௌதம் கம்பீர் அடுத்தடுத்து இரண்டு சதங்களை அடித்த இந்திய வீரர்களின் வரிசையில் 8ஆவது இடத்தைப் பிடித்தார். முன்னதாக ஜெய்ப்பூரில் நடந்த 2ஆவது ஆட்டத்திலும் சதம் (138 ஓட்டங்கள்) அடித்திருந்தார்.

*ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து மோசமான நிலையைச் சந்தித்துள்ளது. இந்தப் போட்டியில் தோற்றதன்மூலம், அந்த அணி ஒரு நாள் போட்டியில் தொடர்ந்து 9 போட்டிகளில் தோல்வியைக் கண்டுள்ளது.

ஏற்கனவே கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கையில் நடந்த முத்தரப்புத் தொடரில் 2 ஆட்டங்களிலும் (இலங்கை மற்றும் இந்தியாவுக்கு எதிராக), பங்களாதேஷ் அணிக்கு எதிரான 4 ஆட்டங்களிலும் தோற்றிருந்த நியூஸிலாந்து அணி, தற்போது இந்தியாவுக்கு எதிராகவும் தொடர்ந்து 3 தோல்விகளைச் சந்தித்துள்ளது.

## இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்: தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

ஜோகனஸ்பேர்க், டிசெ.06

இந்தியக் கிரிக்கெட் அணி விரைவில் தென்னாபிரிக்காவிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இந்தியா - தென்னாபிரிக்க அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 16ஆம் திகதி செஞ்சுரியனில் தொடங்குகிறது.

இந்தப் போட்டிக்கான 15 பேர் கொண்ட தென்னாபிரிக்க அணி தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க அணி விவரம் வருமாறு:-

ஸ்மித் (அணித்தலைவர்), ஹசிம் அம்லா, ஜோகன் போத்தா, மார்க் பௌச்சர், டிவில்லியர்ஸ், டுமினி, போல் ஹரிஸ், மக்லரன், கலிஸ், மோர்னே [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மரண அறிவித்தல்

### பொன்னையா பாலசிங்கம்

(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், அச்சுவேலி பல நோ.கூ.சங்கம்)



குறுக்குவீதி, நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் யூனியன் வளவு பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாலசிங்கம் நேற்று (05.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா (கைதடி)- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-ரோகினியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் கமலநாயகியின் பாசமிகு கணவரும் ததீசன் (லண்டன்), கஜீதா(Demonstrator, விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவரட்ணசிங்கம் (முன்னாள் முகாமையாளர், நீர்வேலி பல நோ.கூ. சங்கம்), காலஞ்சென்ற சரஸ்வதியம்மா, தவமணிதேவி, இந்திராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்

யூனியன் வளவு,
பத்தமேனி, அச்சுவேலி.

தகவல்:
(106961) குடும்பத்தினர்.

# கொழும்பிலிருந்து தங்க பிஸ்கட் கடத்தி வந்தவர் திருச்சியில் கைது

இலங்கையில் இருந்து திருச்சிக்கு தங்க பிஸ்கட்டுகளைக் கடத்தி வந்த வரை திருச்சி விமானநிலையத்தில் வான் நுண்ணறிவுப் பிரிவுப் பொலிஸார் கைது செய்தனர்.

இலங்கையில் இருந்து திருச்சி வரும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு திருச்சி விமானநிலையம் வந்து சேர்ந்தது, பயணிகளிடம் சோதனை நடத்தப்பட்டது.

அப்போது ஒருவர் இடுப்பில் அணிந்திருந்த பட்டிக்கு நடுவே 9 தங்க பிஸ்கட்டுகளை மறைத்து வைத்து இருந்தது தெரியவந்தது. தங்க பிஸ்கட்டுகள் ஒவ்வொன்றும் 110 கிராம் எடை கொண்டவை.

அவரைக் கைது செய்து அதிகாரிகள் நடத்திய விசாரணையில், அவர் இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை எஸ்.பி.பட்டிணத்தைச் சேர்ந்த காசிம் (வயது 53) என்பது தெரியவந்தது.

இதையடுத்து அவரிடம் இருந்த தங்க பிஸ்கட்டுகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். அவற்றின் மொத்த மதிப்பு ரூபா 20 இலட்சம்.

## திறந்த பல்கலையில் கல்வி இளமாணி கற்கை

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் கல்வி இளமாணி (இயற்கை விஞ்ஞானங்கள்) பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மாணி நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டம் - 3, 4/5 ஆகியவற்றைப் பூர்த்தி செய்தவர்களும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞான மாணிப் பட்டம் பெற்றவர்களும் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்படிவங்களை நாளை மறுதினம் முதல் எதிர்வரும் 13ஆம் திகதி வரை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார் (ஒ-ஐ)

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஔடதக் கொள்கையொன்று இல்லாத காரணத்தால் பிரச்சி னைகள் நாளுக்கு நாள் உக்கிர மடைந்து வருகின்றன. 2005 ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்ஷ தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேனக பிபிலேவின் ஔடதக் கொள்கைகளை அமுல்படுத்துவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் அது இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

சுகாதாரத் துறைக்கு அதிக நிதியை ஒதுக்கி, வைத்திய சாலைகளில் இறக்கும் நோயாளர் களின் எண்ணிக்கை யைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' -இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வடமராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் இடம்பெயர்ந்து ஆலயங்களிலும் மேட்டுப் பகுதியில் உள்ள உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

வெள்ளம் காரணமாக போக்குவரத்து சபையின் பஸ் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. மாமுனை - தாளையடி கடற்கரை வீதி, தாளையடி- ஆழியவளை கடற்கரை வீதி ஆகியனவும் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ-190)

## லண்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் உணர்த்தப்பட வேண்டியது அவசியமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் கொல்லப்பட்ட பொதுமக்களையும் விட மிகக் குறைவான எண்ணிக்கையிலான பொதுமக்களே இலங்கை யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள் என்பதைச் சரியான முறையில் பிரசாரம் செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

க்ளோபல் தமிழ் போரம் அமைப்பை வலுவிழக்கச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமானது.

அடுத்த படியாக நோர்வேயை மையமாக்க கொண்டு விடுதலைப் புலிச் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் நெடியவனின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மூன்றாவதாக சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கண்காணிப்புச் செய்யக் கூடிய பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டன் பின்னர் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள புலிகள் கூடுதல் முனைப்புக் காட்டி வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஊடாக புலிகள் தமது பிரசாரங்களை முன்னெடுக்க முயற்சித்து வருகின்றனர் எனவும், வெளிவிவகார அமைச்சு தன்னார்வ தொண்டு நிறுவனங்களைக் கண்காணிப்பதற்குத் தனியான அலகொன்றை உருவாக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## பிரிட்டனில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலுப்பெறுமேயன்றி, எமது செயற்பாடுகளை எந்தவொரு சக்தியும் நசுக்க முடியாது.

பயங்கரவாதத்துக்கு முகம் கொடுத்து அதை முழுமையாக ஒழித்த உலகின் ஒரே தலைவ ரான ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவை பாதுகாத்துக் கொள் வது இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு இலங்கையரதும் பொறுப்பும், கடமையுமாகும்.

ஜனாதிபதிக்கு பிரிட்டனில் ஏற்படுத்தப்பட்ட இடையூறு நாட்டின் தலைவரான அவருக்கு மட்டுமல்லாது முழு இலங் கைக்கும் ஏற்படுத்தப்பட்ட இடையூறாகும். இது போன்ற செயற்பாடுகளால் எமது இனத்தை அழித்தொழித்து விட முடியுமா? இது போன்ற இடையூறுகள் இலங்கைச் சரித்திரத்தில் இதற்கு முன்னரும் ஏற்பட்டிருந்தது.

அதுபோன்ற சந்தர்ப்பங் களில் நாம் துணிச்சலுடன் முகம் கொடுத்தோம். இந்த நேரத்திலும் நாம் உலகத்துக்கு எமது துணிச்சலை வெளிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி நாட்டில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து, இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் உட்பட சகல இனங்களும் கௌரவத்துடன் வாழும் உரிமையை உருவாக்கியுள்ள தன் பின்னணியில் பிரிட்டனில் புலி ஆதரவாளர்கள் மேற்கொண்ட இந்த நடவடிக்கையைக் குறைத்து மதிப்பிட முடியாது.

பயங்கரவாதம் தொடர்பாக சில ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகள் மேற்கொண்டு வரும் வேறுபட்ட நடவடிக்கைகளை வெளிக்கொணரவேண்டும். - இவ்வாறு அவ் வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீவுப் பகுதிக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'நிஷா' புயலினால் பாதிக்கப்பட்ட இந்த வீதி புனரமைக்கப்பட்ட போதும் தற்பொழுது தொடர்ந்து பெய்துவரும் மழை மற்றும்கடல்கொந்தளிப்புகாரணமாக வீதி பலத்த சேதடைந்துள்ளது.

கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து அத்தகைய வாகனங் கள் இந்தப் பாதையூடாக செல்வதை தடைசெய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முடிவின் பிரகாரம் தெற்கில் இருந்து உல்லாசப் பயணி களுடன்வரும் பஸ்கள் பண்ணைச் சந்தியில் மறிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றன.

போக்கு வரத்து சபை அதிகாரிகள் நேற்று அந்தப் பகுதிக்குச் சென்று ஆராய்ந்த பின்னர் பஸ் சேவையை தற்காலிகமாக நிறுத்துவதென முடிவு செய்துள்ளனர்.

இந்தப் பாதையூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதால் தீவுப்பகுதிக்கான அத்தியவசிய சேவைகள் பாதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ-7)

## வெள்ளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

90க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள், உணவுகள் என்பவற்றை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மாவட்டக் காரியா லயங்கள் வழங்கி வருகின்றன.

ELECTRONIC REPAIRS
HOT LINE
0777425974
Analog & Digital Monitors
Inkjet / Laser / Dot matrix Printers
Power Supply
Scanners
Laptop & Mobile PC's
UPS
VCD/DVD players
Hi-fi systems
And all electronic Equipments
MICRO PC SYSTEMS
யாழ்ப்பாணம்: 218, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 0217913020
நெல்லியடி: கொடிகாமம் வீதி, நெல்லியடி. 0773039536

ஐடியல் அக்கடமி
தரம் 6 முதல் O/L, A/L வரை
கல்வியாண்டு 2011
ஆரம்பம்: 09.12.2010 வியாழன் 3.30Pm
★ ஒழுங்கும், கட்டுப்பாடும் நிறைந்த நிறுவனம்.
கணிதஆசானும் நிர்வாகியும்
V.N.பத்மநாதன்.

நல்லூர் மெடிக்கல் சென்ரர்
இலக்கம் 31, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியில் மேற்கூறிய வைத்தியநிலையம் இயங்குகிறது.
யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களினால் சிகிச்சை அளிக்கப்படும்.
பார்வையிடும் நேரம்:
காலை 6.00 - 7.30
மாலை 4.30 - 10.00
K.குமாரசாமி



நியூ பிறைற் கல்வி நிலையம்
95, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
புதிய கல்வியாண்டு -2011
தரம் 03 தொடக்கம் O/L வரை
ஆரம்பம் : இன்று (06.12.2010) திங்கள்
நேரம் : பி.ப. 3 மணி
* புதிதாக இணையும் மாணவர்கள் அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொள்ளவும்.
இயக்குநர்.

புதிய வகுப்புகள் ஆரம்பம்
அனுமதிகள் இன்று முதல்
தரம்: 4 முதல் O/L வரை
GRDE: 6,7,8,9 ENGLISH MEDIUM
யாழ் நகரின் தனித்துவ ஆசிரிய குழாம்
சயன்ஸ் அக்கடமி
அரியாலை. இரு இடங்கள் நல்லூர்.
எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே!
அமைதியான சூழலில் சீரான நேரஒழுங்கில்

SAKTHIMICRO SYSTEM
சக்திமைக்றோ சிஸ்ரம் தனது கிளையினை 06.12.2010
KKS Road Kondavil. (Upumada junction)
எனும் முகவரியில் (12.15 - 1.45pm) மகிழ்ச்சியுடன் ஆரம்பமாகின்றது.
கணனி உலகின் மிகப்பெரிய நிறுவனமான Adobe (USA) இன்
அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் ஒரே ஒரு பயிற்சி நிறுவனம்
Adobe AUTHORISED Training Centre
Master Diploma in Multimedia
Adobe SOLUTION PARTNER
இந்தியாவில் இருந்து வருகை தரும்
மல்ரிமீடியா வல்லுனர்களால் கற்பிக்கப்படுகின்றது
ஒவ்வொரு மல்ரிமீடியா அனுமதிகளுக்கும்
புத்தம் புதிய கணனி இலவசம்
Hotline 0776102609
நேரடியாக எமது கிளையில் பதிவுகள்
மேற்கொள்ளப்படுகின்றது
முடிவுத்திகதி- 12.12.2010
Head Office
Kandy Road, Chavakachcheri
0212270084
info@sakthizone.com
Jaffna Office
KKS Road, Kondavil, jaffna
0776102609
theep@sakthizone.com

A/L 2010 ? What Next?
CIMA-UK, Engineering-USA, BIT
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
SMS your name & course to 772 395 895 & Get Schol.
நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
Free : BCS-UK, IELTS / TOEFL,
CISCO-CCNA, Hardware, ICDL
Fast Track
Government Schol.
MCS
Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road, Campus Junction, Jaffna.
Closing Date 07.12.2010



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெ[illegible]வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org